www.padippakam.com

# சூத்திரம்

# FORMULA

## ஒரு சமூக - அரசியல் ஆய்வு ஏடு

இதழ் - 2 மாசித் திங்கள் 1994

உள்ளே ----------


சூத்திரன் கடிதம் 1

கொழும்பு அரசியல் நிலவரம் -- ஓர் அலசல் 9

மாத்தையாவுக்கு மரணதண்டனை - ஒரு பாடம் 19

பூவுலகப் போக்குகள் பற்றி -- ரஷ்ய நிலை 27

உங்கள் கேள்விகளுக்கான பதில்கள் 34


மனிதர்களின் தாகம்

சமாதானம் ஜனநாயகம் முன்னேற்றம்

படிப்பகம்

www.padippakam.com

# சூத்திரம்

# FORMULA

ஓர் அரசியல் - சமூக ஆய்வு ஏடு

இதழ் - 2 மாசித் திங்கள் 1994

மக்களுக்காக உழைத்து மறைந்த

எம் அன்பிற்கினிய

தோழர் . ஐயா -------

தோழர் . பெ. கிருபாகரன் -------

தோழர் . ஜோர்ஜ் . தம்பிராஜா -------

தோழர் . க. யோகசங்கரி

தோழர் . வீ. ஏ. கந்தசாமி

ஆகியோருக்கு இந்த சூத்திரம் - 2 சமர்ப்பணம்.

உங்கள் ஆதரவு --- நன்கொடை

சூத்திரம் வெளியீட்டுச் செலவு -- தபாற் செலவுகளுக்கு உதவுங்கள்

| | |
|---|---|
| ஈழத்தின் பகுதிகளில் உள்ளோருக்கு | ரூ.10.00 |
| கொழும்பில் உள்ளோருக்கு | ரூ.15.00 |
| இந்தியாவில் உள்ளோருக்கு | ரூ.10.00 |
| மேலை நாடுகளில் உள்ளோருக்கு | US $.2.00 |

படிப்பகம்

www.padippakam.com



## அன்பிற்கினிய நண்பர்களே!

## ஆற்றல் மிகு தோழர்களே!

# தொடர்ந்து போராடுவதற்கு எமது படையில் இன்னும் ஆற்றல் மிக்க எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதே !!! ஒரு விடுதலை இயக்கத்தை ஓயாது இயக்கும் உயிர் !!!

## எதிரிகளில் எத்தனை பேர் செத்தார்கள் என்ற பட்டியல் – எம்மவரில் எத்தனை பேர் பிழைத்திருக்கிறார்கள் என்பதைக் காட்டாது!!!!!

**தோழர்களே! நண்பர்களே!**

இரண்டாவது சூத்திரம் தங்கு தடையின்றி வெளிவந்துள்ளதையிட்டு என்னைப் போலவே நீங்களும் மகிழ்ச்சி கொள்வீர்கள் என நம்புகிறேன். சூத்திரம் என்ன காலஇடைவெளியில் வெளிவரும் என்ற கேள்வியை நீங்கள் எழுப்புவது நியாயமே. ஆனால் இக்கேள்விக்கு இந்தச் சூத்திரனால் திட்டவட்டமான -- உறுதியான பதிலைத் தரமுடியாதுள்ளது......

சூத்திரம் குறைந்த பட்சம் மாத இதழாகவாவது வர வேண்டும் என்பதுதான் சூத்திரனின் ஆசையும் கூட...ஆனால் வாய்ப்பு வசதிகளெல்லாம் அதற்கு ஒத்துவரவேண்டுமே.....ஆனால் ஒன்றை மட்டும் இந்தச் சூத்திரனால் நிச்சயமாகக் கூறமுடியும் --- சூத்திரம் காலாண்டு இதழாகக் கட்டாயம் வெளிவரும்.....வாய்ப்பு வசதிகள் ஏற்படும் வேளைகளில் இடையிலும் வெளிவரும்.....

ஒரு வெளியீட்டைக் கொண்டு வரும் போது குறிப்பிட்ட காலத்தைக் குறித்து, அதன்படியான உரிய காலத்தில் அவ் வெளியீட்டை வெளிக்கொணர்வது அவசியமல்லவா? என நீங்கள் உங்கள் கேள்வியில் மேலும் தொடர்வதை என்னால் புரிந்து கொள்ளமுடிகிறது. அதை நான் நிராகரிக்கவில்லை

எனினும், இப்போதைய நிலையில் இந்தச் சூத்திரனால் சொல்லக் கூடியதென்னவெனில், நிச்சயமில்லாத நிலைமைகளே யதார்த்தங்களாக இருக்கும் போது நாம் எமது நிர்ணயங்களை நிச்சயமாக நிறைவேற்றுவதற்கு முதலில் முன்னுரிமை கொடுப்போம்.

காலநிச்சயங்களை நிர்ணயிக்க முடியாத எமது நெருக்கடிகளையே எமது நிர்ணயங்களை நிறைவேற்றாமல் காலம் தள்ளிப் போடுவதற்கான காரணங்களாக்கும் எமது வழமையான போக்குகளுக்கு இந்தச் சூத்திரமும் பலியாகி விடக்கூடாது என்பதே இந்தச் சூத்திரனின் பிரதானமான அக்கறை



படிப்பகம்

www.padippakam.com



யாகும்........ அதேவேளை ஒரு கால அட்டவணையைக் குறித்தும் இந்தச் சூத்திரம் நெறிதாய்க் கொணரப்படுவதற்கான முயற்சிகளும் இங்கு புறக்கணிக்கப்படமாட்டா..... அதற்கு எல்லா வகையிலும் உங்கள் ஒத்துழைப்பு மிக மிகப் பிரதானம். மேலும்,

**என் இனிய தோழர்களே! நண்பர்களே!**

இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் மக்களின் எதிர்காலம் தொடர்பாக நாம் எவரும் 'விழுந்தாலும் மீசையில் மண் படவில்லை' என்ற போக்கில் வீர வசனங்களையோ அல்லது மழுப்பல் சொற்தொடர்களையோ பேசிக் கொண்டாலும் கூட இன்றைய யதார்த்தங்களின் நிலையில் திட்டவட்டமான ஒரு பதிலை அனைவருக்கும் புரியும் வகையில் ஒளிவு மறைவின்றி கூற முடியா நிலையில் நிலைமைகள் மிகவும் சிக்கலானவையாகவும் குழப்பங்கள் நிறைந்தவையாகவும் உள்ளன என்பதே பச்சையான உண்மையாகும்..

1970களுக்கு முன்னர் தமிழ் மக்கள் தம்மால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்றப் பிரதிகளையே நம்பியிருந்தனர்...... ஆனால் அந்தத் தலைவர்கள் சமாதான பூர்வமான வழிமுறைகளைத் தவிர வேறெதற்கும் தகுதி அற்றவர்கள் எனக் கருதப்பட்டார்கள் ...... சிங்கள இனவாதத் தலைவர்களை ஆயுதப்போராட்டம் தவிர்ந்த வேறு வழிமுறைகளால் பணிய வைக்க முடியாது என்ற கருத்தை நம்பிய தமிழ் மக்கள் ஆயுதம் எடுத்துப் போராடும் வல்லமை படைத்த தமது 'பெடியன்களை' நம்பத் தொடங்கினார்கள்.

ஆனால், கடந்த பத்தாண்டு அநுபவங்கள் தமிழ் மக்களுக்கு மிகவும் கசப்பான உணர்வுகளையே உருவாக்கியுள்ளன ......

சிறி லங்கா அரசு தமிழ் மக்கள் மீது ஒரு தீராத யுத்தத்தை நடத்துவதிலேயே தொடர்ந்தும் அக்கறை காட்டி வருகின்றது....... ஜனாதிபதி விஜயதுங்காவின் மேடைப் பேச்சுக்கள், அறிக்கைகள் அனைத்துமே சமாதானத்துக்கான சந்தர்ப்பத்தை இன்னும் பல மைல்கள் தூரத்துக்கு அப்பால் கொண்டு செல்வனவாகவே உள்ளன.

சிங்கள எதிர்க்கட்சிகளும் கூட தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என மேலோட்டமாகக் கூறுகின்றனவே தவிர, திட்டவட்டமான ஓர் அரசியற் தீர்வை முன்வைத்து அரசுக்கு நெருக்கடி கொடுப்பதற்குத் தயாராக இல்லை.

சிறி லங்கா சுதந்திரக் கட்சியானது அநுரா பண்டாரநாயக்காவையும், ஹெல உறுமயக் காரர்களில் முக்கியமான பகுதியினரையும் தனது கட்சியிலிருந்து கழட்டி விட்டது ஒரு துணிச்சல் மிக்கதும் முற்போக்கானதுமான நடவடிக்கையாகும்.

சிறிமாவோ பண்டாரநாயக்காவின் இந்த துணிச்சல் மிக்க நடவடிக்கையானது, அவரின் தலைமையின் மீது இலங்கையின் ஏனைய இடதுசாரி, முற்போக்கு ஜனநாயக சக்திகள் நம்பிக்கை கொள்வதற்கான வாய்ப்புக்களை அதிகப்படுத்தியிருக்கின்றது.

சிறி லங்கா சுதந்திரக் கட்சிக்குள் இவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ள களையெடுப்பு நடவடிக்கைகளும், திருமதி சந்திரிகா குமாரணதுங்காவின் செல்வாக்கு தென்னிலங்கையில் அதிகரித்து வருகின்றமையும் இலங்கையின் அரசியலில் குறிப்பிடத்தக்க வகையில் ஒரு முற்போக்கான அரசியல் மாற்றம் ஏற்படுவதற்கான நம்பிக்கைகளை உருவாக்குகின்றன.

இதேவேளை, இலங்கையின் அரசியலில் ஐம்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட அநுபவத்தைக்



படிப்பகம்

www.padippakam.com



கொண்ட இடதுசாரிக் கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சியும், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியும் ஒரே கட்சியாக இணைந்து கொள்ளத் தீர்மானித்துள்ளமை மிகவும் பாராட்டுக்குரிய ஒன்றாகும்...... .... நாட்டில் வேரோடியுள்ள இனமுரண்பாட்டுக்கும், ஐக்கிய தேசியக் கட்சி அரசினால் விடப்பட்டுள்ள ஏனைய அனைத்து அரசியல் – பொருளாதார சவால்களுக்கும் இடதுசாரிக் கட்சிகள் தமக்கிடையில் ஏற்படுத்திக் கொண்ட இந்த ஒற்றுமை முயற்சியின் பின்னராயினும் உறுதியான பதிலைக் காண முற்படுவார்கள் என எதிர்பார்ப்போம்.....

இலங்கையின் இடதுசாரிக் கட்சிகள் உறுதியான அரசியல் நிலைப்பாடுகளோடும், மேலும் மேலும் பிளவு படாமலும் இருந்திருந்தால் இலங்கையில் இனங்களுக்கிடையேயான உறவு இவ்வளவு மோசமானதாகியிருக்காது என்பதை இனியாவது தென்னிலங்கை இடதுசாரிகள் புரிந்து செயலாற்ற வேண்டும்.......

இந்த இரண்டு இடதுசாரிக் கட்சிகளினதும் ஒற்றுமையை தென்னிலங்கையில் சிறிய சிறிய கட்சிகளாகவும், உதிரிகளாகவும் உள்ள இடதுசாரிகள் அனைவரும் பலப்படுத்த வேண்டும்...... ஒன்று பட்டால் உண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு என்பதை இலங்கை வாழ் தமிழர்கள் மட்டுமல்ல, இலங்கையின் இடதுசாரிகளும் இன்றைய காலத்தின் தேவையான சூத்திரமாகக் கொள்ளுதல் வேண்டும்.

சிறி லங்கா சுதந்திரக் கட்சியில் ஏற்பட்டுள்ள மாற்றமும், இடதுசாரிக் கட்சிகளிடையே ஏற்பட்டிருக்கும் ஒற்றுமையும், சிறி லங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடதுசாரிக் கட்சிகளுக்குமிடையே மேலும் வலுப்பட்டு வரும் கூட்டணியும் வெறும் தேர்தல் வெற்றிக்கான தந்திரோபாயமாகவோ – சந்தர்ப்பவாதமாகவோ அமைந்து விடக் கூடாது என்பதே இலங்கை மக்கள் அனைவரினதும் நலன்கள் மீது அக்கறை கொண்டோரின் பேரவாவாகும்.

கடந்த மூன்று ஆண்டுகளாக, குறிப்பாக, திரு. ராஜீவ் காந்தி அவர்கள் புலிகளினால் படுகொலை செய்யப்பட்டதன் பின்னர், இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்திய அரசாங்கம் கடைப்பிடித்து வரும் கொள்கைகளும், நடைமுறைகளும் சிறி லங்கா அரசின் பேரினவாதக் கொள்கைகளுக்கே துணையாக உள்ளன.

இந்திய கடற்படையினரின் நெருக்குதல்களினால் சிரமங்களுக்கு உள்ளாகியிருந்த புலிகளுக்கு இப்போது பாகிஸ்தானின் உளவுப்பிரிவினர் நேரடியாகவே ஆயுத விநியோகம், பண உதவிகளை வழங்கி வரும் இரகசியம் இப்போது பரகசியம் ஆகிக் கொண்டிருக்கின்றது.

காஷ்மீரை மையமாகக் கொண்டு இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான உறவுகள் மிகவும் மோசமான நெருக்கடிக்கு உள்ளாகிவருகின்றமை அனைவரும் அறிந்த விடயமாகும்......

ஏற்கனவே புலிகள் தமிழ்நாட்டுப் பிரிவினை எண்ணம் கொண்ட சில குழுக்களுக்கும், ஆந்திராவை மையமாகக் கொண்டு செயற்பட்டு வரும் நக்சலைட்டுகளுக்கும் எறிகுண்டுவெடி, கண்ணிவெடி, நவீனரக துப்பாக்கிகளின் பிரயோகம் தொடர்பாக பயிற்சிகளை கடந்த ஐந்து ஆண்டுகளாக வழங்கி வருகின்றமையும் ஒரு பகிரங்கமான விடயமாகும்.

காஷ்மீர் தொடர்பாக இந்தியாவுக்கும் பாகிஸ்த்தானுக்கும் இடையிலான உறவு நெருக்கடி மேலும் மேலும் அதிகரிக்கும் வேளையில், புலிகள் தமிழ்நாட்டுப் பிரிவினை எண்ணம் கொண்ட அதிதீவிரவாதிகளுக்குகும் , ஆந்திர மற்றும் தமிழக நக்ஸலைட்டுக்களுக்கும் நவீன ஆயுதங்களையும், வெடிமருந்துகளையம், பணத்தையும் அள்ளி வழங்கி, தென்னிந்தியப் பகுதிகளில், குறிப்பாக தமிழ



படிப்பகம்

www.padippakam.com



கத்திலும், ஆந்திராவிலும், மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம், ஒரிஸ்லா ஆகிய மாநிலங்களில் சில பகுதிகளிலும், நெருக்கடிகளை ஏற்படுத்த வேண்டியது புலிகளின் கடமை. ........ அதற்கு மாற்றீடாக பாகிஸ்தான் உளவுப்படையினர் புலிகளுக்கு ஆயுதங்களையும் பணத்தையும் வழங்குவர் என்பதே இப்போது புலிகளுக்கும், பாகிஸ்த்தான் உளவுப்படையினருக்கும் இடையே செயற்பட்டு வரும் உடன்பாடாகும்.

இவ்விடயமானது, இந்திய – சிறி லங்கா அரசுக்கு இடையிலான உறவை மேலும் வலுப்படுத்துவதற்கான வாய்ப்புக்களையே ஏற்படுத்துகின்றன.... இதனால், மேலும் துன்பங்களுக்கும் இழப்புக்களுக்கும் ஈழத் தமிழ் மக்களே உள்ளாக்கப்படுவர்...... புலிகளின் இச்செயல்களால் தமிழகத்தில் ஈழத் தமிழர்களுக்காக கொஞ்சமாயினும் எஞ்சியிருக்கும் அநுதாபத்தையும் எமது மக்கள் இழந்து விட நேரிடும்.

ஒரு விடுதலைப் போராட்ட இயக்கத்தின் சாதனையை, அது எவ்வவளவு ஆட்களைச் சாகக் கொடுத்தது அல்லது எவ்வளவு ஆட்களைச் சாகடித்தது என்பதனால் அளவிடக் கூடாது...... மாறாக அந்த இயக்கத்தினால் அதன் மக்களின் நலன்கள் ஒவ்வொரு கட்டத்திலும் பாதுகாக்கப்படுகின்றனவா? நிலைநாட்டப் படுகின்றனவா? அந்த இயக்கத்தின் போராட்டத்தினால் மக்களுக்கு முடிவாகக் கிடைக்கவுள்ள விளைவுகள் என்ன? என்ற கேள்விகளுக்கு அது நேரான பதிலைத் தந்ததாக இருத்தல் வேண்டும்.

1985ம் ஆண்டு தமிழ் அமைப்புக்கள் அனைத்தும் 'ஈழத் தேசிய விடுதலை முன்னணி' என ஒற்றுமையாக இருந்த போது இந்தியாவானது இந்தியாவிலுள்ள மாநில அரசுகள் கொண்டிருக்கும் அதிகாரத்துக் குறையாத அளவு அதிகாரம் கொண்ட ஓர் மாகாண அரசமைப்பு ஒன்றை சிறி லங்கா அரசாங்கம் தமிழர்களுக்கு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியது.......

பின்னர் புலிகள் ஏனைய தமிழ் அமைப்புக்கள் மீது யுத்தம் தொடுத்து அவற்றைப் பலவீனப்படுத்திய படியினால் மொத்தத்தில் தமிழர்களின் போராட்டமே பலவீனப்பட்டது. தனியாக நின்ற புலிகளை சிறி லங்கா அரச படையினர் 'ஒப்பரேசன் லிபரேசன்' எனத் தொடங்கிய மும்முனைத் தாக்குதல் மூலம் விரட்டிய போது, இந்திய அரசாங்கம் அவசர அவசரமாக இந்திய – இலங்கை சமாதான உடன்பாட்டின் ஊடாக அதுவரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் வடக்கு – கிழக்கு மாகாண அரசமைப்பு ஒன்றுக்கு ஏற்பாடு செய்து..... அதை நிறைவேற்ற தனது இராணுவத்தையும் இந்திய அமைதி காக்கும் படை என்னும் பெயரில் அனுப்பியது.

புலிகள் இந்தியப் படைகளுக்கு எதிராக யுத்தத்தைத் தொடங்கியதைத் தொடர்ந்து, மாகாண அரச அமைப்பு அதற்கான அதிகார, மற்றும் நிர்வாக ஒழுங்குகள் தொடர்பாக சிறி லங்கா அரசுடன் நடத்தப்பட வேண்டியிருந்த பேச்சுவார்த்தைகளை நடாத்தும்படி வலியுறுத்த முடியாத நிலைமைகள் உருவாக்கப்பட்டன......

பின்னர் பிரேமதாசா அரசாங்கத்தோடு புலிகள் தேன் நிலவு கொண்டாடத் தொடங்கியதைத் தொடர்ந்து, வந்த இந்தியப் படையும் வெளியேற, இருந்த மாகாணசபையும் இல்லாமற் போக, அரச படைகளுக்கும், புலிகளுக்குமிடையிலான யுத்தத்தில் அகப்பட்டு நிற்பது மட்டுமே தமிழ் மக்களுக்கு எஞ்சியதாயிற்று.

தமிழ் மக்களின் போராட்டத்திற்கான பின்தளமாகவும், யுத்தத்தின் கொடூரங்களுக்குள் அகப்படும் வேளைகளில் தற்காலிகமாகத் தப்பி அகதிகளாகவாவது உயிர் வாழுவதற்கும் தமிழ் மக்களுக்கு நீண்ட காலமாக தமிழ் நாட்டு மண்ணினதும் மக்களினதும் துணை இருந்து வந்தது.... 1991ம் ஆண்டு



படிப்பகம்
படிப்பகம்

www.padippakam.com



புலிகள் ராஜீவ் காந்தியைப் படுகொலை செய்து அதையும் நாசம் செய்தார்கள்.

இப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் உட்கட்சி விவகாரத்தில் புலிகள் தமது மூக்கை நுழைத்து ஈழத்தமிழ் மக்களுக்கு தமிழ் நாட்டில் மேலும் மோசமான நிலையை ஏற்படுத்தி வருகின்றார்கள்......

ஆக மொத்தத்தில், புலிகளின் நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் தமிழ் மக்களுக்கு இந்தியாவினதும், தமிழகத்தினதும் துணைப்பலத்தை மிகத் தூரத்துக்கு தள்ளிவிட்டுள்ளது....... இந்தியா தொடர்பாக மட்டுமல்ல மற்றும் பல்வேறு வகைகளிலும்.......

புலிகளால் தமிழ் மக்களின் போராட்டமானது படிப்படியாகத் தரம் தாழ்ந்து செல்வதாகத்தான் அமைந்து வருகின்றது..... சிங்களப் பேரினவாதத்தின் முன்னால் தமிழ் மக்கள் மக்கள் ஒவ்வொரு கட்டத்திலும் தோற்கடிக்கப்பட்டவர்களாகவே ஆக்கப்பட்டிருக்கின்றார்கள்..... சர்வதேச ரீதியில் புலிகள் தமிழ் மக்களுக்கு எதிரிகளையே அதிகமாக்கி வருகிறார்கள்......

## இனிய தோழர்களே! நண்பர்களே!

இதேவேளை, இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமாதான பூர்வமான முறையில் தீர்வு காணப்பட வேண்டுமெனவும், அதற்கான ஒத்துழைப்பைத் தாங்கள் தரத் தயார் என்றும் இலங்கையிலுள்ள பிரிட்டனுக்கான தூதுவர் அண்மையில் மிக விரிவான முறையில் கூறியுள்ளமையைக் கண்டு தமிழர்கள் சிலர், இதனாலாவது ஏதாவது நன்மை ஏற்படாதா? என அகலக் கண் விரித்து எதிர்பார்க்கின்றனர்.

இதைப் போலவே முன்னர் அவுஸ்திரேலியா கூறியது ,,,,,,,, ஸ்கண்டிநேவியன் நாடுகளின் தூதுவர்கள் கூறினர் ,,,,,,,,தமிழ்நாட்டிலிருந்து திருப்பி அனுப்பப்படும் அகதிகள் விவகாரத்தினூடாக அமெரிக்காவும் அக்கறை காட்டுவது போற் தோற்றமளிக்கின்றது. ,,,,,,, இலங்கைக்கு உதவி அளிக்கும் நாடுகள் இது பற்றி ஒவ்வோர் ஆண்டும் பேசுகின்றன .......

ஆனால், இந்தியாவின் அனுபவத்தின் பின்னர் எந்தவொரு நாடாயினும் நுனி நாக்கால் பேசுவதற்கப்பால், இவ்விடயத்தில் ஓர் அரசியற் தீர்வைக் காணும் வகையில் திட்டவட்டமாகத் தமது காலை வைப்பார்களா? என்பதற்கான பதில் சந்தேகமே..... ....... அப்படித்தான் எந்தவொரு நாடு விரும்பினாலும், இந்த இந்த சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியாவின் அனுமதி இல்லாமல் எந்தவொரு நாடும் இலங்கையில் சமாதானம் தொடர்பாக ஈடுபடமாட்டார்கள் என்பதே இன்று நடைமுறையிலுள்ள சூத்திரமாகும். இதனை நாம் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் புரிந்து கொள்ளுதல் அவசியமாகும்.

இலங்கையில் குழப்பங்களை ஏற்படுத்த, அந்த அடிப்படையில் ஆயுதங்களையும், பணத்தையும் சிறி லங்கா அரசாங்கத்தவர்களுக்கும், ஆயுதம் தாங்கிய குழுக்களுக்கும் மறைமுகமான முறையில் அள்ளி வழங்க சில நாடுகளோ அல்லது அந்நாடுகளின் உளவு ஸ்தாபனங்களோ முன் வரலாம் ....... ஆனால் அந்த விடயத்திலும் கூட அந்நாடுகள் எதுவும் வெளிப்படையாகச் செயற்படத்தயாராக இல்லை.

1983ம் ஆண்டு தொடக்கம் புலிகள் இன்று வரை சர்வதேசரீதியில் வெவ்வேறு நாடுகளின் உளவு ஸ்தாபனங்களின் கூலிக்காகவே 'தமிழீழ விடுதலைப் போராட்டம்' நடத்தி வருகின்றன ....... முதலில், இந்திய உளவுப்பிரிவினரி (RAW)ற்காகச் செயற்பட்டனர் ..... பின்னர் இஸ்ரேலிய உளவுப்



படிப்பகம்

www.padippakam.com



பிரிவி (MOSSSAD) ற்காகச் செயற்பட்டனர். .......... பின்னர் பிரேமதாசா அரசாங்கத்தின் தேவைகளுக்காகச் செயற்பட்டனர். ........... இப்போது பாகிஸ்த்தான் உளவுப்பின் நோக்கங்களுக்காகச் செயற்பட்டு வருகின்றனர்.

ஆக மொத்தத்தில், புலிகள் எந்தக் கட்டத்திலும் ஈழத் தமிழ் மக்களின் நலன்களுக்காகச் செயற்படுவதாக இல்லை...... எந்தச் சந்தர்ப்பத்தில் எந்த சர்வதேச உளவு ஸ்தாபனம் இலங்கை, இந்தியா தொடர்பாக தமது தேவைகளுக்காகக் குழப்பம் விளைவிக்க முயலுகின்றார்களோ அப்போது அவர்களோடு இந்தப் புலிகளும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட முகமூடியுடன் ஒட்டிக் கொண்டு தமிழ் மக்களின் நிலையை மேலும் ஒரு படி இறக்கி விடுகின்றார்கள்......

இந்த விடயத்தில் புலிகள்தான் இதுவரை வல்லவர்களாக உள்ளனர் என்பதில் சந்தேகமில்லை. ......... இந்த வல்லமை கண்டுதான் புலிகளின் தீவிர ஆதரவாளர்கள் புளகாங்கிதம் கொள்கின்றார்கள்........

ஆனால், தமிழ் மக்களைப் பொறுத்த வரையில், இந்த நிலைமையானது மிகவும் துன்பத்துக்கும், வேதனைக்கும் உரிய ஒன்றாகும்.

இப்போது, இந்தப் புலிகளின் வழிகளைக் கடைப்பிடித்து செயற்பட்டு வரும், ஏனைய சில தமிழ் குழுக்கள், போட்டா போட்டியாகத் தமிழ் மக்களின் போராட்டத்தை விலைபேசி விற்பதில் தாமும் சளைத்தவர்கள் அல்ல எனத் தமது வல்லமையையும் காட்டி வருகின்றார்கள். ..........

முன்னர் புலிகளின் துணையோடு, இந்தியப் படைகளைத் திருப்பி அனுப்பி, தமிழ் மக்களுக்கான மாகாண அரசாங்கத்தையும் இல்லாமல் ஆக்கிய சிறி லங்கா அரசு இப்போது இந்தக் குழுக்களின் துணையோடுதான், வடக்கு – கிழக்கு மாகாணத்தை நிரந்தரமாகத் துண்டாட முனைகின்றது .....

முன்னர் புலிகள் பிரேமதாசாவிற்கு உதவியாக நின்று பத்து கோடி ரூபாக்களைப் பெற்றுக் கொண்டார்கள். ...... இப்போது இந்தக் குழுக்கள் ஒரு ஈழப் போராளியை சிறி லங்கா அரசுக்கு மாதாந்தம் ரூபா 5000 என விலை பேசி ஈடுபடுத்தி வருகின்றனர்...... இந்த 5000த்தில் 2000 அந்த இளைஞனுக்கு,,,, 3000 அந்த வியாபாரத்தை நடத்தும் குழுத் தலைவருக்கு .......

அத்துடன், சிறி லங்கா இராணுவத்தின் பாதுகாப்பில் இந்தக் குழுக்கள் கப்பம், ஆட்கடத்தல் என்பவற்றின் மூலமும் நாளாந்தம் இலட்சக் கணக்கில் பணம் திரட்டிக் கொள்கின்றன...... இந்தக் குழுக்களால் சிறி லங்கா அரசுக்கு இராணுவ ரீதியில் குறிப்பிடத்தக்க பயன் எதுவும் கிடையாது....... ஆனால் அரசியல் ரீதியில் தமிழ் மக்களின் நலன்களுக்கு எதிரான தனது திட்டங்களை சிறி லங்கா அரசானது இக்குழுக்களைப் பயன்படுத்தி சாதித்து வருகின்றது.

அதன் ஒரு பகுதியே, வடக்கு – கிழக்கு மாகாணத்தைப் பிரிப்பதற்கான தனது நடவடிக்கைக்கு முன் தயாரிப்பான உள்ளூராட்சித் தேர்தல்களில் இக்குழுக்களை அரசு பங்குபற்ற வைத்துள்ளமையாகும்.

அரசின் இந்த நோக்கத்தையும் செயல்களையும் மிகக் குறைந்த அறிவுடையவர்களாற் கூட புரிந்து கொள்ள முடியும்.....

அப்படியிருக்க இந்தக் குழுக்கள் உள்ளூராட்சித் தேர்தல்களிற் பங்கு பற்றியிருக்கின்றமையானது அவர்களின் நோக்கங்களை வெளிப்படுத்துபவையாக உள்ளன....... 'எரிகிற வீட்டில் பிடுங்குவது லாபம்' என்ற அடிப்படையிலேயே இந்தக் குழுக்கள் தமிழ் மக்களின் பரிதாபகரமான நிலையையும், சீரழிந்து போன போராட்ட நிலைமையையும் மிகச் சுலபமான முறையில் கொள்ளை லாபம் தரும் வியாபாரமாக்கியுள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com



தமிழினத்தை விற்பதில், கடந்த காலங்களில் அவ்வப்போது அரசுக்குத் துணைபோன பாராளுமன்ற அரசியல்வாதிகளை எல்லாம் இந்தக் குழுக்கள் ஒரே மிண்டில் விழுங்கி விட்டார்கள்.

அஃது ஒருபுறமிருக்க, இந்த உள்ளூராட்சிச் சபைகள் மீதான முழு அதிகாரமும் அரசியற் சட்டப்படி மாகாண அரசுக்கே உரிய தாகும் ..... இந்தத் தேர்தல்களை சிறிலங்கா அரசு நடத்துவதானது இந்த அரசினாலேயே உருவாக்கப்பட்ட அரசியற் சட்டத்திற்கே விரோதமானதாகும்..... உண்மையில் ஆளுநர் ஆட்சி என்பது ஓர் இடைக்கால ஏற்பாடே ...... இக்காலகட்டத்தில் இத்தேர்தல் நடத்தப்படக் கூடாது....... ஆயினும், மாகாண அரசின் அனைத்து விடயங்களுக்கும் தன் எண்ணப்படியே விளக்கம் அளித்துப் பழக்கப்பட்டுவிட்ட சிறி லங்கா அரசு இந்த விடயத்தில் மட்டும் இந்திய மற்றும் இவ்வாறான மத்திய – மாகாண அரசமைப்புக்களைக் கொண்ட நாடுகளின் உதாரணத்தைக் கடைப்பிடிக்கும் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்.

எனினும், சம்பந்தப்பட்ட எதிர்க்கட்சிகள் இவ்விடயத்தில் பாராமுகமாக இருக்காது இதனை அரசை அம்பலப்படுத்தும் ஒரு விவகாரம் ஆக்க வேண்டும்.

**அன்பான நண்பர்களே! தோழர்களே!**

தமிழ் மக்களின் நியாய பூர்வமான கோரிக்கைகளுக்கு ஆதரவாக தேசிய ரீதியிலும், சர்வதேசிய ரீதியிலும் நட்பு சக்திகளைத் திரட்டுவது என்பதை நாம் மீண்டும் ஆரம்பத்திலிருந்து தொடங்க வேண்டியுள்ளது. ........... இன்றைக்கு ஈழத் தமிழ் மக்களுக்காக கைகொடுத்து உதவவோ அல்லது அநுதாபப்படவோ கூட உலகில் நண்பர்கள் இல்லை என்னும் நிலைமை ஆக்கப்பட்டிருக்கின்றது. ............

........ பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைந்தால் சங்காரம் நிஜமென்று சங்கை முழங்குவதற்கு ஏழு கோடித் தமிழர்கள் உலகம் முழுவதுவும் பரவி நிற்கின்றார்கள் என்பது இன்று வெறுமனே சனத்தொகைக் கணக்காகி விட்டது. ......... எண்பது கோடி மக்களின் இந்தியா எம்மோடு நிற்கின்றது என்று நாம் துணிவோடு இருந்ததெல்லாம் இப்போது பழங்கதையாகப் போய் விட்டது. ......... சர்வதேச நாடுகள் பூராவும் ஈழத் தமிழ் மக்களுக்கு அநுதாபமாக பல்வேறு வெளிநாட்டவர் அமைப்புக்கள் செயற்பட்டன. ............ இன்றைக்கு சர்வதேச ஆயதக் கள்ளக் கடத்தற்காரர்கள், போதை மருந்துப் புள்ளிகளைத் தவிர வேறெவரும் தமிழர்களைக் காணுவதற்குக் கூடத் தயக்கம் காட்டும் நிலை. ..........

'எவரது உதவியும் இல்லாவிட்டாலும் நாம் தனித்து நின்று போராடுவோம்', 'தன் கையே தனக்குதவி', 'உதவி செய்ய முன்வரும் எவரும் எம்முடைய நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டவையாகவே இருக்க வேண்டும். .............. அல்லாத உதவிகளையெல்லாம் நாம் பெற்றுக் கொள்ள மாட்டோம்', என்று சொல்லப் படுபவையெல்லாம் பொய்யான வார்த்தைப் பிரயோகங்களே தவிர உண்மைகள் அல்ல.

இப்படிக் கூறிக் கொண்டே, பின் கதவுகள் வழியாக, நண்பர்கள் யார்? எதிரிகள் யார்? என்ற வகைப்படுத்தலின்றி ஆயுதங்களுக்காகவும், பணத்துக்காகவும் தமிழ் மக்களின் போராட்டத்தை சென்னையிலும், டெல்லியிலும், கொழும்பிலும், டெல் அவிவிலும், வாஷிங்டனிலும், லண்டனிலும் ஏலத்தில் போட்டு விலை பேசி விற்ற 'மாவீரர்களின்' சுயமான போராட்டத்தை நிறையவே பார்த்து விட்டோம்.

............ இந்தத் தமிழ் தியாகச் செமமல்கள் மட்டுமல்ல, ,,,,

,,,,,, 'இந்தியத் தரகு முதலாளித்துவ ஆட்சியாளர்களின் உதவி தேவையில்லை. ,,,,,,,,,,,



படிப்பகம்

www.padippakam.com



,,,,,,இந்தியப் பாட்டாளி வர்க்கத்தின் உதவியுடன் எமது விடுதலைப் போராட்டத்தை நடத்துவோம்'' ''' என்று கூறித்திரிந்த நவீன '''''' 'பார்வதி மகேஸ்வரர்' களும், 'விஸ்வா' மித்திரர்களும் '''''' கூட, அதே த. மு. ஆட்சியாளர்களிடமிருந்து ஆயுதங்களும் பணமும் பெறுவதற்காக, சென்னைக்கும் டெல்லிக்கும் இடையில் எத்தனை தடவைகள் வானத்தில் பறந்தார்கள், தண்டவாளத்தில் ஓடினார்கள் என்பதை இயற்கை ஒருநாள் பறை சாற்றும். ......... மகேஸ்வரர்கள் சமாளித்துக் கொண்டார்கள். ......... மற்றவர்கள் ...... 'சீச்சீ இந்தப்பழம் புளிக்கும்' என்று கூறிக் கொண்டு விரக்தியோடு இருந்த போது தோழர் நாபாவின் கைகளே அவர்களுக்கு நம்பிக்கை அளித்தன என்பதை நாம் அறிவோம்.

பொய்யான செருக்குப் பேச்சுக்களும், போலித்தனமான நடிப்பு அரசியலும் எவ்வளவுக்குத் தொடர்கிறதோ அவ்வளவுக்கு தமிழ் மக்களுக்கு அவை மேலும் மேலும் அழிவுகளையே ஏற்படுத்தும்.

**.................. எதிரிகளுக்கு விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கின்ற நாம், நட்பு சக்திகளுடன் மட்டும் சமரசம் எதுவுமின்றிப் போரம் பேச முனைகின்றோம். ........... தமிழ் மக்களின் நலன்கள் மீது உண்மையான அக்கறை கொண்ட ஒவ்வொருவரும் இவ்விடயத்தின் மீது தெளிவான புரிதல்களைப் பெற்று,,,,,,, தெளிவான புரிதல் தமக்கு இருப்பதாகக் கருதுவோர் தமது பொய்யான முகங்களைக் களைந்து விட்டு ,,,,,,,,, குழம்பியிருக்கும் தமிழ்ச் சமுதாயத்துக்குள்ளேயே ஏதாவது சுழியோடிப் பிடித்துக் கொள்ளலாமா என்ற பழைய அரசியல்வாதிகளின் பாணிகளையும் நிறுத்திக் கொண்டு ,,,,,,,,, சமூகப் பொறுப்புணர்ச்சி அற்றரீதியில் அவ்வப் போது யாரையாவது குறித்து கிண்டல் விட்டுக்களை அடிப்பதில் சாதனை காண்பதை விட்டுவிட்டு ,,,,,,,,,, சமூகத்திற்காக ஆக்கபூர்வமாக ஒரு காரியத்தை ஆற்றுவோம் என்ற உணர்வோடு, உலகம் பூராவும் தமிழ் மக்களுக்கு நண்பர்களைத் திரட்டுவோம். .......... அதற்கான பொது அணிகளைக் கட்டுவோம். ........ அதற்குத் தேவையான குரல் எழுப்புவோம்! ........... நம்பிக்கையீனத்தின் எல்லைக்குத் தள்ளப்படிருக்கும் ஈழத்தமிழ் மக்களுக்கு அதுவாவது ஒரு புதிய நம்பிக்கையை ஊட்டட்டும் என உழைப்போம் !!!!!!!!!.**

**எமது உழைப்புக்கள் அனைத்தும்**
**ஒடுக்கப்பட்ட எமது மக்களுக்கே!**

**இப்படிக்கு**
**என்றும் உங்கள் அன்பின்**
**தூத்திரன்.**



படிப்பகம்

www.padippakam.com

## கொழும்பு அரசியல் நிலவரம் -- ஓர் அலசல்

# பிரேமதாசாவை மிஞ்சும் டிங்கிரி. விஜயதுங்கா!!!

# தொண்டமான் காங்கிரஸில் மோதல்- வெடிப்பு ???

# புதைகுழிகளில் ஐ.தே.க. அரசின் கோர முகங்கள் //

ரணசிங்க . பிரேமதாசா கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து சிறி லங்கா அரசின் குணாம்சங்களில் குறிப்பிடத்தக்களவு மாற்றங் கள் நிகழும் என எதிர்பார்க்கை பரவலாக நிலவியது.

அடுத்து ஜனாதிபதியான டிங்கிரி. பண்டா. விஜயதுங்கா அவர்கள் அவ்வாறானதொரு எதிர்பார்க்கைக்கும் நம்புவதற்கும் உரிய வகை யில் பல திடீர் நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

பிரேமதாசா இல்லாமற் போய் விஜயதுங்கா ஜனாதிபதி ஆனதன் மூலம் சிறி லங்கா அரசின் நிர்வாக அமைப்பிலும் செயல்முறையி லும் ஜனநாயகம் மலரத் தொடங்கி விட்டதாகவே பலரும் நினைக் கத் தொடங்கினார்கள்.

ஜனாதிபதியான விஜயதுங்கா அடுத்தடுத்து பல அதிர்ச்சி அறிக்கை களை வெளியிட்டார்.

1) அத்தியாவசியமற்ற செலவீனங்களை அரசுக்கு ஏற்படுத்தும் கிராமோதய விழாக்கள் போன்ற கொண்டாட்டங்கள், விழாக்களை அரசு இனிமேல் மேற்கொள்ளாது என அறிவித்தார்.

2)அமைச்சர்கள் தங்கள் தங்கள் அமைச்சுக்களின் கடமைகளையும், நிர்வாகங்களையும் கவனிப்பதிலேயே முழுக்கவனத்தையும் செலுத்துதல் வேண்டும். ஜனாதிபதி அலுவலகத்தில் தமது காலத்தை விரயம் செய்யும் போக்குகளை நிறுத்திக் கொள்ளுதல் வேண்டும். நடமாடும் ஜனாதிபதி அலுவலக முறை தொடந்தும் செயற்படமாட்டாது. மக்களின் தேவைகளை உடனடியாகக் கவ னித்து அவற்றை நிறைவேற்றுவது மந்திரிகளின் கடமை என அறிவித்தல்கள் செய்தார்.

3) வாதப்பிரதிவாதங்களுக்கு உள்ளாகியிருக்கும் சிறி லங்கா அரச மைப்பானது தொடர்ந்தும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனா திபதி அமைப்பு முறையிலேயே செயற்படுவதா? அல்லது மீண்டும் பாராளுமன்ற ஜனநாயக முறையை ஏற்படுத்துவதா? என்பதைத் தீர்க்கமாக நிர்ணயிப்பதற்காக ஓர் அனைத்துக் கட்சி மாநாடு ஏற்ப டுத்தப்படும் என அறிக்கை வெளியிட்டார்.

4) அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் தொலைக்காட்சி, வானொலி, செய்திப் பத்திரிகைகள் மற்றும் மக்கள் தொடர்புச் சாதனங்கள் தொடர்ந்தும் அரசின் ஊதுகுழல்களாகச் செயற்படமாட்டா. அவை ஒவ்வொன்றும் சுயாதீனமான அமைப்புக்களாகச் செயற்படும் எனக் கட்டளைகள் பிறப்பித்தார்.

இந்த அறிவிப்புக்களைப் பார்த்து வெளிநாட்டுப் பத்திரிகை கள் மட்டுமல்ல கொழும்புப் பத்திரிகைகள் அனைத்தும் கூட விஜய துங்காவைப் பாராட்டின.

அதுவரை பிரேமதாசா நடாத்தி வந்த அரசாங்க முறை மையே இதற்குக் காரணம்.

பிரேமதாசா ஜனாதிபதியாக இருந்த போது பெரும்பாலும் அமைச் சர்கள் ஜனாதிபதி அலுவலகத்திலேயே தமது பெரும்பான்மையான நேரத்தைக் கழித்தனர். ஜனாதிபதியின் முன் அனுமதியின்றி எந்த ஒரு அமைச்சரும் எதுவும் செய்யமுடியாது என்னும் நிலையை ஏற்படுத்தினார்.



படிப்பகம்

www.padippakam.com



## அன்று அனைத்தும் பிரேமதாசாவே!

அமைச்சுக்கள் ஒவ்வொன்றினதும் செயலாளர்களை, அதற்குரிய அமைச்சர்கள் எவரையும் கலந்தாலோசிக்காது தன் எண்ணப்படியே நியமனங்கள் செய்தார். பிரேமதாசா அமைச்சரவைத் தலைவர் என்பதை விட ஒவ்வொரு அமைச்சினதும் **Super** அமைச்சராகத் தொழிற்படுவதிலேயே கவனம் செலுத்தினார்

நடமாடும் ஜனாதிபதி அலுவலகத்தை மாவட்டங்கள் தோறும் நடாத்துவதன் மூலம் பிரேமதாசா மக்களுடனான தமது நேரடித் தொடர்புகளைப் பராமரித்து வந்தார்......அதன் மூலம் தன்னைச் சந்திக்கும் தனி நபர்கள் எவரும் அவரவரது தனிப்பட்ட தேவைகளைப் பெற்றுக் கொள்ள - நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை பிரேமதாசா மக்களுக்கு ஏற்படுத்தினார்.

இதன் மறுபக்கம், என்னவென்றால், பிரேமதாசா தவிர்ந்த வேறு எவரினாலும் சிறி லங்கா அரசில் எதுவுமே செய்ய முடியாது. ஒரு சாதாரண பிரச்சினைக்குக் கூட சிறி லங்கா அரசின் ஜனாதிபதியைச் சந்திக்கா விட்டால் அது நடைபெறமாட்டாது என்பதையே பிரேமதாசா ஏற்படுத்தினார்.

பிரேமதாசா மக்கள் மத்தியில் தனது செல்வாக்கை நிலைநிறுத்தி வைத்திருப்பதற்கு வீட்டுத் திட்டம் ஒன்றை மேற்கொண்டு வந்தார். இந்த வீட்டுத் திட்டத்தை மையமாகக் கொண்டு கிராமோதய விழாக்களை பிரமாண்டமாக, அரசின் பெரும் செலவில் நடாத்தி வந்தார்.

பிரேமதாசா 1988ம் ஆண்டு தமது ஜனாதிபதித் தேர்தற் பிரச்சாரத்தின் போது, தனது ஆட்சியின் கீழ் அவசரகாலச் சட்டம் இல்லாத அரசாங்கமே நடக்கும் என வாக்குறுதி அளித்தார். ஜனாதிபதியானவுடன் அவசரகாலச் சட்டத்தை நீக்கினார். ஆறு மாதங்கள் கூட முடிவடையும் முன் மீண்டும் அவசர காலச்சட்டம் பிரகடனப்படுத்தப் பட்டது. முன்னரை விட எதேச்சாதிகார நிலைமை மேலும் அதிகரிக்கப் பட்டது.

பிரேமதாசாஜனாதிபதியாகிஅடுத்தநிமிட மேரூபவாகினி-அரசின் தொலைக்காட்சி, இலங்கை வானொலி, மற்றும் அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் ஏரிக்கரைப் பத்திரிகை நிறுவனம் ஆகியவற்றை தனதும் தனது அரசாங்க நடவடிக்கைகளினதும் பச்சைப் பிரச்சார சாதனங்கள் ஆக்கினார்.

ஒட்டு மொத்தத்தில் கூறினால், பிரேமதாசாவின் ஜனாதிபதி ஆட்சிக் காலமானது அச்சங்களும் கொடூரங்களும் நிரம்பியதாக,.... மனித உரிமைகள், ஜனநாயக உரிமைகள் அர்த்தமற்றுப் போனவைகளாக,.... தங்களைப் பாதுகாக்க வேண்டிய அரசிடமிருந்து தங்களை எப்படிப் பாதுகாப்பது என்பதைப் பற்றி மக்கள் சிந்திக்க வேண்டியதாக இருந்தது.

### வந்த வேகத்தில் போனது

பிரேமதாசா படுகொலை செய்யப்பட்டதனால் ஜனாதிபதியான விஜயதுங்கா அவர்கள் பிரேமதாசாவின் செயல்முறைகளுக்கு மாறான அறிவிப்புக்களை அடுத்தடுத்து வெளியிட்ட போது தென்னிலங்கை மக்கள் மகிழ்ச்சி அடைந்தது இயல்பே.

ஆனால், ஜனாதிபதியான விஜயதுங்கா மூன்று மாதங்களுக்குள்ளேயே 'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற வகையில் நிலைமைகளை மீண்டும் அதே இடத்தில் கொண்டு வந்து விட்டிருக்கிறார் -- ஏற்படுத்தியிருக்கிறார்.

இன்னும் சொல்லப் போனால், பிரேமதாசாவின் ஆட்சியை விட மேலும் மோசமானதாக -- கொடூரமானதாக விஜயதுங்காவின் முகம் வெளியே வந்து கொண்டிருக்கின்றது.

தமிழ் மக்களின் விவகாரத்தில் பிரேமதாசா ஒப்பீட்டுரீதியில் பத்து மடங்கு பரவாயில்லை என தமிழர்கள் நினைக்கும் ஒரு நிலையை விஜயதுங்கா ஏற்படுத்தி வருகின்றார்.

இலங்கையில் புலிகளின் பிரச்சினை மட்டும் தான் இருக்கிறதே தவிர, இனப்பிரச்சினை என்ற ஒன்றே கிடையாது என அடிக்கடி அறிவித்து வருகிறார். இது சமாதானபூர்வமான வழிமுறைகளை அடைக்கும் ஓர் அணுகுமுறையாகும்;;;;;

;;;;; தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயபூர்வமான ஓர் அரசியற் தீர்வைக் காண்பதற்கான முயற்சிகளை அர்த்தமற்றவையாக்கி திட்டவட்டமாக இராணுவ வெற்றிக்கே முயற்சிக்கும் அணுகுமுறையாகும்;;;;;

;;;;;அரசின் இந்த நிலைப்பாடு தொடருமாயின், இன்று ஆயுதங்களைக் கைவிட்டு சமாதான வழிமுறைகளினூடாகவும், சட்ட பூர்வமான முறைகளினூடாகவும் அரசியற் தீர்வு காண முயற்சித்துக் கொண்டிருக்கும் தமிழ்க் கட்சிகளை மீண்டும் ஆயுதப் போராட்டத்தை நோக்கித் தள்ளுவதாகவோ அல்லது அக்கட்சிகளை நிலவும் நிலைமைகளுக்குப் பொருத்தமற்றவை யாக்குவதாகவோ தான் முடியும்.

விஜயதுங்காவின் இந்த அரைவேக்காட்டுத் தனத்தை தமிழ்க் கட்சிகள் மட்டுமல்லாது, சிறி லங்கா சுதந்திரக் கட்சியும்



படிப்பகம்

www.padippakam.com



## டிங்கிரியின் புதுப் புதுத் தந்திரங்கள்

மற்றும் இடதுசாரிக் கட்சிகளும் பகிரங்கமாகக் கண்டித் திருக்கின்றமை மிகவும் கவனத்துக்கும் குறிப்பிடத்தக்களவு திருப் திக்கும் உரிய ஒன்றாகும்.

ஆனால் அதேவேளை, சிங்களப் பேரின வாதிகளுக்கு விஜயதுங்காவின் வெளிப்படையான சிங்கள இன மேலாதிக்க நிலைப்பாடு பெரிதும் மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது.

ஏற்பட்ட விபத்தின் விளைவாக இடைக்கால ஜனாதிபதி யான திரு விஜயதுங்கா அவர்கள், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்த லில் தனது வெற்றியை உறுதிப் படுத்திக் கொள்வதற்கே இந்த சிங்கள நாசிச நிலைப்பாட்டைக் கொடி பிடித்து நிற்கின்றார் என்பது ஏனைய விடயங்கள் மூலமும் இப்போது தெளிவாகி வருகின்றது.

தனது ஜனாதிபதிப் பதவியின் கீழ் தமிழ் மக்கள் மீது இரா ணுவ ஆட்சியையும், சிங்கள மக்கள் மீது பொலிஸ் ஆட்சியையும் உறுதியாக நிலைநாட்டுவதே விஜயதுங்காவின் இலக்காக உள்ள தெனலாம்.

விஜயதுங்கா உட்பட ஐக்கிய தேசியக் கட்சியின் உயர் மட்டத்தில் உள்ள எவருமே ஜனநாயக அமைப்பு முறையின் அடிப் படையில் ஆட்சி நடத்துவதற்கு இன்று தயாராக இல்லை என்பது வெளிப்படையான ஒன்றாகும்.

இவர்கள் தமது ஆட்சி அதிகாரத்தைக் கொண்டு செலுத்துவ தற்கு இனவாதப் பிரச்சாரங்களைக் கடைப்பிடிப்பதுவும், எதேச்சா திகார ஆட்சிமுறையைக் கையாளுவதுவும், தவிர்க்க முடியாத அம்சங்களாகும்..... இராணுவ மற்றும் பொலிஸ் கொடூரங்களும், பரவலான லஞ்சம், ஊழல், மோசடிகளும் இதன் பிரிக்க முடியாத பாகங்களாகும்.

இந்நிலைமைகள் மென்மையான அரசியல் மாற்றங்கள் மூலம் தளர்ச்சியடைந்து போவதற்கான வாய்ப்புக்கள் தென்பட வில்லை.

பிரேமதாசா மரணமடைந்ததைத் தொடர்ந்து ஐக்கிய தேசி யக் கட்சிக்குள் பதவிப் போட்டிகள் மிகக் காரசாரமாகத் தொடங் கின.இதைத் தீர்த்து வைப்பதற்கான ஒரு நடுநிலையாளனாகவும், உட்கட்சிச் சிக்கல் தீரும் வரைக்குமான தற்காலிகமாக ஜனாதிபதிப் பதவியைக் காபந்து பண்ணி வைத்திருப்பவருமாகவே திரு. விஜய துங்காவைப் பற்றிக் கருதப்பட்டது.

ஆனால் இன்று அந்த நிலைமை மாறி விஜயதுங்கா தானே ஐ. தே.க.வின் பிரதான தலைவராக மாறி விட்டார்.

அத்துடன் அக் கட்சியின் உத்தியோகபூர்வ அறிவிப்பின் பிரகாரம் அவர்தான் அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான ஐ. தே.க வின் வேட்பாளர்.

## நெருக்கடிக்குள் விக்கிரமசிங்கா?

விஜயதுங்கா தனது நிலைமைகளைப் பலப்படுத்திக் கொள் வதற்காக மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் மறுபுறம், ரணில் விக்கிரமசிங்கா, ஹேமா பிரேமதாசா போன்றோரை ஓரம் கட்டுவ தாக உள்ளது.

சிறி லங்கா சுதந்திரக் கட்சியைப் பலவீனப் படுத்தவும், ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தனது நிலையைப் பலப்படுத்திக் கொள் ளும் நோக்கங்களுடனும் ரணில் விக்கிரம சிங்கா தான் தனது பள்ளிக்கூட வகுப்பு நண்பனான அநுரா பண்டார நாயக்காவை சி. ல. சு. கட்சியிலிருந்து பிரிப்பதிலும், ஐ.தே.க வுக்குள் சேர்ப்பதிலும் தந்திரங்கள் செய்து வெற்றி கண்டார்.

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியின் அரசில் உயர் கல்வி அமைச்சராகக் கொண்டுள்ள அநுராவை விஜயதுங்கா தனது ஆளாக ஆக்கிக் கொண்டுள்ளார்.

லலித் அத்துலத் முதலி, காமினி திசநாயக்கா ஆகியோரை ஐ. தே. க. விலிருந்து கழட்டி விட்ட பிரேமதாசா தனக்குப் பக்க பலமாக ரணில் விக்கிரம சிங்காவையே பயன்படுத்திக் கொண் டார்..... பிரேமதாசாவுக்கு அடுத்த பிரமுகராக ஐ. தே. க. வுக்குள் ரணிலே காணப்பட்டார்......பிரேமதாசாவுக்கு அடுத்ததான ஜனாதி பதிப் பதவி ரணில் விக்கிரமசிங்காவுக்கு என்றே ஐ. தே. க. வில் பரவலாகக் கருதப்பட்டது.

இதன் விளைவாக, அத்துலத் முதலி, காமினி ஆகியோர் பிரேமதாசாவுக்கு அடுத்ததான தமது எதிரியாக ரணிலையே கருதி னர்....இதன் மறுபுறம், ரணிலுக்கும் அவர்கள் மீது கண்காட்டக் கூடாப் பகைமை.

பிரேமதாசாவின் இறப்பின் பின்னர் இந்நிலைமைகளில் மாற்றம் ஏற்படுமென எதிர்பார்க்கப்பட்டது..... காமினி திசநா யக்கா மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் புகுவதற்கு முயற்சித் தார்.....இதற்கு இடம் தர ரணில் விக்கிரம சிங்கா தயாராக இருக்க வில்லை.

காமினி ஐ. தே. க. வுக்குள் வருவதை நிரந்தரமாகத் தடுக் கும் நோக்கில் செயற்பட்ட ரணில் அநுராவை ஐ. தே.க.வுக்குள் கொண்டு வந்ததில் அந்த நோக்கமும் ஒன்றாகும்.



படிப்பகம்

www.padippakam.com



............ ஆனால், தொடர்ந்து வரும் மாற்றங்கள் ரணில் விக்கிரம சிங்காவுக்கு எதிராகவே உள்ளன.

இவற்றின் விளைவாக, ஆரம்பத்தில் பகைவர்களாக இருந்த ரணிலும் ஹேமா பிரேமதாசாவும் இப்போது நண்பர்களாகிக் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

## மீண்டும் ஐ. தே.க.வில் காமினி

இந்நிலைமைகள், விஜயதுங்காவையும், காமினி திசநாயக்காவையும் மிக நெருக்கமானதாக்கியது. .... ....... காமினி திசநாயக்கா வேக வேகமாக ஐக்கிய தேசியக் கட்சிக்குள் சேர்த்துக் கொள்ளப்பட்டார் --- சேர்ந்து கொண்டார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் வளர்ந்து வரும் இக் குழுப் போட்டிகள் எவ்வளவு தூரத்திற்கு முரண்பாடுகளாகி வெடிக்கும் எனக் கூறமுடியாதுள்ளது..... ஆயினும், ஐ. தே. க வானது சுமுகமானதாக இல்லை என்பது தெளிவாகும்.

இவ்வாறாக, யூ. என். பி.க்குள் உள்ள சிங்களப் பிரமுகர்கள் தமது கட்சிக்குள்ளும் அரசிலும் தத்தமது நிலைகளைப் தவற விடாது பராமரிப்பதிலும், மேலும் தமது பதவி அதிகார நிலைகளை முன்னேற்றுவதிலும் அக்கறை கொண்டு செயற்பட்டு வரும் இவ் வேளையில், ........ இதுகால வரை ஐ. தே. க.வுடன் ஒட்டியே தமது காலத்தையும் வாழ்க்கையையும் ஓட்டி வரும் இ. தொ, கா. தொண்டமானும், சபாநாயகர் மொகமத்தும் தங்களுடைய நிலைகளை உறுதிப் படுத்திக் கொள்வதற்கான திட்டங்களில் இறங்கினர்.

விஜயதுங்கா அவர்கள் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளை ஒரு பொருட்டாகக் கணக்கெடுப்பதில்லை — சந்திப்பதற்குக் கூட சந்தர்ப்பங்கள் கொடுப்பதில்லை... இந்நிலைமையானது அரசாங்கத்தை எதிர்ப்பவர்களுக்கு மட்டுமல்ல,,,,ஐக்கிய தேசியக் கட்சியோடு ஒட்டியிருப்பவர்களுக்கு அதை விட மிக்ப் பரிதாபகரமான நிலை....கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக யூ. என். பி. அரசாங்கத்தோடு ஒட்டியே அமைச்சர்களாகக் காலத்தை ஓட்டி வரும் இ.தொ.கா. தொண்டமான், ஏ.சி.எஸ். ஹமீத், எம்.எச். மொகமத் போன்றோருக்கும் கூட இதுதான் நிலை.

திருவாளர் மொகமத், திடீரென ஒரு நாள், தான் யாழ்ப்பாணம் போகப் போவதாகவும்,. பிரபாகரனைச் சந்திக்கப் போவதாகவும், இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப் போவதாகவும் அறிக்கை விட்டார்.....

## காலைப் பிடிப்பதிலும் ஒரு சண்டித்தனம்

இலங்கையின் இனப்பிரச்சினையை இராணுவரீதியாகத் தீர்க்க முடியாது,,,,,அரசியற் தீர்வே காணப்படவேண்டும் என வேகம் வேகமாக விளக்கங்களும் தந்தார்..... பின்னர் அதைப்பற்றிய பேச்சையும் காணவில்லை மூச்சையும் காணவில்லை.....அவர் தொல்லை தராது நல்ல பிள்ளையாக இருக்கும் வரை தொடர்ந்தும் பதவி இருக்கும் என ஜனாதிபதி ரகசியமாகக் கூறிவிட்டார் போலும். அதுதானே மொகமத்துக்கும் தேவைப்பட்டது. இனப்பிரச்சினை தீர்ந்ததோ இல்லையோ மொகமத்தின் பிரச்சினைக்குத் தற்காலிகமான தீர்வு கிடைத்து விட்டதாகவே தெரிகின்றது.

இதேபோலவே, இ.தொ.கா. தொண்டமானும் மற்றொரு புறம் முனைந்தார். ஆனால் இவர் மொகமத்தைப் போலல்லாது தன்னைத் தானே சங்கடத்துக்குள் இழுத்துக் கொண்டுள்ளார்.

பிரேமதாசா இறந்து மூன்று மாதங்கள் வரை எதுவும் பேசாதிருந்த தொண்டமான் திடீரென ஐரோப்பிய விஜயம் ஒன்றை மேற்கொண்டார்,,,,, அங்கு பல்வேறு இடங்களிலும் புலிகளின் வீரப்பிரதாபங்களைப் பற்றி பிரச்சாரங்கள் செய்தார்...,,, கொழும்பு திரும்பியவுடன் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக அறிக்கைகள் வெளியிட்டார்.,,,,

## ....மூஞ்சூருக்கு ஒரு விளக்குமாறு வேற.....

பாரிஸ் புலி திலகர் சமாதானத் திட்டம் ஒன்றைத் தன்னிடம் முன்வைத்திருப்பதாகவும்,,,

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குரியதான சூழல் ஒன்று ஏற்பட்டிருப்பதாகவும்,,,

இது தொடர்பாக அரசுக்கும் புலிகளுக்கு மிடையில் மத்தியஸ்தம் வகிக்கப் போவதாவும் ,,,,

தேவையேற்படின் யாழ்ப்பாணம் சென்று வரவும் தயார் என்றும் அந்த அறிக்கைகளிற் கூறினார்.

இது இன்று நேற்றல்ல, நீண்ட காலமாக இப்படித்தான், சிங்கள இனவாத அரசாங்கங்களோடு ஒட்டி நிற்கும் தமிழ் அரசியல் வாதிகள் தமக்கு ஒரு முக்கியத்துவத்தைத் தேடிக் கொள்வதற்கு இப்படியான அறிக்கைகளை வெளியிடுவது ஒரு மரபாகும்.



படிப்பகம்

www.padippakam.com



புலிகளின் துரோகத்தனத்தையும்,, முட்டாள்த் தனத்தையும் நன்கு விளங்கிக் கொண்டுள்ள தொண்டமானுக்கு இது மிகவும் வசதி யான விளையாட்டாகும்.

இதற்கு முன்னர் இப்படியான அறிக்கைகளை வெளியிட்ட போது, பிரேமதாசாவினாலும், ஏனையோராலும் அதற்கு ஓர் முக்கி யத்துவம் அளிக்கப்பட்டது. .

ஆனால், இம்முறை, யாரும் அதனைக் கண்ட கொள்ள வில்லை.

## தவளையும் தன் வாயால் கெடும்!

ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் அரசாங்கத்திலும், பிரேமதா சாவின் அரசாங்கத்திலும் தொண்டமானுக்கு ஒரு முக்கியத்துவம் இருந்து வந்தது.....தொண்டமானைத் தமது அமைச்சரவையில் வைத்திருந்த அதேவேளை அவரினதும் அவரது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸினதும் தனித்துவமான அரசியல் மற்றும் ஸ்தாபன நிலைப்பாடுகளையும், செயற்பாடுகளையும் சகித்துக் கொண்டனர்.....இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் மக்களைப் பிரித்தா ளும் தந்திரத்தின் ஒரு பகுதியாக அந்த அணுகுமுறையைப் பொறு மையோடு கடைப்பிடித்து வந்தனர்...

இப்போதைய ஜனாதிபதி விஜயதுங்கா தொண்டமா னையோ அல்லது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸையோ தனது அரசாங்கத்தைத் தாங்கி நிற்கும் சக்தியாகக் கருதவில்லை..... அப்படியொரு நிலைமை இருப்பதையோ அல்லது அப்படியான தொரு நிலைமை ஏற்படுவதையோ அனுமதிக்கக் கூடாது என்பதே விஜயதுங்காவின் நோக்கமாகக் காணப்படுகின்றது.

விஜயதுங்கா இவ்விடயத்தை வெவ்வேறு விதங்களில் வெளிப்படையாகச் சொல்லத் தொடங்கி விட்டார்.

இதன் விளைவாக தனது எதிர்காலம் பற்றிக் கடுமையா கக் கவலைப் படத் தொடங்கிய திரு தொண்டமான் அவர்கள் விஜயதுங்காவுடன் பலப்பரீட்சையில் இறங்கினார்.....ஐக்கிய தேசி யக் கட்சிக்கு தனது சக்தியைக் காட்ட முனைந்தார்.

தன்னைப் புறக்கணித்தால், ஐக்கிய தேசியக் கட்சி ஆளும் பலத்தை இழக்கும் என்பதை ஐ. தே. க.வின் ஆளுகையின் கீழ் இருக்கும் ஒரு மாகாணசபையைக் கவிழ்ப்பதன் மூலம் விஜயதுங் காவுக்கு நிரூபித்துக் காட்டும் நோக்கில் தொண்டமான் அவர்கள் மத்திய மாகாண சபையைத் தமது பரிசோதனைக் களமாகத் தேர்ந் தெடுத்தார்.

மத்திய மாகாண சபையில் எதிர்க் கட்சிகள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரவும் ,,,, அதனைத் தனது கட்சிக் காரர்கள் ஆதரிக்கவும்,,,,, அதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அங்கு கவிழவும் ,,,,, அதன் மூலம் தனது பலம் தேசிய ரீதியில் உணரப் படவும் என்ற தனது நீண்ட மற்றும் நீண்டகால நோக்கங்களுடன் தொண்டமான் எதிர்க் கட்சிகளுடன் ரகசியப் பேச்சுவார்த்தையில் இறங்கினார். !!!!!!

எதிர்க்கட்சிகள் தொண்டமானை நம்பினவோ? இல் லையோ? எதிர்கட்சிகளுக்கும் அவ்வாறான தொரு தேவை இருந் தது. மத்திய மாகாண சபையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது....

இலங்கையில் இனப்பிரச்சினை தீர வேண்டும்.. இலங்கை யில் இனரீதியான அமைதி ஏற்பட வேண்டும்.... தமிழ் மக்கள் அனைவரும் தமது அடிப்படை உரிமைகளோடும் பாதுகாப்பாக வும் வாழும் நிலை ஏற்பட வேண்டும்..... இலங்கையில் நல்லாட்சி ஏற்பட வேண்டும்..... பொருளாதார ரீதியான முன்னேற்றம் ஓங்க வேண்டும்.....சமூக கலாச்சார ரீதியாக நன்நிலைமைகள் நாட்டில் நிலைநாட்டப் படவேண்டும்....என்பவையா தொண்டமானின் நோக்கங்கள் ?

தொண்டமானின் நோக்கமெல்லாம், மத்திய மாகாண சபை யில் கொண்டு வரப்பட விருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத் துக்கு ஆதரவாக தனது கட்சிக்காரர்கள் வாக்களிக்கப் போகின்றார் கள் என்பதை விஜயதுங்கா தெரிந்து கொள்ள வேண்டும்..... அதற் குப் பயந்தாவது விஜயதுங்கா தன்னை அழைத்துப் பேச வேண் டும்...... அப்போது தனது தேவைகளுக்கான பேரங்களைத் தவறா மற் பேசிக் கொள்ள வேண்டும்.

இந்த அடிப்படை நோக்கங்களைக் கொண்ட தொண்ட மான், தனது கட்சிக்காரர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்குச் சார்பாக வாக்களிக்கப் போகின்றார்கள் என்ற விடயத்தை ரகசிய மாக வைத்துக் கொள்ளவில்லை..... பகிரங்கமாகவே அதற்கான தயாரிப்புக்களை மேற்கொண்டார்....

தொண்டமான் எதிர்பார்த்தது போல விஜயதுங்கா தொண் டமானுடன் பேச்சுவார்த்தை நடத்தும் முயற்சிகளில் ஈடுபட வில்லை.... மாறாக, தொண்டமானின் ஆதரவு இல்லாமலேயே மத்திய மாகாண சபையில் தனது ஆட்சியைக் காபந்து பண்ணிக் கொள்ளத் திட்டமிட்டார்.... செயற்பாடுகளில் இறங்கினார்.

தனது கண்டிய 'வளவு கார' சிங்களப் பெருமிதத்தை நிலை நாட்டும் நோக்குடன் விஜயதுங்கா செயற்பட்டார்.



படிப்பகம்

www.padippakam.com



## ..ஓ நீயுமா? ...செல்லச்சாமி!!!

இதுகால வரை தொண்டமானின் வலது கரமாகக் கருதப் பட்டவரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செய லாளரும், விஜயதுங்காவின் அமைச்சரவையில் அரை அமைச்சரா கவும் உள்ள செல்லச்சாமியை விஜயதுங்கா தனக்குச் சார்பாக வளைத்துப் பிடித்துக் கொண்டார்.

கடந்த காலத்தில் எந்த சந்தர்ப்பத்திலும் ஜே. ஆர். ஜெய வர்த்தனாவோ அல்லது பிரேமதாசாவோ, தொண்டமான் பேரம் பேச முனைந்த வேளைகளில் தொண்டமானோடுதான் பேசிக் கொண்டார்களே தவிர தொண்டமானின் கட்சிக்குள் புகுந்து தொண்டமானைப் பலவீனப்படுத்தும் வேலைகள் எதிலும் ஈடுபட வில்லை..... தொண்டமானின் எதிர்பார்க்கையும் அப்படித்தான் இருந்தது..

ஆனால், விஜயதுங்கா அந்த மரபுக்கு மாறாக, தொண்டமா னின் சவாலை எதிர் நோக்குவதற்கு, தொண்டமானின் கட்சிக்குள் ளேயே புகுந்து விளையாடி அங்கு பிளவுகளை ஏற்படுத்தி, அத னைத் தனக்குச் சார்பாகப் பயன்படுத்தத் தொடங்கினார்.

மத்திய மாகாண அரசின் ஆட்சியிலிருந்து ஐ. தே. கட்சியை அகற் றும் திட்டத்தில் தொண்டமான் தோல்வியுற்றார்.....' சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி' என்பது போல் தொண்டமா னின் இப்போதைய நிலை.

இப்போது தொண்டமான் புலிகளுடன் பேச்சுவார்த்தை என்ற விடயத்தையும் விட்டுவிட்டார் ..... விஜயதுங்காவுக்கு சவால் விடுவதையும் நிறுத்திக் கொண்டார் .......

தான் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசினால் எல்லாம் சுமுக மாகி விடும் என்று இப்போது கூறுகின்றார்.

## இ.தொ.கா.வின் இந்த வருட இறுதிக் கணக்கு :-

திரு. சௌமியமூர்த்தி. தொண்டமான் அவர்களின் இந்த நாடகத்தின் விளைவுகள் பின்வருமாறு:-

1. விஜயதுங்காவுடனான உறவை மேலும் கசப்பானதாக்கிக் கொண்டார். கடந்த முப்பது ஆண்டுகளாக ஐக்கிய தேசியக் கட்சியு டன் ஒட்டு வாழ்க்கை நடாத்தி அதன் அரசாங்கத்தைப் பல்வேறு நெருக்கடியான சந்தர்ப்பங்களிலும் பாதுகாத்து வந்த தொண்ட மான் இன்று எந்த நேரத்திலும் ஐ. தே. க. வின் அரசாங்கத்திலிருந்து கறிவேப்பிலையைப் போற் தூக்கி எறியப்படக்கூடும் என்ற நிலைமைக்கு உள்ளாக்கப் பட்டுள்ளார். .

2. செல்லச்சாமியையும், மத்திய மாகாண சபையின் உறுப் பினர்களாயிருக்கும் தனது கட்சிக்காரர்கள் சிலரையும் இழந் தார். இவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் அரச அதிகாரம், பணபலம் என்பவற்றுடன் இலங்கைத் தொழிலாளர் காங்கிர ஸைப் பிளவு படுத்தும் நடவடிக்கைகளில் மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்..... முன்னர் தொண்டமான் தனக்கு எதிராக மலையகத்து இளைஞர்கள் குரல் எழுப்பிய போதெல் லாம் ஐ. தே. கட்சியின் அரச அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்தக் குரல்வளைகளை நசுக்கிய தொண்டமான் இப்போது அதே ஐ. தே. க. வின் அரச அதிகாரத்தினால் பலவீனப்படுத்தப் படும் நிலைக்குத் தம்மை உள்ளாகியிருக்கின்றார்.

மலையக மக்களின் வாக்குரிமை, குடியுரிமைகளைப் பறித்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு கடந்த முப்பது ஆண்டுகளா கச் சேவை செய்த தொண்டமானுக்கு விஜயதுங்காவிடம் இருந்து கிடைத்த பரிசு இதுதான்.

1972ம் ஆண்டு, 1975ம் ஆண்டு உருவாக்கப்பட்ட சட்டங்களின் பிரகாரம் மலையகத் தோட்டங்கள் தேசியமய மாக்கப்பட்டன........ அத்தோட்டங்கள் அரச கூட்டுத்தாபனங் களாகச் செயற்பட்டு வந்தன...... உலகிலேயே தேயிலை உற் பத்தியில் இலங்கை முதலாம் இடத்தில் இருந்தது..... இந்தியா தனது தேயிலை உற்பத்தியை மிக வேகமாக விரிவாக்கியதன் விளைவாக, இலங்கை தேயிலை உற்பத்தியில் அளவு ரீதியில் இரண்டாம் இடத்துக்கு தள்ளப்பட்டது..... ஆயினும், தேயிலை உற்பத்தியின் தரம் என்ற ரீதியில் இலங்கை முதலாம் இடத் தையே வகித்து வந்தது.

ஆனால், தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டதைத் தொடர்ந்து, உலகில் இலங்கைத் தேயிலையின் தரம் இரண் டாம், மூன்றாம் இடங்களுக்கு என படிப்படியாக தரமிறங்கி யது...... அத்துடன் தோட்டங்கள் பெரும்பாலும் நட்டத்தில் இயங்குவதாக அரசாங்கம் கணக்குக் காட்டத் தொடங்கியது.

இந்த நிலைமைகளைக் காரணம் காட்டி, முன்னாள் அரச அதிபர் பிரேமதாசா பெருந்தோட்டங்களை மக்கள் மய மாக்கப் போவதாகக் கூறினார்..... உண்மையில் பிரேமதாசா அவர்கள் தன்னுடைய தனியார் மயமாக்க நடவடிக்கை ளுக்கு இட்ட பெயரே இந்த 'மக்கள் மயமாக்கம்' என்பதாகும்.



படிப்பகம்

www.padippakam.com



## சிங்கள மயமாகும் தேசியமயம்

பிரேமதாசா உயிரோடு இருந்தவரை, பிரேமதாசாவின் இந்த 'மக்கள் மயமாக்கத்தில்' தேயிலைத் தோட்டங்களைப் பொறுத்த வரையில் தனக்கும் உரிய பங்கு உண்டு என்பதில் தொண்டமான் அவர்களுக்கு சந்தேகம் இருக்கவில்லை..... ஆனால், பிரேமதாசா போனதன் பின்னர் ஏனைய விடயங்களைப் போலவே இந்த விடயத்திலும் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன....... விஜய துங்கா அவர்கள் பிரேமதாசாவின் 'மக்கள் மயமாக்கத் திட்டங்களை' சிங்கள மயமாக்கத் திட்டங்களாக பகிரங்கமாக, சொல்லியும் செய்தும் வருகின்றார்......

இதன் விளைவாக, தொண்டமானோ அல்லது தொண்டமானுக்கு வேண்டியவர்களோ தனியார் மயமாக்கப்படும் தோட்டங்களில் பங்குபெற முடியாதவர்கள் ஆக்கப்பட்டிருக் கிறார்கள்.....

தொண்டமானின் பிரச்சினைகள் ஒருபுறமிருக்க, விஜய துங்காவின் ஆட்சியின் கீழ் பெருந்தோட்டங்கள் தனியார் மயப்படுத்தும் நடவடிக்கைகள் பௌத்த – சிங்களப் பேரினவாதத்தின் மற்றொரு மிகப் பிரதானமான சமூக – அரசியல் நடவடிக்கையாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமானது முன்னர் சிறிமாவோ அரசாங்கத்தினால் அரசுமயமாக்கப்பட்ட பெருந்தோட்ட நிலங்களில் ஒரு பகுதியை சிறு தோட்டங்களாக சிங்களவர்களுக்கு பகிர்ந்து கொடுத்து வருகின்றது....... அவ்வாறு பகிர்ந்து கொடுக்கும் நடவடிக்கையானது இப்போது பரவலாகவும் வேகமாகவும் மேற்கொள்ளப்படுகின்றது...... மலையகத்தில் தமிழர்கள் குவியலாக வாழ்ந்து வரும் பகுதிகளைச் சிங்களமயமாக்குவதுவும், படிப்படியாக மலையக மக்களில் ஒரு பகுதியினரை மலையகத்திலிருந்து வெளியேற்றுவதுவும் இதன் நோக்கங்களாக இருந்து வருகின்றன.......

இந்த நடவடிக்கைகள் 1977ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்த உடனேயே ஆரம்பித்துவிட்டன. அப்போது, மலையகத்து இளைஞர் அமைப்புக்கள் இது தொடர்பாகக் குரலெழுப்பின. தொண்டமான் அப்போது மௌனமாக இருந்தது மட்டுமல்ல, அந்த இளைஞர் அமைப்புக்களை ஐ. தே. க. அரசின் துணை கொண்டு அடக்கும் நடவடிக்கைகளில்தான் அக்கறை காட்டினார்.

மேலும், சிறி லங்கா அரசானது இந்தியாவுக்கு அனுப்பப்பட வேண்டிய மலையகத் தமிழர்களை, இந்தியாவுக்குத் துரத்துவதற்கான மறைமுக நெருக்கடித் தந்திரமாகவும் அரசு இதனை மேற்கொண்டு வருகின்றது.

மேலும், இலங்கையின் பொருளாதாரத்தில் மலையகத் தமிழ் மக்கள் ஒரு சக்தியாகத் தொடர்ந்தும் இருப்பதையோ, அந்த மக்களின் மீது இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் கொண்டிருக்கும் செல்வாக்கானது இலங்கையின் அரசியல் – பொருளாதார அமைப்பின் மீதான செல்வாக்காக அமைந்திருப்பதையோ சிங்கள இனவாத அரசுகள் எப்போதுமே விரும்பியதில்லை......

இலங்கை பிரித்தானியரிடமிருந்து விடுபட்ட நாள் தொட்டு சிங்கள இனவாதிகளின் இந்த மன உழைச்சல்கள், நோக்கங்கள் அனைத்தும் அவ்வப்போது மலையக மக்களுக்கு எதிரான பல்வேறு சட்டங்களாகவும் நடவடிக்கைகளாகவும் வெளிப்பட்டு வந்திருக்கின்றன.

## இ.தொ.க. தொண்டமானுக்கு இனியாவது உறைக்குமா?

இடையில், வடக்கு – கிழக்கில் தமிழர்களின போராட்டம் உக்கிரமடைந்ததைத் தொடர்ந்தும், இலங்கையின் விவகாரத்தில் இந்தியா தலையிட ஆரம்பித்ததைத் தொடர்ந்தும் சிறி லங்கா அரசு மலையக மக்கள் தொடர்பான தனது இனவாத நடவடிக்கைகளை தந்திரோபாயக் காரணங்களுக்காகத் தற்காலிகமாகத் தள்ளிப் போட்டிருந்தது......

இப்போது, வடக்கு – கிழக்கில் போராட்டமானது சீரழிந்து போயிருப்பதனாலும், இந்தியாவானது எவ்வாறாயினும் இலங்கை அரசுடன் நல்லுறவைக் கடைப்பிடிப்பது என்ற கொள்கையைக் கடைப்பிடித்து வருவதனாலும், சிறி லங்கா அரசானது நீண்ட காலமாக ஒத்திப் போடப்பட்டிருந்த, மலையக மக்கள் மீதான தனது பேரின வாத நடவடிக்கைகளை மீண்டும் தொடக்கியிருக்கின்றது...... இது ஒன்றும் புதிய விடயமல்ல.....

இலங்கையின் வடக்கு – கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளும் மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினைகளும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தவை.... சிங்களப் பேரின வாதிகளின் ஒரே நோக்கங்களின் இரு பக்கங்களாக அவர்களுக்கு உள்ள பிரச்சினைகளே இவை ...... சிங்களப் பேரினவாதத்துக்கு எதிராக வடக்கு – கிழக்கு மக்களும் மலையக மக்களும் ஒன்றிணைந்து ஒருமுகமாகப் போராட வேண்டும் என்பதை தொண்டமான் எந்தக் கட்டத்திலும் ஏற்றுக் கொண்டதில்லை.....



படிப்பகம்

www.padippakam.com



ஆனால், எப்போதும் தமக்கு ஏற்ற தக்க தருணம் பார்த்துச் செயற்பட்டு வரும் சிங்களப் பேரினவாதிகள் இப்போது மீண்டும் மலையக மக்களுக்கு எதிராகவும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு எதிராகவும் தமது நடவடிக்கைகளைத் துரிதப் படுத்தியிருக்கிறார்கள்.

## விஜயதுங்காவின் வீர முழக்கங்கள்

இலங்கை பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்ற நாளான பெப்ரவரி 4ந் திகதியன்று ஜனாதிபதி விஜயதுங்கா நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் எந்தவித ஒளிவு மறைவின்றி தனது சிங்களப் பேரினவாத அரசியல் நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கிறார்.

அவர் தமது உரையில், 'ஒரு பக்கம் புலிகள் ஈழம் கேட்கும் அதே வேளை, மலையகத் தமிழர்கள் தமக்கு தோட்டங்களைக் கேட்கிறார்கள். அதற்கு நாங்கள் ஒத்துக் கொள்வோமா? ஒருக்காலும் இல்லை.' எனக் கூறினார்.....

அவர் மேலும் பேசுகையில், 'பிரித்தானிய அரசாங்கம் பெருந் தோட்ட நிலங்களை அதன் சொந்தக் காரர்களிடமிருந்து சிறிய அளவில் விலை கொடுத்து எடுத்துக் கொண்டது. இப்போது அந்த நிலங்களை மலையகத் தமிழர்களுக்குப் பகிர்ந்து கொடுப்போமாயின் மக்கள் எம் மீது சாபமிடுவார்கள். இந்த நாட்டின் பெரும்பான்மையானவர்கள் சிங்களவர்களே. ஆகவே, சிங்களவர்களே இந்த நாட்டை ஆள வேண்டும். கடந்த காலங்களில் அவர்களே ஆண்டு வந்திருக்கிறார்கள்., இனியும் அவர்களே ஆளுவார்கள். சிறுபான்மையினத்தவர்கள் அவர்களுக்கு (சிங்கள ஆட்சியாளர்களுக்கு) உதவியாளர்களாகவும் ஆலோசகர்களாகவும் இருத்தல் வேண்டும்.' எனக் கூறினார்.

விஜயதுங்காவின் பேருரையில் வெளிப்படையாகவே அடங்கியுள்ள கருத்துக்களைப் பின்வருமாறு நாம் தொகுத்துக் கொள்ளலாம். அவை:-

1)முதலாவது, மலையக மக்களை விஜயதுங்கா மக்களாகக் கருதவில்லை. அவர்கள் கூலிகளாக வந்தவர்கள். கூலிகளாகவே வைக்கப்பட்டிருந்தவர்கள். கூலிகளாகவே இருந்து போக வேண்டும். மலையகத்தின் அனைத்து அசையாச் சொத்துக்களும் சிங்களவர்களுக்கே உரியவை. அவற்றின் மீது எந்த வகையிலும் மலையகத் தமிழர்களுக்கு பங்கில்லை என்பதே அவரின் விளக்கம்.

2) இரண்டாவது, வடக்கு – கிழக்கு தமிழர்களோ அல்லது மலையகத் தமிழர்களோ அல்லது முஸ்லிம்களோ இனிமேல் இலங்கையின் ஆட்சி அதிகாரத்தில் பங்குதாரர்களாகக் கருதப்படமாட்டார்கள் என்பது. ......... இலங்கையிலுள்ள சிறுபான்மை மக்களை இனிமேல் பிரித்தாள வேண்டியதில்லை., ......... சிறுபான்மை இனத்தவர்களை மொத்தமாக அடக்கி ஆளும் ஆற்றலை சிங்கள இனவாதிகள் பெற்றுக் கொண்டுள்ளார்கள் என்றே விஜயதுங்கா நம்புகிறார்..... கூறுகின்றார்........

3) மூன்றாவதாக, இலங்கையிலுள்ள சிறுபான்மையினர்கள், சிங்கள ஆட்சியாளர்களினால் கொடுக்கப் படுவதை கைகட்டி வாய் பொத்தி பெற்றுக் கொள்ள வேண்டியதே தவிர, .......... மாறாக, இலங்கையின் அரசியலிலோ, பொருளாதாரத்திலோ உரிமை எதுவும் கிடையாது.... ......... உரிமை எதுவும் கோரக் கூடாது என வலியுறுத்துகிறார்.

விஜயதுங்காவின் இந்தப் பகிரங்கமான உரைக்குப் பின்னராவது தொண்டமான் அவர்கள் இலங்கைவாழ் தமிழ் மக்களின் அரசியல் விவகாரத்தில் இந்த''ஆடு – புலி ஆட்டம்'''''' ஆடுவதை நிறுத்தி விட்டு உண்மையாகவும் நேர்மையாகவும் செயற்பட முன்வருவாரா என்பதை அவரிடம் தான் கேட்க வேண்டும் ........ பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## கொலைகார வெறியர்களுக்கு தமிழரென்ன? சிங்களவரென்ன?

தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்தை அடக்கும் நோக்குடன் 1979ம் ஆண்டு சிறி லங்கா அரசானது பயங்கரவாதத் தடைச்சட்டம் என்ற பெயரில் தனது இராணுவத்தைக் கட்டவிழ்த்து ஏவிவிடும் சட்டம் ஒன்றை உருவாக்கி அதனைச் செயற்பட வைத்தது. ....... .......... இவ்வாறு ஆரம்பித்த இராணுவ நடவடிக்கைகள் பின்னர் படிப்படியாக விரிவடைந்து,...... ஒரு கட்டத்தின் பின்னர் அரச இராணுவம் கட்டுப்பாடு எதுவுமற்ற ரீதியில் தமிழ் இளைஞர்களைக் கைது செய்வதிலும்,...., கொலைகள் செய்வதிலும், ..... தமிழ் மக்கள் மீது கண்மூடித்தனமாகவும் விளையாட்டாகவும் துப்பாக்கிப் பிரயோகங்கள் செய்தலும் சர்வசாதாரணமாகின.

இதன் விளைவாக, 1983ம் ஆண்டிற்கும் 1987ம் ஆண்டிற்கும் இடைப்பட்ட சுமார் மூன்றரை ஆண்டுகளில் பதினைந்தாயிரத்



படிப்பகம்

www.padippakam.com



துக்கும் மேல் தமிழர்கள் கொல்லப்பட்டார்கள்...... அப்போது மூவாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் அரச படைகளி னாற் கைது செய்யப் பட்டு காணாமற் போயினர்...... இது தொடர் பாக தமிழ் இயக்கங்களும், பல்வேறு மனித உரிமை இயக்கங்களும் குரல் எழுப்பியும் கூட எந்தவித பயனுமில்லாமற் போனது. சிறி லங்கா அரசைப் பொறுத்த வரையில் அது செவிடன் காதில் ஊதிய சங்காகவே அமைந்தது.

அப்போது, சிங்கள மக்கள் மத்தியிலுள்ள ஒரு சில முற் போக்கு சக்திகளையும், ஒரு சில மனித உரிமை அமைப்புக்களை யும் தவிர, ......... ஏனைய பெரும்பான்மையான சிங்கள மக் களோ அல்லது பெரிய சிங்களக் கட்சிகளோ அன்று தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இராணுவக் காட்டுமிராண்டித் தனத்தை ஒரு பிரச்சினைக்குரிய விவகாரமாகவோ ,அல்லது ஆபத்தான தொரு விடயமாகவோ கண்டு கொள்ளவில்லை.

## ஆடிய ஆட்டமென்ன?

## தேடிய முடிவுகள் என்ன?

மக்கள் மீது கொடூரங்களை எப்படி மேற்கொள்வது என் பதை தமிழ் மக்கள் மீது நடாத்திப் பழக்கப்பட்ட —— பயிற்சி எடுத்துக் கொண்ட சிறி லங்கா அரசின் இராணுவமும் பொலிஸும் 1989ம் ஆண்டு சிங்களவர்கள் மீது அதைவிடப் பலமடங்கு மோச மான கொடூரங்களை நடாத்தினர்.

1989ம் ஆண்டு புலிகளைத் தனது பக்கம் சேர்த்துக் கொண்ட பிரேமதாசா அரசாங்கம் இந்திய அமைதி காக்கும் படை யினர் வடக்கு – கிழக்கை விட்டு வெளியேறுவதை உறுதிப் படுத்திக் கொண்டது..... ......... அதேவேளை, இந்திய அமைதிப்படை வெளியேறுவதற்கு முதலிலேயே ரோகண விஜயவீராவின் 'மக்கள் விடுதலை முன்னணி'யினரையும் முற்றாக அழித்து ஒழித்து விட வும் தீர்மானித்தது.

ஏனெனில், இந்திய அமைதிப் படையினர் வெளியேறிய தன் பின்னர் வடக்கு – கிழக்கில் தனது அதிகாரத்தை நிலைநாட்டுவ தற்கு பெருந்தொகையில் இராணுவம் அனுப்பப்படவேண்டும். இந் நிலையில் விஜயவீராவின் குழுவினரும் 1971ம் ஆண்டைப் போல ஆயுதக் கிளர்ச்சியில் இறங்கினால் அரசு தோல்வியையே தழுவ வேண்டியிருக்கும் என்ற கணிப்பின் அடிப்படையிலேயே வடக்கு – கிழக்கில் இந்திய அமைதிப் படை இருக்கும் அதே காலத்திலேயே எப்படியாவது விஜயவீரா குழுவினரையும் அதன் ஆதரவாளர்க ளையும் முற்றாக அழித்துவிட திட்டமிட்டது.... ......... ........ இத் திட்டத்தை விரும்பியபடியும் வேண்டியபடியும் நடைமுறைப்ப டுத்த அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னாவுக் கும், இராணுவ உயர் அதிகாரிகளுக்கும் அப்போதைய ஜனாதிபதி பிரேமதாசாவினால் பூரண சுதந்திரம் வழங்கப்பட்டது.

அதேவேளை விஜயவீரா குழுவினரும் அரசின் திட்டத் துக்கு வசதியான முறையிலேயே தாமும் திட்டமிட்டுக் கொண்டனர் – செயற்பட்டனர்.... .......... இவர்கள் சிறி லங்கா அரசுக்கு எதி ரான பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொண்டது மட்டுமல் லாது, எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களிற்கு எதிராகவும் தமது பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொண்டனர்..... இதன் மூலம் அரசியல் ரீதியில் தம்மைத் தனிமைப் படுத்திக் கொண்டனர்..... சிங்கள மக்கள் மத்தியில் தமது செல்வாக்கை வளர்ப்பதற்கு இந்திய – இலங்கை சமாதான உடன்பாட்டிற்கும் இந்திய அமைதிப் படைக் கும் எதிரான பிரச்சாரங்களையே பயன்படுத்தினர். ..... ...... பிரே மதாசாவின் அரசாங்கத்தைப் போலவே விஜயவீரா குழுவினரும் இந்திய அமைதிப் படையினர் வெளியேறுவதற்கு முன்னரேயே தாங்கள் சிறி லங்காவின் அரச அதிகாரத்தைக் கைப்பற்றி விட முனைந்தனர்..... குறைந்த பட்சம் இந்தியப் படையினர் வெளியேறு வதற்கு முதலில் அரசைக் கைப்பற்றும் தமது நடவடிக்கைகளை உச்சகட்டத்துக்குக் கொண்டு சென்று விடவேண்டும். ....... ...... இவ்விடயத்தில் இந்திய அரசு தனது படைகளைக் கொண்டு சிறி லங்கா அரசுக்குப் பாதுகாப்பு அளிக்குமானால் அதற்கு எதிராக 1971ஐப் போலல்லாமல், இப்போது சிங்கள மக்கள் மயப்பட்ட போராட்டத்தை இந்தியப் படைகளுக்கு எதிராக நடாத்தும் வாய்ப்பு ஏற்படும் என்றும் மக்கள் முன்னணியினர் கருதினர்.

ஆக மொத்தத்தில், சிறி லங்கா அரசும், விஜயவீரா குழுவி னரும் இந்தியப் படைகள் இலங்கையை விட்டு வெளியேறுவதற்கு முன்னரே ஒருவர் மீதான மற்றவரின் வெற்றியை உறுதிப் படுத்திக் கொள்ள முனைந்தனர்..

சிறி லங்கா அரசும், விஜயவீரா குழுவினரும் அனைத்து வகைப்பட்ட அநாகரீகச் செயல்களையும் கொஞ்சம் கூடத் தயவு தாட்சண்யமின்றி மேற்கொண்டனர்..... எல்லா வகைப்பட்ட அரா ஜகக் கொடூரங்களையும் கட்டவிழ்த்து விட்டனர்......



படிப்பகம்

www.padippakam.com



அதன் இறுதி முடிவு, மொத்தத்தில் சுமார் ஒரு இலட்சம் சிங்களவர்கள் கொலை செய்யப் பட்டனர்.... ......... பல ஆயிரக்க ணக்கான சிங்கள இளைஞர்களுக்கு என்ன நடந்தது என இன்ன மும் அறியாது அவர்களின் பெற்றோர்கள் தவிக்கின்றனர்.... .......... பல நூற்றுக் கணக்கான பள்ளிக்கூடச் சிறுவர்கள் கூட இந்தக் கொலைவெறியர்களினால் கொன்று குவிக்கப் பட்டனர்..... பல நூற்றுக் கணக்கான புத்த பிக்குகள் உயிரோட எரித்துக் கொல்லப் பட்டனர்.

## மறைக்கப்பட்ட கொடூரங்கள் தோண்டப்படுகின்றன!

இந்தப் படுகொலைகள் தொடர்பாக ஒரு திறந்த நீதி விசார ணையைக் கோரி பல்லாயிரக் கணக்கான சிங்கள அன்னையர்கள் பல தடவைகள் பல்வேறு வகைப்பட்ட போராட்டங்களை நடாத்தி விட்டார்கள். ஆனால், சிறி லங்கா அரசு அதனைக் காதில் போட்டுக் கொள்ளத் தயாராக இருக்கவில்லை.... .......

இப்போது, திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்க ளின் மகளும், மறைந்த விஜய குமாரணதுங்காவின் மனைவியும், மேல் மாகாண முதலமைச்சருமான திருமதி சந்திரிகா அவர்கள் 1989ம் ஆண்டு சிறி லங்கா அரச படைகளினால் மேற்கொள்ளப் பட்ட கோரத்தனமான கொலைகளின் சாட்சியங்களாக உள்ள புதை குழிகளை உலகுக்கு அம்பலப்படுத்தி வருகிறார்.

அரசின் மிகக் கடுமையான பாதுகாப்பில் இருக்கும் ஒரு மலைப்பகுதியிலிருந்த இந்தப் புதைகுழிகளிலிருந்து அன்று கொல் லப்பட்ட பல சிறுவர்கள் மற்றும் புத்த பிக்குகளினது மண்டை ஓடுகளும், எலும்புக் கூடுகளும் திருமதி சந்திரிகாவினால் பல பிரமுகர்கள், பத்திரிகையாளர்கள் முன்னிலையில் மீட்கப்பட்டுள் ளன.

அரசு தனது படை பட்டாளங்களைக் கொண்டு மறைத்து விட முடியா வகையில், அரசின் கட்டுப்பாட்டின் கீழே உள்ள ஒருபகுதியிலிருந்த புதைகுழிகளில் அடக்கப்பட்டிருந்த கொடூர மான உண்மைகளை உலகு அறியும் வண்ணம் வெளிக்கொணர்ந்த மேல்மாகாண முதலமைச்சரின் செயல் சிங்கள மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பையும் திகிலையும் ஏற்படுத்தியுள்ளது.

## பதினெட்டு ஆண்டு கால ஐ.தே.க. ஆட்சியை சந்திரிகா மாற்றுவாரா?

அடிக்கடி பாரதூரமாக நோய் வாய்ப்பட்டு பாதிப்புக்கு உள்ளாகிவரும் சிறி மாவோ பண்டாரநாயக்கா அவர்கள் தற்செய லாக திடீரென இறந்து விட்டால் அது ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தான் ஜனாதிபதித் தேர்தலின் போது முழு வாய்ப்பாகிவிடும் என்ற கவலையும் அச்சமும் தென்னிலங்கை எதிர்க்கட்சிகள் மத்தியில் கடந்த சில ஆண்டுகளாக இருந்து வந்தன. .............. ஆனால் இப்போது அந்த அச்சம் பெரும்பாலும் நீங்கிவிட்டது என்றே கூறுதல் வேண்டும்.

சந்திரிகா குமாரணதுங்காவின் எழுச்சி புதியதொரு உற்சா கத்தை தென்னிலங்கையில் உள்ள இடதுசாரி மற்றும் முற்போக்கு ஜனநாயக சக்திகள் மத்தியில் தோற்றுவித்துள்ளது.

.......... தென்னிலங்கையில் நடைபெற்ற கடந்த மாகாணசபைத் தேர்தலின் போது இலங்கையிலேயே ஆகக்கூடுதலான வாக்கு களை அவர் மேல்மாகாணத்தில் பெற்றார் என்ற பெயரைப் பெற் றார். ......... தனது தந்தையையும் தாயையும் இலங்கையின் பிரதமர் களாகக் கண்ட இவர் முதலாவது பெண் முதலமைச்சராகப் பதவி யேற்றார்..

........ ஏனைய கட்சிக்காரர்களும் வியக்கும் வண்ணம் மிகச் சிறந்த கட்சி அமைப்பாளர் என்ற பெயரைப் பெற்றிருக்கிறார்.. .......... ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக மிகச் சிறந்த பிரச்சாரகராகவும் செயற்பட்டு வருகிறார்.

........... பிரபல நடிகராகவும், துணிச்சல் மிகுந்த அரசியல் வாதியா கவும் இருந்த இவரது கணவன் விஜயகுமாரணதுங்கா அரசியற் காரணங்களுக்காக படுகொலை செய்யப்பட்டதனால் இவர் வித வையானார் என்ற அநுதாப உணர்வுகளும் சிங்கள மக்கள் மத்தி யில் உள்ளன......

இவ்வாறாக, இலங்கையின் அரசியலில் சாதனைகளைச் சாதிப்பதற்குச் சாத்தியமான அம்சங்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ள இவர் இலங்கையின் ஜனாதிபதி ஆவாரா என்பதைப் பற்றி இப்போது திட்டவட்டமாகக் கூற முடியாது.....

..... ஆனால் அதை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றார் எனலாம்.



படிப்பகம்

www.padippakam.com

## புலிகளின் பிரதித் தலைவர்

# மாத்தையாவுக்கு மரண தண்டனை!

## 'காட்டிக் கொடுத்த தேசத் துரோகி' எனக் குற்றம்!

## துணை புரிந்த இருநூறு புலிகளும் படுகொலை!

## பெரிய புலி பிரபாகரனின் தீர்ப்பு.

### இந்தப் புலிகளை வளர்ப்பவர்களுக்கும், ஆதரவளிப்பவர் களுக்கும் இவர்களின் கதை ஒரு பாடமாகட்டும்!!!

1977ம் ஆண்டு தொடக்கம் தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்பில் ஒரு தீவிர (Hard Core) உறுப்பினராகவும், 1987ம் ஆண்டு இந்திய அமைதி காக்கும் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் யுத்தம் ஆரம்பித்த நாட்தொட்டு 'தமிழீழ விடுதலைப் புலிகளின்' பிரதித் தலைவராகவும் இருந்து வந்த 'மாத்தையா' எனவும் 'மாத்தையா சிறி' எனவும் நெருக்கமானவர்களால் 'சிறி' எனவும் அழைக்கப் பட்ட வல்வெட்டித் துறையைச் சேர்ந்த மகேந்திரராஜா புலிகளாலேயே மரணதண்டனைக்கு உள்ளாக்கப்பட்டிருக் கின்றார்.

பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக புலிகளின் இருப்பிலும், வாழ்விலும், வளர்ச்சியிலும், ...... ஏனைய தமிழ் அணிகளினுடைய பிரதானமான தலைவர்களையும், ........ சாதாரண உறுப்பினர்களையும் படுகொலைகள் செய்து ....... புலிகளின் அமைப்பைக் கட்டிக் காப்பதிலும் தன்னை முற்று முழுதாக அர்ப்ப ணித்து வந்துள்ள மாத்தையா சிறீ மகேந்திரராஜாவுக்கு இறுதியாக பிரபாகரன் வழங்கியுள்ள பரிசு மரணதண் டனை; ;;;;;;; அளித்துள்ள பட்டம் சமூகத் துரோகி, காட்டிக் கொடுத்த தேசத் துரோகி.

இது மாத்தையாவோடு மட்டும் முடியவில்லை மாத்தையாவோடு சேர்ந்து திரிந்து புலி அமைப்புக்காக உழைத்து வந்த இருநூறு துணைப் புலிகளும் பிரபாகரனின் மரணதண்டனைத் தீர்ப்புக்கு உள்ளாக்கப் பட்டு படுகொலை செய்யப் பட்டுள்ளனர்.

மாத்தையா, மற்றும் எண்பது பேர் என்ற எண்ணிக் கையானது பிரபாகரனின் புலிகளினால் உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது. ஆனால், மாத்தையாவுக்கு நெருக்கமான வட்டாரங்களின்படி, மாத்தையாவுக்குச் சார்பாகச் செயற்பட்டு வந்த இருநூறுக்கு மேற்பட்ட புலி உறுப்பினர்களும் அத்துடன் மாத்தையாவுடன் பணம், மற்றும் ஆயுதங்களின் மறைவிடங்கள் தொடர்பாகச் சம்பந்தப் பட்டிருந்த நூற்றுக் கணக்கான ஆதரவாளர் களும் படுகொலை செய்யப் பட்டிருக்கின்றார்கள்.

மாத்தையா பிரபாகரனின் சொந்த ஊர்க் காரன் என்பது மட்டுமல்ல, நெருங்கிய உறவினனும் கூட,.. புலிகளின் அமைப்பானது ஒரு வகையில், ஒரே ஊரைச் சேர்ந்த உறவினர்களின் தலைமையில் அமைந்த இயக்கமாகவே அமைக்கப் பட்டது..



படிப்பகம்

www.padippakam.com



## மாஃபியா மொடல் மாவீரர்கள்

.... அது ஆரம்ப காலங்களில் அவ்வாறானதாக இருக்க வில்லை. .. ஆனால், காலப்போக்கில் அவ்வாறானதோர் அமைப்பாகவே மாற்றம் பெற்றது. புலிகள் தம்மைப் பலப்படுத்திக் கொள்வதற்காக காலத்துக் காலம் மிகவும் பிற்போக்குத் தனமான முறைகளில் உள்ளூரிலும், வெளி நாடுகளிலும் உள்ள ஈழத் தமிழர்கள் மத்தியில் கமுக்கமான முறைகளில் ஊர், சாதி, தொழில் ஆகிய பிரச்சாரங்களைப் பயன்படுத்திக் கொண்டார்கள்....

1987ம் ஆண்டு இந்திய – இலங்கை சமாதான ஒப்பந்தக் காலகட்டத்தில் புலிகளின் தலைமையை நோக்குவோமாயின், பிரபாகரன், மாத்தையா, கிட்டு, புலிகளின் கிழக்கு மாகாணப் பொறுப்பாளராக இருந்த குமரப்பா ஆகிய அனைவருமே ஒரே ஊர்க்காரர்களும், உறவினர்களுமாவர்.....

புலிகளின் உத்தியோக பூர்வமான வெளியீடுகளின் பிரகாரம், மாத்தையாவுக்கான மரணதண்டனை கடந்துபோன ஜனவரி 16ந் திகதி நிறைவேற்றப்படும் என அறிவிக்கப் பட்டிருந்தது.

ஆனால் புலிகளின் ஒரு வட்டாரத்தினால் கூறப்படும் செய்திகளின்படி, மாத்தையா ஏற்கனவே கொல்லப்பட்டு விட்டார். ....... பலரும் இது பற்றிக் கேள்வி எழுப்பத் தொடங்கியதனாலேயே, இப்போது, பிரபாகரன் தனது நடவடிக்கைகளை நியாயப்படுத்த குற்றச்சாட்டுக்கள் என்றும், விசாரணை என்றும், மரணதண்டனைக்கான திகதி தீர்மானிக்கப்பட்டு விட்டதெனக் கூறுவதாகச் சொல்லுகின்றனர். ..........

இன்னொரு பகுதியினர், இன்னமும், மாத்தையா கொல்லப்படவில்லை என்றும், மாத்தையாவைக் கொன்றால், புலிகளுக்குள் நெருக்கடிகள் அதிகரிக்கும் என்பதனால் மாத்தையா இன்னமும் பிரபாகரனின் சிறைக்காவலில் வைக்கப்பட்டிருப்பதாகவும் கூறுகின்றனர்.

எவ்வாறாயினும், இவை புலிகளின் உறுப்பினர்களுக்கு மட்டுமே உரிய பிரச்சினையாகும். ......... ஆனால் புலிகளுக்கும், புலிகளின் ஆதரவாளர்களுக்கும் இந்த நிகழ்ச்சி மக்கள் மத்தியில் பெரும் சிரமங்களை ஏற்படுத்தியுள்ளது. ........... நேற்றுவரை 'புலிகளின் பிரதித் தலைவர்', 'தியாகச் செம்மல்', 'மகத்தான மாவீரன்', 'அஞ்சா நெஞ்சன்' என்று தங்களால் புகழாரம் சூட்டப்பட்டு வந்த ஒரு நபரை திடீரென அதே நாக்கால் 'தேசத் துரோகி', 'சமூகத் துரோகி', 'இந்திய உளவுப் படையின் ஒற்றன்', 'தேசத்தின் விடுதலைக்காக தனது காலைப் பலிகொடுத்த தேசத் தியாகி கிட்டுவை இந்தியக் கடற் படையினருக்குக் காட்டிக் கொடுத்த துரோகி' என்று நீண்ட ஒரு துரோகப் பட்டியலை மக்கள் மத்தியில் கொண்டு சென்று பிரச்சாரம் செய்ய வேண்டிய இக்கட்டான நிலைக்கு உள்ளாக்கப் பட்டிருக்கின்றார்கள்.

மாத்தையாவின் மரணதண்டனையோடு தொடர்பு படுத்தப்பட்ட கடந்த ஜனவரி 16ந் திகதி என்பது மற்றொரு பிரதான புலியாகிய கிட்டு இந்திய கடற்கரைப் படையினரால் சுற்றி வளைக்கப் பட்டபோது எரிந்து இறந்த ஒரு வருட பூர்த்தி தினமாகும்......

கிட்டுவின் ரகசியக் கடற் பயணத்தின் விபரங்களை இந்திய அரசுக்கு மாத்தையாதான் அறிவித்ததாக மாத்தையா மீது பிரபாகரன் வைத்துள்ள ஒரு குற்றச்சாட்டு..... மாத்தையாவும் கிட்டுவும் பல ஆண்டுகளாகவே பரம எதிரிகள்.....

மாத்தையாவுக்கு எதிராக பிரபாகரனால் திட்டமிட்டு வளர்க்கப் பட்ட ஆள்த்தான் கிட்டு.......

## வெலிக் கடையை வென்ற கந்தன் கருணை

இதனாற் தான் **1987ம் ஆண்டு மார்ச்சில் மாத்தையா தனது ஆட்களை வைத்து கிட்டுவின் மீது வெடிகுண்டு எறிந்ததுவும், அதனால் கிட்டு கால் இழக்க நேர்ந்ததுவும், பின்னர் அச்சம்பவத்தைத் திசை திருப்பும் வடிவில் தமது சிறைகளில் இருந்த ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள் அனைவரையும் பூட்டப்பட்ட அறைகளுக்கு உள்ளேயே வைத்து கட்டுப் படுகொலை செய்ததையும், கிட்டுவின் மீது அவ்வாறு குண்டெறிந்தவர்கள் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்காரர்கள்தான் எனப் பிரச்சாரம் செய்ததையும் இங்கு நினைவு படுத்துவது பொருத்தமாகும்.**

## காட்டிக் கொடுக்கும் பாரம்பரியம்

மேலும், **புலிகள் தம்மால் முடியாத கொலைகளையும் மற்றும் அழிப்பு வேலைகளையும் தமது மற்றொரு எதிரிக்கு அறியத் தந்து அவற்றைச் சாதிப்பது என்னும் தந்திரத்தை நீண்ட காலமாகவே பிரயோகித்து வருகின்றனர்...... 1985 – 86ம் ஆண்டுகளில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள் பலர் சிறி லங்கா அரச படையினரால் கடலிலும், தரையிலும் சுற்றி வளைக்கப் பட்ட பல சம்பவங்கள் புலிகளினால் கொடுக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டன....**



படிப்பகம்

www.padippakam.com



கிட்டுவின் ரகசியக் கடற்பயணம் பற்றி மாத்தையா இந்திய அரசுக்கு ரகசியத் தகவல் கொடுத்ததாகச் சொல்லப்படும் குற்றச்சாட்டு முழுக்க முழுக்கப் பொய்யாகவே இருக்கும் என்று கூறுவதற்கில்லை..... மாத்தையாவின் அவ்வாறானதொரு நடவடிக்கையானது புலிகளின் அடிப்படைக் குணாம்சத்தின் பகுதிகளே.... இவ்விடயத்தில் பிரபாகரனோ அல்லது மாத்தையாவோ வேறுபட்டவர்கள் அல்ல.

இதேவேளை மாத்தையா மீது மரணதண்டனை விதிப்பதற்காக பிரபாகரன் வைத்துள்ள குற்றச் சாட்டுக்கள் உண்மையானவை தான் என்று சொல்வதற்கும் இல்லை.......ஏனெனில், ***மாத்தையாவுக்கும் பிரபாகரனுக்கும் இடையில் கடந்த 10 ஆண்டுகளாகவே பகைமை இருந்து வந்துள்ளது. அதிலும் மேலாக, மாத்தையா மீது பிரபாகரனுக்கு 1979ம் ஆண்டிலிருந்தே ஒரு கறள் இருந்து வந்தது.....*** இந்த விடயங்களைத் தெரிந்து கொண்டால்த்தான் மாத்தையாவுக்கான பிரபாகரனின் மரணதண்டனையையும் புரிந்து கொள்ளமுடியும்.......

1974ம் ஆண்டு பிற்பகுதியில் புதிய தமிழ்ப் புலிகள் என்ற பெயரில் பிரபாகரனின் மானசீக மகாகுருவான செட்டி என அழைக்கப்பட்ட தனபாலசிங்கத்தின் தலைமையில் புலிகள் அமைப்பு உருவானது....... 1975ல் செட்டி சிறி லங்கா அரச படையினரால் கைது செய்யப் பட்டான்...... 1976ல் அந்தப் புலிகள் தமக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் எனப் பெயரிட்டனர்.

## புலிகளின் முதலாவது கட்டுப்பாடு

1979ம் ஆண்டு இந்தப் புலிகளுக்குள் உமாமகேஸ்வரன் – ஊர்மிளா தொடர்பு என்ற வடிவில் பிரபாகரனுக்கும் உமாமகேஸ்வரனுக்கும் இடையில் பகைமை தொடங்கியது. இந்த விடயத்தில் அப்போது பிரபாகரனுக்குச் சார்பாகவே புலிகளின் உறுப்பினர்களிற் பெரும்பாலானோர் கருத்துக் கொண்டிருந்தனர்.

அப்போது, புலிகளின் அமைப்பில் கடைப்பிடிக்கப்பட்ட இரண்டு பிரதானமான கட்டுப்பாடுகளில் ஒன்று, புலி உறுப்பினர்கள் எவரும் காதலிக்கக்கூடாது., இரண்டாவது, புலியில் உறுப்பினராக உள்ள எவரும் புலி அமைப்பை விட்டுப் பிரிந்து வேறெந்தவொரு அமைப்பிலும் சேரக்கூடாது. அத்துடன் அரசியலை விட்டு முற்றாக ஒதுங்கினாலும் கூட எந்த வேளையிலும் புலிகளின் நலன்களுக்குப் பாதகமாகச் செயற்படக் கூடாது என்பவையாகும்.

இதில் முதலாவது கட்டுப்பாட்டை மீறிய குற்றத்திற்காக அப்போது புலிகளின் உத்தியோக பூர்வமான தலைவராக இருந்த உமாமகேஸ்வரன் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. கடைசியில் அந்த ஒழுங்கு நடவடிக்கையானது உமாமகேஸ்வரன் கொல்லப்பட வேண்டியவர் என புலிகள் தீர்மானிப்பதில் முடிவடைந்தது.

உமாமகேஸ்வரனை ஒதுக்கி விட்டதன் பலனாக புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனே என்னும் நிலை ஏற்பட்டது..... உமாமகேஸ்வரன் புலிகளின் தலைவராக இருந்த காலத்திலும் கூட பிரபாகரனின் கைகளிலேயே உத்தியோக பூர்வமற்ற ரீதியில் புலிகளின் தலைமை ஆதிக்கம் இருந்தது என்பதுதான் உண்மை.... புலிகள் தொடர்பான மிகப் பிரதானமான முடிவுகள் எப்போதும் பிரபாகரனாலேயே நிர்ணயிக்கப்பட்டன.

(1990ம் ஆண்டு கொழும்பில் வைத்து உமாமகேஸ்வரனைக் கொலை செய்தவர்கள் யார்? என்பது இன்னமும் தெளிவாக வில்லை. புலிகளாற் கொலை செய்யப் பட்டதாக ஒரு சந்தேகம் நிலவுகின்ற அதே வேளை, மாலைதீவின் மீது மேற்கொள்ளப் பட்ட சதிப் புரட்சிக்கான முயற்சி தொடர்பாக உமாமகேஸ்வரன் குழுவினருக்கு உள்ளேயே நிலவிய உட்கட்சிப் பகைமையினால் அவர்களாலேயே கொல்லப்பட்டதாகவும் வலுவான சந்தேகங்கள் நிலவுகின்றன. அதன் விளக்கம் இங்கு தொடர்புடையது அல்ல.)

## முதலாவது கட்டுப்பாட்டை மீறிய முதலாவது நபர்

புலிகள் காதலிக்கக் கூடாது என்ற கட்டுப்பாடு பின்னர் 1984ம் ஆண்டு பிரபாகரன் மதிவதனியைக் காதலித்துக் கலியாணம் செய்த போது இல்லாமல் ஆக்கப்பட்டது. இதன் பின்னரே மாத்தையா, கிட்டு, குமரப்பா மற்றும் புலிகளின் தலைவர்கள் வேக வேகமாக காதல்களிலும் கலியாணங்களிலும் இறங்கினர்.

அதற்கு முதலில் பிரபாகரனைப் பற்றிபுலிகள் ------------ ***காதல்,,, கலியாணம்,,, குடும்பம்,,, உறவு,,, பந்தம்,,, பாசம்,,, தேநீர் (பால் மட்டும்தான் குடிப்பார்),,, சாதாரண தண்ணீர் (அடைக்கப்பட்ட போத்தல் நீர் அல்லது தரமான குளிர்பானங்கள் மட்டுமே தான் அருந்துவார்),,, பொழுது போக்குகள் ஆகிய சிற்றின்ப ஆசைகளை எல்லாம் துறந்து,,,,,, தமிழீழத்தையே தனது தாயாகவும், ,,,,,,, துப்பாக்கிகளையே தனது மனைவிகளாகவும் வரித்துக்கொண்டு,,,,,,, தேசத்துக்காகத் தன்னை வருத்தி அளப்பரிய தியாகங்கள் செய்து வரும் அண்ணல் பிரபாகரன் அடிகளார்*** என்றனர்.. தன்னைப் பற்றி பிரபாகரனும் அவ்வாறே கதையளந்தார்.



படிப்பகம்

www.padippakam.com



ஆனால், பின்னர் மதிவதனியைக் கண்டதும் 'உபதேசம் உனக்கல்லடி கண்ணே அது ஊருக்குத்தான்' என்ற பிரபாகரன், தனக்கென்று வந்த போது தனது சட்டங்களைத் தலைகீழாக மாற்றிக் கொண்டார்.

## புலிகளுக்குள் ஏற்பட்ட முதல் முறுகல்

புலிகள் காதல், கலியாணம் தொடர்பாகக் கொண்டிருந்த கட்டுப்பாட்டு விவகாரத்தில் மட்டுமல்ல. புலிகளின் அடுத்த பிரதானமான கட்டுப்பாட்டிலும் அதேமாதிரியான இன்னொரு கதையும் இருக்கின்றது.........அங்குதான் மாத்தையா பிரபாகரனின் பகைமையும் ஆரம்பமாகின்றது.

1979ம் ஆண்டு புலிகளுக்குள் உமாமகேஸ்வரனின் பிரச்சினை ஒரு பக்கம் இருக்க அடுத்த கட்டமாக, போராட்டம் தொடர்பான மூல உபாய நிர்ணயங்கள் தொடர்பாகவும், ஸ்தாபன அமைப்பு தொடர்பாகவும் கருத்து முரண்பாடுகள் ஆரம்பித்தன.

அப்போதைய புலிகளின் மற்றொரு பிரதானமான தலைவரான வாத்தி என அழைக்கப்பட்ட நாகராஜாவின் தலைமையில் புலிகளுக்குள் இந்த உட்கட்சிப் போராட்டம் ஆரம்பமாகியது.

***மக்கள் சமுதாயம் ஒன்றின் விடுதலையை இலட்சியமாகக் கொண்டு செயற்படும் கட்சியானது, வெறுமனே தனது இறுதி இலக்கை மட்டும் குறித்துக் காட்டுவது மட்டும் போதியதாகாது..... அந்த இறுதி இலக்கை அடைவது தொடர்பான அரசியற் கொள்கைகள், கோட்பாடுகள், அவற்றை நடைமுறையாக்குவதற்கான அரசியல் மூல உபாயங்கள், இவற்றிற்கான ஸ்தாபன வடிவம், அந்த ஸ்தாபன அமைப்புக்கான கொள்கைகள், கோட்பாடுகள் என்பனவற்றை அந்த ஸ்தாபனம் தெளிவான முறையில் வரையறுத்தாகவும், அவற்றின் அடிப்படையில் உண்மையிற் செயற்படுவதாகவும் இருத்தல் வேண்டும்.***

1979ம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுக்குள் ஏற்பட்ட உட்கட்சி முரண்பாடானது இவ்வாறானதொரு அடிப்படையிலே தான் தோற்றம் பெற்றது. இந்த விடயமானது, புலிகளுக்குள்ளே மட்டும் திடீரெனத் தோன்றிய ஒரு தோற்றப்பாடல்ல....... ஈழ மக்களின் விடுதலைப் போராட்டத்தில் பரவலாகவே குறிப்பாக இளைஞர்கள் மத்தியில், அதற்கான ஒரு அடிப்படை வளர்ச்சி நிலை அன்று ஏற்பட்டிருந்தது........ வெறுமனே

***'சுதந்திரமும், இறைமையும் கொண்ட சாதி, சமய, பிரதேச வேறுபாடற்ற, சமத்துவ சமதர்ம தமிழீழமே எமது இலட்சியம்'*** என்ற பிரகடனமோ அல்லது

***'தமிழீழத் தாயகமே எமது தாகம்'*** என்ற வாக்கியமோ அல்லது, ***'மதத்தால் இஸ்லாமியன் ஆனாலும், வேதம் பயிலும் கிறிஸ்த்தவனாயினும், வீரச் சைவன் என்றாலும் பருத்தித்துறை முனை தொடக்கம் பொத்துவில் வரை மன்னார், பதுளை உள்ளிட்ட பகுதிகளில் வாழும் ஈழத்தவர்கள் அனைவரும் ஈழவரே'*** என்ற சுலோகமோ .......

***அன்றைய நிலையில் அரசியலில் தீவிர ஈடுபாடும் அக்கறையும் கொண்டிருந்த தமிழ் இளைஞர்களிடையே ஏற்பட்டிருந்த அரசியல் அறிவு மற்றும் அநுபவ வளர்ச்சியின் விளைவாக எழுந்த கேள்விகளுக்குத் திருப்திகரமான பதிலைத் தருவதற்குப் போதியனவாக இருக்கவில்லை....***

இவ்வாறாக ஈழப் போராளிகளிடையே அன்று ஏற்பட்டிருந்த அரசியல் வளர்ச்சி மாற்றங்களின் ஒரு வெளிப்பாடுதான் அன்று புலிகளுக்குள்ளே ஏற்பட்ட கருத்து மோதலுமாகும்.

புலிகளுக்குள்ளே இவ்வாறானதொரு கருத்து மோதல்களைத் தொடக்கியவர்கள் மேலே குறிப்பிட்ட அடிப்படைகளைத் தெளிவாக, பூரணமாக விளங்கிக் கொண்டுதான் மேற்கொண்டார்கள் என்று கூறமுடியாவிட்டாலும், புலிகளுக்குள் அந்த மாற்றங்களை வேண்டியவர்கள் – கோரியவர்களின் கருத்துக்களும் செயற்பாடுகளும் மேலே குறிப்பிட்ட விடயத்தின் அடிப்படையையே கொண்டதாகும்.

புலிகளுக்குள் அவ்வாறானதொரு கருத்து மோதல் ஏற்பட்டதைப் பிரபாகரனால் புரிந்து கொள்ளவோ, ஏற்றுக் கொள்ளவோ அல்லது அதற்குரியவாறு இசைவாக நடந்து கொள்ளவோ முடியவில்லை........

மாறாக, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் தமிழ் மக்கள் சமூகத்திற்கும் இடையேயுள்ள உறவை நிர்ணயிப்பதற்கான கொள்கைகள், கோட்பாடுகள், அரசியல் மற்றும் ஸ்தாபன நிலைப்பாடுகள் தொடர்பாக ஏனைய புலி உறுப்பினர்கள் பெரும்பாலானோர் முன் வைத்த கோரிக்கைகளை பிரபாகரனால் தனது தலைமைக்கு எதிரான சதியாகவும், சவாலெனவுமே விளங்கிக் கொள்ள முடிந்தது.

..... உண்மையில் புலிகளின் தலைமையைத் தீர்மானிக்கும் விடயமும் அந்த உட்கட்சிப் பிரச்சினையினால் முன்னணிக்கு வந்தது.

இந்த நிலைமையில், நாகராஜாவின் தலைமையில் ஒரு பகுதிப் புலிகள் தமது அமைப்பை விட்டு வெளியேறாமலே 'புதிய பாதை' என்ற பத்திரிகையொன்றை வெளியிட ஆரம்பித்தார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



இவர்கள் 'புதியபாதைக் குழுவினர்' என அழைக்கப்பட்டனர். , இவர்களின் செயற்பாடுகளும் வெளியீடுகளும் புலிகளுக்குள் ஏற்பட்ட பிளவையும், புதிய மாற்றம் ஒன்றை வேண்டி நின்றதையும் வெளிப்படுத்துவதாக அமைந்தது.

## ஜனநாயகம் பிரபாகரனின் பிறவி எதிரி

புலிகளுக்குள்ளே ஏறபட்ட பிளவை சமாதான பூர்வமான முறையில் தீர்த்து வைப்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளின் போது, ஒரு கட்டத்தில் புலிகளின் தலைமையை, அதன் கருத்துான் **(Hard Core)** புலி உறுப்பினர்கள் மத்தியில் ரகசிய வாக்கெடுப்பு ஒன்றை நடாத்தித் தீர்மானிப்பது என பிரபாகரன், மற்றும் புதிய பாதை குழுவினர் உட்பட அனைத்துப் புலி உறுப்பினர்களும் ஒப்புக் கொண்டனர்.

***1979ன் இறுதிப் பகுதியில் புலிகளின் அமைப்பில் இருந்த நாற்பது கருத்துான் உறுப்பினர்கள் மத்தியில் புலிகளின் தலைவராக பிரபாகரனை ஏற்பதா? இல்லையா? என இரகசிய வாக்கெடுப்பு நடாத்தப்பட்டது.***

***புலிகளில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் பிரபாகரனை நிராகரித்தனர்..... பிரபாகரனுக்கு இது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. பிரபாகரன் தனது ஆட்கள் எனத் தன்னால் நம்பப் பட்டவர்கள் கூட தன்னை ஏற்கவில்லை என்பதைக் கண்டு மிகவும் விரக்தியுற்று, ,,,,,,,, புலி அமைப்பிலிருந்து விலகி ஒதுங்கி, ,,,,,,,,,, அப்போது தமிழீழ விடுதலை இயக்கம் என்ற பெயரில் செயற்பட்டுக் கொண்டிருந்த தங்கத்துரை – குட்டிமணி ஆட்களுடன் போய் அடைக்கலம் பெற்றுக் கொண்டார்.....*** தங்கத்துரை – குட்டிமணி ஆகியோரும் கூட பிரபாகரனின் உறவினர்கள்தான் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.......

அதே ***குட்டிமணி – தங்கத்துரை ஆகியோர் 1981ம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் ரகசியமாக இந்தியாவுக்குத் தமது விசைப்படகுகளின் துணை கொண்டு புறப்படவிருந்த வேளையில், இக்கட்டுரையில் ஏற்கனவே புலிகளின் குணாம்சம் பற்றிக் குறிப்பிட்டுள்ள பிரகாரம், சிறி லங்கா அரசின் கடற் படையினருக்கு ரகசியத் தகவல் கொடுத்து அவர்கள் சிறி லங்கா அரச படையினரால் கைது செய்யப்படும் வகையில் காட்டிக் கொடுத்த நபர் பிரபாகரனே*** என்பது இங்கு கவனத்திற்குரியதாகும்........

இந்தத் துரோக ரகசியமானது தங்கத்துரை – குட்டிமணி ஆகியோரின் நெருங்கிய உறவினர்களுக்கும், அவர்களுக்காக நீதி மன்றத்தில் வழக்காடிய சில வழக்கறிஞர்களுக்கும் தெரிந்த ஒன்றே. ஆனால் அச்சத்தின் காரணமாக, இவ்விடயத்தை எவரும் இது வரை பகிரங்கப்படுத்தவில்லை ......... ஆனால், இப்போதுதான் மாத்தையாவின் ஆதரவாளர்கள் அந்த உண்மையின் ஒரு பகுதியை சொல்ல ஆரம்பித்திருக்கின்றார்கள்.

***ஒரு போராளியாக இருந்து பின்னர், ஈழப் போராட்ட வரலாற்றிலேயே, சிறி லங்கா அரசின் ஒற்றனாக மாறிய முதலாவது நபர் பிரபாகரனின் மகாகுருவான செட்டி என அழைக்கப்பட்ட தனபாலசிங்கமே*** என்பதுவும் இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

## மாத்தையாவின் முதலாவது குற்றம்

இஃது ஒருபுறமிருக்க, ***புலிகளை விட்டு விலகிய பிரபாகரன் தங்கத்துரை குழுவில் போய்ச் சேர்ந்தமையானது புலிகளின் சட்டப்படி மரணதண்டனைக்கு உரிய குற்றமாகும். அந்த அடிப்படையில் பிரபாகரன் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஏனைய புலி உறுப்பினர்கள் மத்தியில் பிரச்சினை கிளப்பிய நபர் யாரெனில்,,?????? ....... அந்த நபர் வேறு யாருமல்ல, இன்று அதே பிரபாகரனால் மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ள இதே மாத்தையா சிறி என்பவர்தான்.........***மாத்தையா அன்று புலிகளினால் கடைப்பிடிக்கப்பட்ட சட்டப்படி ( இந்தச் சட்டம் செட்டியினால் உருவாக்கப்பட்டு புலிகளினால் ஏற்கப்பட்டிருந்த சட்டமாகும். இதே அடிப்படையிலேயே சுதுமலை பற்குணம், மட்டக்களப்பு மைக்கல் ஆகிய புலி உறுப்பினர்கள் பிரபாகரனால் கொல்லப்பட்டனர். பிரபாகரன் நடைமுறைப்படுத்தி வந்த அதே சட்டத்தின் அடிப்படையிலேயே மாத்தையாவும் ) பிரபாகரனுக்கு மரண தண்டனை விதித்து நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தியதுதான் முதன் முதலாக பிரபாகரனுக்கு மாத்தையா மீது ஆரம்பித்த ஆத்திரத்தின் ஆரம்பமாகும்.

பிரபாகரன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற மாத்தையாவின் கருத்தை புலிகளிற் பெரும்பான்மையானோர் ஏற்கவில்லை..... புதியபாதைக் குழுவினர் அவ்வாறான போக்கையே ஏற்கவில்லை...... ஏற்பட்ட பிரச்சினைகளினால் ஒதுங்கிக் கொள்ளும் முடிவோடு இருந்தவர்கள் எவரும் கூட அதன் மீது அக்கறை காட்டவில்லை....

.... பிரபாகரனின் ஆதரவாளர்களான ராகவன் (இவரும் 1984ம் ஆண்டு பிரபாகரனின் மரணதண்டனைத் தீர்ப்புக்கு உள்ளானவர். எனினும் பிரபாகரனின் பிடியில் அகப்படாமல் தப்பிக் கொண்டார் – அரசியலிலிருந்தும் முற்றாக ஒதுங்கிக் கொண்டார்.)



படிப்பகம்

www.padippakam.com



சீலன் (1983ம் ஆண்டு இராணுவத்தினரால் இவர் சுற்றி வளைக்கப்பட்ட போது தற்கொலை செய்து கொண்டார்.) போன்றோரின் கைகளிலேயே புலிகள் அமைப்பின் பிரதானமான ஆயுதங்கள் அனைத்தும் இருந்தன. அவர்கள் பிரபாகரன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை ஏற்கவில்லை.

## இரண்டாவது சட்டத்துக்கும் பாய்...பாய்

புலிகளின் கட்டுப்பாட்டுக்கு எதிராக பிரபாகரன் நடந்து கொண்டதனால் மாத்தையா ஆத்திரம் கொண்ட போதிலும், மாத்தையாவும் அன்று ஒரு பிரபாகரன் விசுவாசியே. ஆனாலும், மாத்தையா பிரபாகரன் தொடர்பாக, அன்று காட்டிய நேர்மையான ஆத்திரத்தை முற்று முழுதாக மறந்து, பிரபாகரனின் தலைமையை ஏற்று விசுவாசமாகச் செயற்பட்டபோதும், பிரபாகரன் அந்த சம்பவத்தை மறக்கவில்லை என்பதை பிரபாகரனைப் பற்றி நெருக்கமாகத் தெரிந்தவர்கள் அறிவர்.

இவ்வாறாக, புலிகளின் இரண்டாவது கட்டுப்பாடும் பிரபாகரனால் மீறப்பட்டது. ஆனால், இன்றும் புலி உறுப்பினர்களில் வேறு எவராவது புலிகளை விட்டு விலகி வேறொரு அமைப்பில் சேர்ந்தால் பிரபாகரனால் மரணதண்டனை விதிக்கப்படுவார்கள்......

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து பிரபாகரன் விலகிச் சென்ற போதிலும், புலிகளுக்குள் ஏற்பட்ட முரண்பாடுகள் தீர்ந்து விடவில்லை...... புதிய பாதைக் குழுவினர் தனிக் குழுவாக தமிழீழ விடுதலை, சோசலிசப் புரட்சி, மக்கள் இயக்கம் என்ற கருத்துக்களோடு செயற்பட ஆரம்பித்தனர்.(ஆயினும், இவர்கள் தொடர்ந்து அவ்வாறு செயற்படவில்லை.)

இவர்களோடு, இடையில், சேர்ந்து கொண்ட உமாமகேஸ்வரன் மீண்டும் புலிகளின் பழைய பாணியிலேயே, ஆனால் புதிதான சில சுலோகங்களோடு, ஒரு குழுவாகச் செயற்படத் தொடங்கினார்.

புதிய பாதைக் குழுவைச் சேர்ந்த பலர் உமாமகேஸ்வரன் பின்னால் எடுபட்டுச் சென்றனர்...அத்தோடு புதிய பாதைக் குழு முடிவுற்றது..

பிளவு பட்ட புலிகளில் இருந்து விலகி பிரபாகரன் தங்கத்துரை குழுவினருடன் சேர,,, புதியபாதைக் குழுவினர் தனியாகப் போக,,, ஒரு பகுதியினர் போராட்டத்தை விட்டு ஒதுங்கிக் கொள்ள, சீலன், மாத்தையா உட்பட ஏனையவர்கள், தமிழீழ விடுதலை இயக்கத்தில் பிரபாகரனோடு சேர்ந்து கொண்டனர்.

1981ம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் தங்கத்துரை – குட்டிமணி ஆகியோர் சிறி லங்கா அரச படையினரால் கைது செய்யப்பட்டதனாலும், அவ்வேளை சிறி சபாரத்தினம் தமிழ்நாட்டில் இருந்ததனாலும், பிரபாகரன் தமிழீழ விடுதலை இயக்கத்துக்குள் தனது நிலையை மாத்தையா, சீலன் போன்றோரின் துணையுடன் பலப் படுத்திக் கொள்ளும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிந்தது.

ஆனால் சிறையிலிருந்த தங்கத்துரை – குட்டிமணி ஆகியோர் பிரபாகரனின் துரோகத்தனத்தை ரகசியமாக வைத்துக் கொண்டு, சிறி சபாரத்தினத்தை தமிழீழ விடுதலை இயக்கத்தின் தற்காலிக தலைவராக நியமித்தனர்....... .......... தனது ஊரவர்களான தங்கத்துரை – குட்டிமணி ஆகியோர் தன்னையே தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவராக நியமிப்பார்கள் என்று எதிர் பார்த்திருந்த பிரபாகரனுக்கு இது பெரும் ஏமாற்றமாக இருந்தது.

## ஈழத்தில் புலிகளின் தலைவன் மாத்தையாவே!

ஏற்கனவே தங்கத்துரை – குட்டிமணி ஆகியோர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, தமிழீழ விடுதலை இயக்கத்திற்கு உள்ளே தன்னை மையப்படுத்தியபடி ஒரு தனிக் குழுவாகச் செயற்பட்டு வந்த பிரபாகரன் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைமை தனக்குத் தரப்படவில்லை என்பதனால், தனது பழைய புலி உறுப்பினர்களோடு தமிழீழ விடுதலை இயக்கத்திலிருந்து பிரிந்து, முன்னர் தாம் கைவிட்டுப் போன தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற பெயரில் மீண்டும் தனிக் குழுவாகச் செயற்படத் தொடங்கினார்.

... 1981ம் ஆண்டு நடுப்பகுதியில் பிரபாகரன் மீண்டும் இந்தியாவில் வசிக்கத் தொடங்கியதைத் தொடர்ந்து, 'களத்தில்' சீலன், மாத்தையா ஆகியோரே புலிகளுக்குத் தலைமை தாங்கினர்..... சிறிது காலங்களுள் சீலன் நோய் வாய்ப்பட, உண்மையில் புலிகளின் பொறுப்புக்களைச் கொண்டு செலுத்திய நபர் மாத்தையாவே. .......... பிரபாகரன் தனது தலைமையைத் தற்காத்துக் கொள்ளுவதற்கு முழுக்க முழுக்க மாத்தையாவையே நம்பியிருக்க வேண்டியிருந்தது.

......... அந்த நேரத்தில், மாத்தையாவும் பிரபாகரனின் தலைமையின் மீது தனக்குள்ள விசுவாசத்தில் களங்கமில்லாமல் மிகத் தீவிரமாகச் செயற்பட்டு வந்தார். ..............

முன்னர், புலிகள் பிளவுபட்ட போது ஒதுங்கிய சிலர் மீண்டும் நம்பிக்கைகளோடு சேர்ந்து இயங்கத் தொடங்கினர்



படிப்பகம்

www.padippakam.com



## களத்தில் நின்ற செல்லக்கிளியை ஒளிந்து நின்று கொன்ற மாவீரன்!

.......... அந்த நேரத்தில், மாத்தையாவும் பிரபாகரனின் தலைமை யின் மீது தனக்குள்ள விசுவாசத்தில் களங்கமில்லாமல் மிகத் தீவிர மாகச் செயற்பட்டு வந்தார். ...............

முன்னர், புலிகள் பிளவுபட்ட போது ஒதுங்கிய சிலர் மீண்டும் நம்பிக்கைகளோடு சேர்ந்து இயங்கத் தொடங்கினர். .....புலிகளை மீண்டும் ஒரு பரபரப்பு நிலைமைக்குக் கொண்டு வந்ததில் பெரும் பங்கு மாத்தையாவுக்கே உரியதாகும்.. ........ விட்டுப் போனவர்களில் இருந்து மீண்டும் சேர்ந்து இயங்கத் தொடங்கியவர்களில் செல்லக் கிளி என்பவரும் ஒருவர்.

........ ***இந்த செல்லக் கிளிதான் 1983ம் ஆண்டு 23ந் திகதி இரவு சிறி லங்கா இராணுவத்தின் மீதான புலிகளின் தாக்குதலுக்கு தலைமைப் பொறுப்பை ஏற்று முன்னின்று நடாத்திய நபர். ..அந்தச் சண்டையில் இந்த செல்லக்கிளி, பிரபாகரனாலேயே கொல்லப்பட்டார்*** என்றே உத்தியோகபூர்வமான புலிகளில் ஒரு பகுதியினர் தெரிவிக்கின்றனர்.

இஃது ஒருபுறமிருக்க, 1983ம் ஆண்டு சிறி லங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்ட ஜூலை இனப்படுகொலை நடவடிக்கையைத் தொடர்ந்து - இந்தியா, ஈழத்தமிழர்கள் விவகாரத்தில் தீவிரமான அக்கறை காட்டத் தொடங்கியதைத் தொடர்ந்து - பிரபாகரன் இந்தியாவில் தொடர்ந்து இருக்க வேண்டியதாயிற்று.

***இந்திய அரசின் உளவுப்படையான RAW றோ வினால் புலிகளுக்கு அள்ளி வழங்கப்பட்ட ஆயுதங்களையும் பணங்களையும் பிரபாகரனே பெற்றுக் கொண்டார். ....... அத்துடன் அதே றோக்காரர்கள் புலிகள் மீது ஒரு அரசியற் பிடிமானத்தை ஏற்படுத்துவதற்காக எம். ஜி. ஆரினூடாகக் கொடுத்த நாற்பது கோடி ரூபாய்களும் பிரபாகரனின் கஜானாவையே சென்றடைந்தன.***

இக்காலகட்டத்தில், களத்தில் நடைமுறைத்தலைமையை பொறுப்பேற்று நடத்திய நபர் மாத்தையாவே........

நீண்டகாலமாகவே மாத்தையா மீது ஆத்திரம் மட்டுமல்லாது, ஒரு வகையான பயமும் பிரபாகரனுக்கு இருந்து வந்தது. பிரபாகரனை விட, அரசியல் விவகாரங்களை விவாதிப்பதிலும், மக்கள் மத்தியில் குறிப்பாக யாழ்ப்பாண புத்திஜீவிகள் மத்தியில் தந்திரமாக அரசியல் விடுவதிலும் ஒப்பீட்டு ரீதியில் மாத்தயைாவிடம் பல திறமைகள் இருந்தன என்பது உண்மையாகும்.

............... மாத்தையாவிடம் காணப்பட்ட இந்த திறமை அம்சங்களைக் கண்டு அஞ்சிய பிரதானமான நபர் பிரபாகரனே என்பதில் சந்தேகமில்லை.

இதன் காரணமாகவே, யாழ்ப்பாணத்தில் மாத்தையாவை விட ஸ்டண்ட் அடிப்பதில் 'மாவீரனான' கிட்டுவை பிரபாகரன் முன்னணிக்குக் கொண்டு வரவேண்டிய நிர்ப்புந்தம் ஏற்பட்டது.

1984ம் ஆண்டு எம்.ஜி.ஆரிடமிருந்து எதிர்பாராத விதமாக ஐந்து கோடி ரூபா பணம் முதற்கட்டமாக பிரபாகரனை வந்தடைந்தது.., அதே ஆண்டு ஆகஸ்ட் மாதமளவில் இந்திய RAW றோக்காரர்கள் பிரபாகரன் கையில் ஆயதங்களை முதற்கட்டமாக அள்ளிக் கொடுத்தனர்.

## கணக்குப் போட்டி நோட்டீஸ் புலிகள்

இவற்றைத் தொடர்ந்து ***பிரபாகரன், இந்தியாவின் பணம், ஆயுதங்கள் ஆகியவற்றின் துணையுடன் புலிகள் அமைப்பின் அனைத்து மட்டத்திலும் தனது தலைமையைத் திட்டவட்டமாக உறுதிப்படுத்திக் கொள்ளும் நடவடிக்கையை மேற்கொண்டார்.***

ஈழத்தில் புலிகளைத் தலைமை தாங்கிய மாத்தையா, பிரபாகரன் தனக்கு எதிராகச் செயற்படுவதைக் கண்டு தானும் அதற்குப் போட்டியாக தனது தலைமையை நிலைநாட்டிக் கொள்வதில் நாசுக்காக ஈடுபட ஆரம்பித்தார்.

......... முதலாவது கட்டமாக, பிரபாகரன் எம். ஜி. ஆரிடமிருந்து வாங்கிச் செலவளித்த பணத்துக்குக் கணக்குக் கேட்டு மாத்தையா பிரபாகரனுக்கு அறிவித்தல் நோட்டீஸ் அனுப்பினார். ............. இதற்குப் பதிலாக பிரபாகரன் மாத்தையா கலியாணத்துக் காகச் செலவளித்த இயக்கப் பணத்தின் கணக்கை அறிவிக்கும்படி நோட்டீஸ் அனுப்பினார்...........இவ்வாறான முறையில் பிரபாகரனுக்கும் — மாத்தையாவுக்கும் இடையில் ஆரம்பித்த தலைமைப் போட்டிப் போரே இப்போது மரன தண்டனையாகவும் துரோகத்துக்கான பரிசுகளாகவும் ஆகின்ற கட்டத்தை வந்து சேர்ந்திருக்கின்றன.

***ஈழ தேசத்து மக்களின் நோக்கில் இந்த இருவருமே பயங்கரவாதிகள், நம்பத்தகாதவர்கள்,, கொலைகாரர்கள், பதவி வெறியர்கள்,,, ஈழப்போராட்டத்தை சீரழித்த பாதகர்கள்,,,, தேச விரோதிகள்,,, மக்கள் விரோதிகள்,,,,, ரகசியமாக எதிரியோடு கூட்டுச் சேர்ந்து நண்பர்களை அழிக்கும் அயோக்கியர்கள். ,,,,,,,,, இவர்கள் ஒருவரை ஒருவர் கொலை செய்வதெல்லாம் தங்களின் தனிப்பட்ட காரணங்களுக்காகவே தவிர, வேறல்ல.***



படிப்பகம்

www.padippakam.com



மாத்தையாவைத் தியாகி என்று சொல்பவர்களும் பொய்யர்கள், அதேபோலவே, அதற்குச் சமனாகவே மாத்தையாவைத் துரோகி என்று சொல்லும் பிரபாகரன் கூட்டத்தினரும் அயோக்கியர்களே ,,,,,,,,, வெறி பிடித்த பைத்தியக்கார கொலைகாரர்களே. ..........

## இந்த இருவருமே கொலைவெறி மனநோயாளிகள்

தங்களின் முன்னேற்றத்திற்காக ஏனைய தமிழ்ப் போராளிகளைக் கொலை செய்வதில் இவர்களுக்குள் கருத்து வேறுபாடு இருக்கவில்லை.

மாத்தையாவும் பிரபாகரனும் தங்களுக்குள் தலைமைப் போட்டி - பணக் கணக்குப் போட்டி ஆகியவற்றை மட்டுமல்லாது, ஏனைய போராளிகளை அதிகமாகக் கொலைசெய்தது யார்? என்ற போட்டியையும் தமக்குள்ளே தொடர்ந்து நடத்தி வந்த நபர்கள்.

இந்த இருவரும், ஈழத்து வீதிகளில், தங்கள் கைகளில் ஆயுதம் இல்லாமல் நடமாடுவார்களாயின், சாகும் தறுவாயில் கிடக்கும் ஒரு தமிழ்க் கிழவியும் கூட எழுந்து இவர்கள் முகத்தில் காறித் துப்பி விட்டுத்தான் சாகும் ,,, வீதியில் கிடக்கும் குட்டை நாயும் கூட இவர்களைத் தீண்டாது. ....

'யாழ்ப்பாணக் குடாநாடு புலிகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது.' 'இங்கு வேறெந்தக் கட்சிக்காரர்களும் மருந்துக்கும் கிடையாது.' அப்படியானால், பிரபாகரன் ஏன் இருநூறு புலிககளைத் தனது பாதுகாப்புக்காகக் கொண்டு திரிய வேண்டும். .......... அதேபோல் மறுபுறம் மாத்தையா ஏன் நூற்றிஐம்பது பேரை சொந்தப் பாதுகாப்புக்காக வைத்திருக்கவேண்டும். .......... உண்மையில் இவர்கள் தங்களுக்குத் தாங்களே பகைவர்கள்.

## இன்னமும் புலிகளை ஆதரிப்போரின் கவனத்திற்கு ஒரு வார்த்தை

இதற்கு மேலும் புலிகளை ஆதரவு அளிப்பவர்கள் ,-- அது கொலை செய்து திரிவதற்குத் துணை போகின்றவர்கள் அனைவரும் சிந்திக்க வேண்டிய விடயம்:- ...., புலிகள் அவர்களுக்கும் அவர்களோடு சேர்ந்தவர்களுக்கும் எப்பொழுதோ மரண தண்டனை விதித்து விட்டார்கள். ....புலிகள் அவர்களுக்கும் அவர்களது ஆதரவாளர்களுக்கும் வழங்கியுள்ள உள்ள சுதந்திரம் சாவதா? அல்லது வாழுவதா? என்பதைத் தீர்மானிப்பதற்கல்ல.

மாறாக, பிரபாகரனின் பார்வையில் தியாகிஎன்று புலிகளால் வழங்கப்படும் பட்டத்தோடு சாகப் போகின்றார்களா? அல்லது அதே புலிகளினால் வழங்கப்படும் துரோகிப் பட்டத்துடன் சாகப் போகின்றார்களா? என அவர்கள் என்ன பட்டத்துடன் சாவது என்பதைப் பற்றி முடிவு செய்ய மட்டுமே .

இந்த இரண்டு கால் புலிகளின் அமைப்பில் சேருபவர்களுக்கும், அதற்கு ஆதரவு தருபவர்களுக்கும் முடிவு நாலு கால் புலியின் வாலைப்பிடித்தவன் கதைதான்.

இந்த பரிதாபகரமான நிலைமை ஈழத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமல்ல, தமிழ் நாட்டைச் சேர்ந்த பெண்ணம் பெரிய அரசியற் புள்ளிகள் கூட இன்று இந்த புலிச் சிக்கலுக்குள் மாட்டுப் பட்டு கவலைக்கிடமான நிலையிலுள்ளனர்.

பிரபாகரன் புலிகளின் கழுத்தில் மாட்டி விட்டுள்ள சைனைட் சங்கிலிகள் 'தற்கொலை மாவீரத்'தின் அடையாளங்கள் அல்ல... மாறாக, அந்தச் சங்கலிகளை மாட்டிக் கொண்டு திரிபவர்களில் எவராயினும் மற்றவர்களால் கொல்லப்பட்டு தியாகப் புலிகளில் ஒரு ஆளாக ஆகாவிட்டால், 'தலைவர்' பிரபாகரனால் துரோகி என்ற பட்டம் வழங்கப் பட்டு கொல்லப்படுவார்கள் என்பதைக் காட்டும் மரணச் சீட்டே அதுவாகும்.

புலிகளை ஆதரவளிப்பவர்கள், பிரபாகரனைத் துதி பாடுவதில் ஒரு இம்மியளவேனும் இசை தவறித் தன்னும் பாடுவார்களேயானால் அவர்களுக்கும் முடிவு அதுவே.

புலிகளின் உறுப்பினரானவர் அல்லது புலிகளை ஆதரவளிப்பவர் எவராயினும், இன்றோ; நாளையோ, அந்த நபர் மைக்கலென்றாலும் சரி; மாத்தையாவென்றாலும் சரி, அல்லது அவர் ஈரோஸ் பாலகுமாராக இருந்தாலென்ன; வையன்னா கோபால்சாமியாக இருந்தாலென்ன, அவரின் இருப்பிடம் கோண்டாவிலாயினும் சரி, கோபாலபுரமாயினும் சரி, ஏன் பன்னிரெண்டாயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கும் கனடாவாக இருந்தாலும் சரி, அவர் பத்திரிகை எழுத்தாளராக இருந்தாலென்ன, தமிழ்ப் பேராசிரியராக இருந்தாலென்ன பிரபாகரன் - மாத்தையா போன்றோர் உயிரோடிருக்கும் வரை இந்த மாதிரியான படுகொலைகளிலிருந்தும், துரோகப் பட்டம் சாத்தப்படுதல்களிலிருந்தும் யாரையும் அவர்கள் தப்பவிடமாட்டார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

பூவுலகப் போக்குகளும் எமது கண் நோக்குகளும் :::

# ரஷ்ய மக்கள் குப்பை மேடுகளில்-ரொட்டி தேடுகிறார்கள்!



# பிச்சை எடுக்கும் வல்லரசு

## ஹிட்லரின் மறுபிறப்பு ரஷ்யாவிலா ?

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் உலகத் தொழிலாளர்களின் இலட்சிய வடிவமாக இருந்த சோவியத் யூனியன் இன்று இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது.....

சோவியத் யூனியனின் மக்கள் சோவியத் புரட்சியின் ஆரம்ப காலத்திலும், இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற காலத்திலும் தவிர ஏனைய எந்தச் சந்தர்ப்பத்திலும் பசி பட்டினியை உணர்ந்தறியார் ,,,, பிச்சை எடுத்தலைத் தமது நாட்டிற் கண்டறியார் ,,,, வேலையின்மையையோ அல்லது பணவீக்கத்தையோ அவர்கள் கேள்விப்பட்டிருக்கலாமே தவிர அவற்றோடு அவர்களுக்குப் பரிச்சயமோ பழக்கமோ இருக்கவில்லை.

பல நூற்றுக் கணக்கான இனங்களைக் கொண்டிருந்த சோவியத் யூனியனில் இன முரண்பாடுகளை — மோதல்களைக் காணவில்லை...... உலகின் பல்வேறு நாடுகளிலுமுள்ள சிறுபான்மை இன மக்கள் தத்தம் நாடுகளிலும், சோவியத் யூனியனைப் போலவே தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என சோவியத் யூனியனையே தமது இனப் பிரச்சினைக்குத் தீர்வு தரக்கூடிய அரசியல் உதாரணமாகக் கருதினர்.

இந்தப் பூவுலகம், அரசியல் இராணுவ மற்றும் பொருளாதார ரீதியில் இரண்டு முகாம்களாக்கப் பட்டிருந்தது. அதில் ஒன்று, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் நாடுகளைச் சார்ந்திருந்தது, மற்றது, சோவியத் யூனியனைச் சார்ந்திருந்தது..... உலகில் அமெரிக்க – மேற்கைரோப்பிய நாடுகளின் இராணுவ, பொருளாதாரக் கூட்டுக்கு எதிராக தனக்கென ஒரு முகாமைக் கொண்டிருக்கும் அளவுக்கு வல்லமை பொருந்திய சோவியத் யூனியன் இவ்வளவு குறுகிய காலத்துக்குள், அனைவரையும் ஆச்சரியப்படுத்தும் வகையில் இல்லாமற் போய் விட்டது..

இன்று அந்த சோவியத்தின் மக்கள் ரஷ்யர்கள் என்றும், உக்ரேனியர்கள் என்றும், ஆர்மீனியர்கள் என்றும் ........ என அவர்கள் பதினைந்து வெவ்வேறு நாடுகளின் மக்கள் ஆக்கப்பட்டு விட்டார்கள்.

சோவியத் யூனியனின் கடைசி அதிபரும், நோபல் பரிசுச் சாதனையாளருமான மிக்கயீல் கோர்ப்பச்சோவ் அவர்களினால் அறிமுகப் படுத்தப்பட்ட பொருளாதாரச் சீர்திருத்தம், திறந்த கருத்துக்களை வெளிப்படுத்தல் ஆகியனவே சோவியத் யூனியனை இந்தப்பெரும் மாற்றத்திற்கு உள்ளாக்கின, ——— அந்த சோவியத் யூனியனையே இல்லாமற் பண்ணி விட்டன என்பதே இந்த மாற்றங்கள் பற்றிய ஒரு பகுதி அறிஞர்களின் கருத்தாகும். ......... இன்று அந்த கோர்ப்பச்சேவ்வும் கூட சாதாரண மனிதராக்கப் பட்டுவிட்டார்.

பொருளாதாரச் சீர்திருத்தம், கருத்துச் சுதந்திரம் என்பனவற்றை ஏற்றுக்கொண்டும், அவற்றை நடைமுறைப் படுத்தும் வகையில் தன்னைத் தானே மாற்றி அமைத்துக் கொண்டும், முன் செல்ல முடியாத அளவுக்கு சோவியத் யூனியனின் அரசியற் – பொருளாரக் கட்டமைப்பு அவ்வளவு தூரத்துக்கு பலவீனமானதாக இருந்ததா???..



படிப்பகம்

www.padippakam.com



## தலை தூக்கி நிற்கும் கேள்விகள்

அல்லது, சோசலிசம் என்பது, தனக்குள்ளேயே ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்றபடி – மாறியபடி தனது அடிப்படை இலக்கை நோக்கிச் செல்ல முடியாத ஒரு சமூக – பொருளாதார அமைப்பா???.....

சோசலிசத்தை வைத்திருப்பதற்கும் மாற்றுவதற்குமான அதிகாரம் ஒரு சில நபர்களின் கைகளிற்தான் தங்கியிருக்கின்றதா???.....

சோசலிசமும் மக்களின் கருத்துச் சுதந்திரமும் ஒன்றுக்கு ஒன்று முரண்பாடான – ஒன்றோடொன்று இணைந்து செல்ல முடியாத அம்சங்களா???...

என்ற பல கேள்விகளை சோவியத்தின் மறைவு ஏற்படுத்தியிருக்கின்றது.

சோவியத் யூனியனில் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சி இல்லாமற் போனது என்பதல்ல பிரதானம்..... அந்த சோவியத் யூனியனே இன்று இல்லாமற் போனதுடன் மேலும்,

1 – தனித்தனியான பல நாடுகளாகிக் கிடக்கின்றது

2 – அந்த நாடுகள் ஒவ்வொன்றும் ஒருவரையொருவர் விழுங்கி விடுவார்களோ என்ற சந்தேகக் கண்ணோடு நோக்குகின்றனர்.

3 - அந்த நாடுகள் ஒவ்வொன்றிலும் இனமுரண்பாடுகள் தலைதுக்கி அவை மிகக் கொடூரமான முறைகளில் பிரிவினை யுத்தங்களாகியிருக்கின்றன.

4 - – இந்த நாடுகள் ஒவ்வொன்றும் மிகமோசமான – மிகப் பரிதாபகரமான பொருளாதார நெருக்கடிகளுக்கு உள்ளாகியிருக்கின்றன.

உலகிலேயே நிலப் பரப்பளவில் மிகப் பெரிய நாடும், ஒப்பீட்டு ரீதியில் அதிக அளவு கனிப் பொருள் மூலவளங்களைக் கொண்ட நாடுமாகிய ரஷ்யா இன்று உலகிலேயே மிகப் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கின்றது.... இன்று ரஷ்யா சந்தித்துக் கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடியை ஒரு சில ஆபிரிக்க நாடுகளைத் தவிர வேறெந்தவொரு நாடும் எந்தக் காலத்திலும் சந்தித்ததில்லை.... அந்த ஆபிரிக்க நாடுகளும் கூட மிகப் பெரும் வரட்சி மற்றும் உள்நாட்டு யுத்தங்கள் என்பவற்றின் காரணமாகவேதான் அவ்வாறான நெருக்கடிகளுக்கு உள்ளாயின.

ஆனால் ரஷ்யாவிலோ அப்படிப்பட்ட காரணங்கள் எதுவும் இல்லை. மாறாக அதனது அரசியல் – பொருளாதார சீர்திருத்தத்திற்கென மேற்கொள்ளப்பட்ட திட்டங்களே அதனை இன்றைய இந்தப் பின்னடைவு நிலைக்கு தள்ளியுள்ளன.

கட்டுப்பாடான உற்பத்தி சாதனங்கள், மத்திய ரீதியில் திட்டமிடப்பட்ட மூலவளப் பயன்பாடு – உற்பத்தி நடவடிக்கைகள், பகிரப்படும் வருமானம், முறைப்படுத்தப் பட்ட விநியோகம் என்ற அடிப்படையில் அங்கு பொருளாதாரம் இருந்த போது, இன்றைக்குக் காணப்படும் இந்தப் பொருளாதார நெருக்கடி ரஷ்யாவில் காணப்படவில்லை.

## ரஷ்ய மக்களே இதைக் கேட்டுப் பெற்றுக் கொண்டார்கள்

ஆயினும், கோர்ப்பச்சோவின் கருத்துச் சுதந்திரம் நடைமுறைக்கு வந்தபோது, ரஷ்ய மக்களிற் பெரும்பான்மையினர் அந்தக் கட்டுப்பாடான பொருளாதாரத்துக்கு எதிரான கருத்தையே வெளிப்படுத்தினர்.....

திறந்த பொருளாதாரக் கொள்கைகளுக்கு பெரும் வரவேற்பு இருந்தது.... ......... ரஷ்ய மக்கள் இதனை முழுமையாகப் புரிந்து கொண்டுதான் இந்த முடிவுக்கு வந்தார்களா? அல்லது முதலாளித்துவ வாதிகளின் பிரச்சாரங்களுக்குப் பலியானார்களா? என்ற கேள்விகளெல்லாம் – விவாதங்களெல்லாம் இரண்டாம் பட்சமானவை.....

....... ரஷ்ய மக்களிற் பெரும்பான்மையினர் புரிந்தோ புரியாமலோ முதலாளித்துவ ஜனநாயகத்தையும், திறந்த பொருளாதாரத்தையும் வேண்டினார்கள் என்பதுதான் மறுக்க முடியாத உண்மை.

ஆனால், இன்று ரஷ்யாவின் நிலைமை .....

1)– மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் ரஷ்யப் பணமான ரூபிளும் அமெரிக்கப் பணமான டொலரும் ஒரு ரூபிளுக்கு ஒரு டொலர் என்ற கணக்கில் மதிப்பிடப்பிட்டன. ஆனால், இன்று, 1500 ரூபிள்களைக் கொடுத்துத்தான் ஒரு டொலரை வாங்க முடியும் என்ற நிலை..... இதன் அர்த்தம் கடந்த மூன்று ஆண்டுகளுக்குள், அமெரிக்கப் பணத்துடன் ஒப்பிடுகையில் ரஷ்யப் பணத்தின் பெறுமதியானது150000 சதவீதனால் குறைந்து விட்டது என்பதேயாகும்.



படிப்பகம்

www.padippakam.com



## வெட்கப்படுபவர்களுக்கு சாவதே முடிவு

2)– விநியோகக் கடைகளில் அடிப்படைத்தேவைப் பொருட்கள் பெரும்பாலானவை இல்லை என்னும் நிலை. அவர்களின் அடிப்படை உணவான பாணுக்கு (ரொட்டி) க் கூட மிக நீண்ட வரிசையில் மணிக்கணக்காகக் காத்திருந்துதான் வாங்க வேண்டிய நிலை. அப்படி நிற்போரிற் கூட, பலருக்குக் கிடைக்குமா என்ற சந்தேகம்.

3)– வேலை – வருமானம் இல்லாதோரின் நிலை உழைப்பாளர்களில் 10 சதவீதத்திற்கு மேற்பட்டோர் என்பது உத்தியோக பூர்வமான அறிவிப்பு. உண்மை நிலை நிச்சயமாக அதை விட அதிகமாகவே இருக்கும். இது உண்மையில் நகரங்களின் நிலை பற்றிய கணக்கெடுப்பே. விவசாயப் பகுதிகள் இன்னும் மிக மோசமான நிலையைக் கொண்டிருக்கின்றன.

4)– வேலையில் இருப்போருக்குக் கூட தமது மிக அடிப்படையான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குக் கூட கிடைக்கும் வருமானம் போதாமையினால் பெருந்தொகையான இளம் பெண்கள் விபச்சாரத்தைத் தமது பக்க வருமானத் தொழிலாக்கிக் கொண்டுள்ளனர். ...........

5)– இளைஞர்கள் மத்தியில் விரக்தியின் அதிகரிப்பால், போதைப் பொருட்களுக்கு அடிமையாவோரின் அதிகரிப்பு விகிதாசாரமானது இப்போது உலகிலேயே ரஷ்யாவிற்தான் அதிகமாக உள்ளது.

போதை மருந்து வியாபார மாஃபியாக்களின் மிகப் பெரிய, புதிய சந்தையாக ரஷ்யா மாறியுள்ளது.

........ .......... இன்னும் குறுகிய காலத்துக்குள் ரஷ்ய அதிகாரத்திற்கான தேர்தல்களில் யார் வெற்றி பெறுவார்கள்? யார் அதிகாரத்தைக் கைப்பற்றுவார்கள்? என்பதை ரஷ்ய மக்களை விட இந்த மாஃபியாக்களின் கறுப்புப் பணங்கள் ஒரு திட்டவட்டமான பாத்திரத்தை வகிக்கப் போவது தவிர்க்க முடியாததாகும்.

6)–75 ஆண்டுகளுக்கு முதலில் மூட்டை கட்டி வைக்கப்பட்ட கிராமிய மூட நம்பிக்கைகளும், மாந்திரீக வழிபாடுகளும் மீண்டும் மக்களைப் பற்றிக் கொண்டு வருகின்றன. ....

....... அத்துடன் ஹரே ராமா! ஹரே கிருஷ்ணா! போன்ற மேலைத்தேய மெருகூட்டப்பட்ட இந்தியப் பஜனை வழிபாடுகளும் கூட அங்கு இடம் பிடித்து வருகின்றன.

7)– வயோதிபர்களும் மற்றும் உழைக்கும் ஆற்றல் அற்றோரும் வீதிகளில் பிச்சை எடுக்கிறார்கள்..... குப்பைகள் கொட்டப்படும் இடங்களில் பழைய பாண் துண்டோ அல்லது ஏதாவது உணவு கிடைக்குமா என ஆளோடு ஆள் மட்டுமல்ல, மிருகங்களோடும் போட்டியிட்டு குப்பை கிளறுகிறார்கள். ............. இதற்காக அவர்கள் வெட்கப் பட முடியவில்லை.... வெட்கப்படாமல் உயிர் வாழ்வதா? அல்லது வெட்கப்பட்டு சாவதா? என்பதில் ஏதாவது ஒன்றைக் கட்டாயம் தெரிவு செய்ய வேண்டிய நிலைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

## நண்பர்களும் மாறுகின்றார்கள்

ரஷ்யப் பொருளாதாரத்தின் இந்நிலைமைகளின் காரணமாக, இதுகால வரை சோவியத் யூனியனோடு இருமுக (bilateral) வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்த நாடுகள், அவ்வகையான வர்த்தக உறவை, ரஷ்யாவுடன் தொடர்ந்தும் வைத்திருக்க முடியாத நிலைமைகள் ஏற்பட்டுள்ளன.

இப்போது பணரீதியிலான பன்முக வர்த்தகத்திற்கு உரிய வகையில், முன்னர் அந்நாடுகள் சோவியத் யூனியனுடன் வைத்திருந்த இருமுக வர்த்தக உறவுகளை மாற்றிக் கொண்டுள்ளன.

சுருக்கமாகச் சொன்னால், மேலைத் தேய பொருளாதார அமைப்பின் ஆதிக்கம் சர்வதேச ரீதியில் பரவுவதை, தனது தலைமையில் எதிர்த்து வந்தது மட்டுமல்லாது, அதற்கான போராட்டங்களை நடாத்தி வந்த நாடுகளுக்கும், இயக்கங்களுக்கும் உதவி வந்தது...... ஆனால் அதே சோவியத் யூனியன் அதே மேலைத் தேய நாடுகளின் பொருளாதார அமைப்பைக் கடைப்பிடிக்க முற்பட்டதனால், அரசியல்ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் அதே மேலைத் தேய நாடுகளிடம் உதவி கேட்டுக் கையேந்தி நிற்கின்றது.

மொத்தத்தில் ரஷ்யப் பொருளாதாரமானது ஏனைய நாடுகளிடையேயும் சர்வதேச நிதி அமைப்புகளுக்கிடையேயும் நம்பத் தகு தன்மையை இழந்து விட்ட நிலையில் உள்ளது.

சோவியத்தின் பொருளாதார மற்றும் உற்பத்தி நடவடிக்கைகளில் உள்ள குறைபாடுகளை நீக்குதல் என்ற நோக்கிலேயே பொருளாதாரச் சீர்திருத்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன....



படிப்பகம்

www.padippakam.com



. ஆனால் படிப்படியாக முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரத்தின் மீதான கவர்ச்சியே சோவியத் மக்கள் மத்தியில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது..... இதனுடைய விளைவே ரஷ்ய அதிபர் போறிஸ் யெல்ற்சினின் (Boris Yeltsin) எழுச்சியாகும்.

## கிணறு வெட்டப் பூதம் கிளம்பியதோ !!!

முதலாளித்துவ சந்தைப் பொருளாதார அமைப்பும், தேசிய வாதமும் ஒன்று மற்றொன்றின் ஊக்கியாகும்....... சந்தைப் பொருளாதார மாற்றத்தை சோவியத் யூனியனால் தனது அரசியல் அமைப்பில் எதுவித மாற்றமுமின்றி அப்படியே உள்வாங்கிக் கொள்ள முடியவில்லை என்பதைக் காணமுடிகின்றது.

சோவியத் யூனியனின் ஒவ்வொரு குடியரசுகளும் தத்தமக்கு சோவியத் அமைப்பில் சட்டப்படி வழங்கப்பட்டிருந்த சுயநிர்ணய உரிமைகளைப் பிரயோகித்து தத்தம் குடியரசுகளில் சர்வசன வாக்கெடுப்பை நடாத்தி அல்லது தமது குடியரசுகளின் நாடாளுமன்றங்களில் தீர்மானங்களை நிறைவேற்றி, அவற்றின் அடிப்படையில் தனித் தனி நாடுகளாகப் பிரிந்து கொண்டன..... சோவியத் யூனியன் காணாமற் போனது.

கட்டுப்பாடற்ற பொருளாதார அமைப்பில் ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள் சுய நிர்ணய உரிமைகளுடன் ஒற்றுமையாக, ஒரே நாடாக வாழ மாட்டார்களா? என்ற கேள்வியையும், இல்லாமற் போன சோவியத் யூனியன் எழுப்பி விட்டுச் சென்றிருக்கின்றது.

ரஷ்யா உட்பட பழைய சோவியத் யூனியனில் இருந்து உருவான அனைத்து நாடுகளிலும் 'முதலாளித்துவ சந்தைப் பொருளாதார அமைப்புக்கு மாறவேண்டும்', 'தமது பழைய அரசியல் அமைப்பு முறைகளை மாற்றி அமைக்க வேண்டும்' என்ற கோரிக்கைகளே வலுவாக உள்ளன.

அந்நாடுகளைக் கடந்த பல தசாப்தங்களாக ஆண்டு வந்துள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளும் கூட தமது பல்வேறு பரப்புரைகளிலும், திறந்த பொருளாதாரக் கொள்கையை மக்கள் மத்தியில் நிராகரிக்க முடியாதவர்களாகவே உள்ளனர்.......

ஆயினும் இந்த திறந்த பொருளாதாரக் கொள்கையானது இந்த நாடுகளைப் பொறுத்த வரையில் இதுவரை, சுமுகமானதாக இல்லை. பெரும் நெருக்கடிகளுக்கும் கஷ்டங்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியேற்பட்டுள்ளன.

அத்துடன், அரசியல்ரீதியான இரத்தக் களரிகளையும் இந்நாடுகள் சந்திக்க வேண்டியேற்பட்டுள்ளன.

## உரிமையைப் பெற்றவர்கள் அதே உரிமையை மற்றவர்களுக்கு மறுக்கின்றார்கள்.

சோவியத் யூனியனின் குடியரசுகள் பிரிந்து தனிநாடுகள் ஆகி அவை தமக்கென பூரண இறைமை கொண்ட தனி அரசுகளை நிறுவிக் கொண்ட போதிலும், அவற்றின் அரசியல் நெருக்கடிகள் தீர்ந்துவிடவில்லை.........

தனியாகப் பிரிந்துள்ள இந்த ஒவ்வொரு நாடுகளும் கூட பல வளர்ச்சியடைந்த இனங்களைத் தமக்குள்ளே கொண்டவையாகவே அமைந்துள்ளன. ...........

. இப்போது இந்த நாடுகள் ஒவ்வொன்றிலும் உள்ள சிறுபான்மையினங்கள் பல தத்தமக்கு தேசிய சுயநிர்ணய உரிமை கோரிப் போராடுகின்றன.

ஆனால், முன்னர் சோவியத் யூனியனின் குடியரசுகளாக இருந்த போது தேசிய சுயநிர்ணய உரிமையைப் பெற்றிருந்த இந்த நாடுகளின் பெரும்பான்மை இனங்கள் இப்போது தமக்குக் கீழே உள்ள சிறுபான்மை இனங்கள் மீது தமது இன மேலாதிக்கத்தை நிலைநாட்ட முயல்கின்றன.

சிறுபான்மை இனத்தவர்களின் போராட்டத்தை, தமது இராணுவ பலத்தைக் கொண்டு அடக்கி ஒடுக்க முனைகின்றன.

## இது இறுதிச் சுற்றுப் போட்டியா? அல்லது இன்னமும் உண்டா?

மேலும், புதிய நிலைமைகளுக்கும் தேவைகளுக்கும் உரிய வகையான அரசியல் அமைப்புச் சட்டங்களையும், நிர்வாக ஒழுங்கு முறைமைகளையும் ஏற்படுத்திக் கொள்ளாததனால், அரசியல் அதிகாரமானது ஜனாதிபதியிடம் உள்ளதா??? அல்லது நாடாளுமன்றத்திடம் உள்ளதா??? அல்லது இராணுவத்திடம் உள்ளதா??? என்ற குழப்பங்களுக்குள் இந்தப் புதிய நாடுகள் உள்ளாக்கப்பட்டன.

சோவியத் யூனியனின் குடியரசுகளில் ஒன்றாக இருந்த ஜோர்ஜியாவில் மற்றொரு வகையான உள்நாட்டுப் போராக ஆரம்பித்த இந்த நெருக்கடி கடந்த அக்டோபரில், ரஷ்யப்



படிப்பகம்

www.padippakam.com



நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிறைந்திருந்த ரஷ்யப் பாராளுமன்றத்தின் மீது ரஷ்ய இராணுவம் குண்டுமாரி பொழியும் அளவுக்கு அரசியல் நெருக்கடிகள் விரிவடைந்தன ......

## அதிகாரத்தைக் கைப்பற்ற லெனின் பாணியில் ரஷ்ய சபாநாயகர்

1991ம் ஆண்டு ஆகஸ்ட்டில் சோவியத் யூனியனில் ஏற்பட்ட நெருக்கடிக்கும், 1993ம் ஆண்டு அக்டோபரில் ரஷ்யாவில் ஏற்பட்ட நெருக்கடிக்கும் இடையில் அடிப்படையான வேறுபாடு உண்டு......... 1991ம் ஆண்டு சோவியத்யூனியனில் கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரத்தைத் தொடர்ந்தும் வைத்திருக்க வேண்டும் என்ற கருத்துக் கொண்டோருக்கும், கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சி அமைப்பு முறையை இல்லாது செய்ய வேண்டும் என்ற கருத்துக் கொண்டோருக்கும் இடையில் ஏற்பட்ட அரசியல் மோதலின் வெளிப்பாடு ஆகும். அந்த மோதலில் கம்யூனிஸ்ட் ஆட்சியை இல்லாது ஒழிக்க முனைந்தோர் திட்டவட்டமான வெற்றியை அப்போதே பெற்று விட்டனர்.

ஆனால், 1993ம் ஆண்டு ரஷ்யாவில் ஏற்பட்ட அரசியல் மோதலானது, ரஷ்யாவில் சந்தைப் பொருளாதார முறையைத் தீவிரமான முறையில் உருவாக்க வேண்டும் என்போருக்கும், அப்பொருளாதாரத் திட்டத்தை படிப்படியாக மெதுமெதுவாகவே அறிமுகப் படுத்தவேண்டும் என்ற கருத்துக் கொண்டோருக்கும் இடையே ஏற்பட்ட மோதலேயாகும்.

... அப்போது ரஷ்யப் பாராளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்தவர்களிற் பெரும்பான்மையினர் இரண்டாவது வகையான மெதுவான சந்தைப் பொருளாதார வாதிகளே....

அவர்களுக்கு கம்யூனிஸ்ட்களும், ரஷ்ய தீவிர தேசியவாதிகளும் ஆதரவு வழங்கினர்..... போறிஸ் யெல்ற்சின் தனது வெற்றிக்காக அவர்கள் அனைவரையுமே கம்யூனிஸ்ட்கள் என்று முத்திரை குத்திய போதிலும் அதுவல்ல உண்மை

.......இந்த மெதுமைச் சந்தைவாதிகள் 'வெள்ளை மாளிகை' என்று அழைக்கப்படும் ரஷ்ய பாராளுமன்றக் கட்டிடத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு, அதன் மூலமாக ரஷ்யாவின் அதிகாரத்தைக் கைப்பற்ற முனைந்தனர்.. ........'அதிகாரங்கள் அனைத்தும் பாராளுமன்றத்துக்கே' எனக் குரலிட்டனர்........

1917ம்ஆண்டு அக்டோபரில் ஜார் மன்னனிடமிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக, ரஷ்ய அதிகாரத்தின் மையமான பனிக்கால மாளிகையை – கிறெம்ளினைக் கைப்பற்றும்படி லெனின் அறைகூவல் விடுத்த அதேபாணியில், 1993ம் ஆண்டு அக்டோபரிலும் அதே மாளிகையில் இருந்து அதிகாரம் செலுத்தும் தீவிர சந்தைப் பொருளாதாரக் கொள்கைவாதியான ரஷ்ய அதிபர் போறிஸ் யெல்ற்சினிடமிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக அப்போது ரஷ்ய பாராளுமன்றத்தின் சபாநாயகரும், மெதுவான சந்தைப்பொருளாதார சீர்திருத்தவாதிகளின் தலைவருமான றுஸ்லான் கஸ்பூலரோவ் (**Ruslan khasbulatov**) அறை கூவல் விடுத்தார்......

ஆனால், ரஷ்ய அதிபர் போறிஸ் யெல்ற்சின் ரஷ்ய இராணுவத்தின் துணையுடன், பாராளுமன்றத்தைக் கைப்பற்றினார்,,,,,, தனக்கு எதிரான பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் ஆயுதத் தாங்கிய சதிப்புரட்சி குற்றச்சாட்டின் கீழ் சிறையில் போட்டார்.

## அடி வயிற்றில் கடிபட்ட மக்கள் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டனர்

இங்கு போறிஸ் யெல்ற்சின் இராணுவத்தின் துணையுடன் தனது அரச அதிகாரத்தைக் காப்பாற்றிக் கொண்ட போதிலும், அவரோ அல்லது அவரது பொருளாதாரக் கொள்கை ஆதரவாளர்களோ இங்கு 1991ம் ஆண்டு ஆகஸ்டில் பெற்றதைப் போன்றதொரு தீர்க்கமான வெற்றியை இப்போது அரசியல் ரீதியில் பெறவில்லை.......

போறிஸ் யெல்ற்சின் ரஷ்ய இராணுவத் தளபதிகளின் கோரிக்கைகள் பலவற்றிற்கு விரும்பியோ விரும்பாமலோ இணங்கிப்போக வேண்டியதாயிற்று. மக்களைத்திரட்டும் தனது வல்லமையைக் கொண்டு தன்னால் எதையும் செய்ய முடியும் என்ற செருக்கில் இருந்த யெல்ற்சினை தனக்குரிய சந்தர்ப்பம் கிடைத்த போது ரஷ்ய இராணுவமானது தனது அதிகார நலன்களைப் பேணும் வகையில் யெல்ற்சின் மீதான கடிவாளத்தை இறுக்கிப் பிடித்தது........

அத்துடன் கடந்த டிசம்பரில் நடைபெற்ற ரஷ்யப் பாராளுமன்றத் தேர்தலின் முடிவுகள் ரஷ்யாவில் கடைப்பிடிக்கப் பட்ட பொருளாதாரச் சீர்திருத்த நடவடிக்கைகளைப் பின்வாங்க



படிப்பகம்

www.padippakam.com



வைத்துள்ளது..... மெதுவான சந்தைச் சீர்திருத்தவாதிகளின் நிலைப்பாட்டுக்கே யெல்ற்சினையும் இறங்கப் பண்ணியுள்ளது.

## ரஷ்ய மக்களின் மறு தீர்ப்பும் ரஷ்ய தேசியவாதத்தின் எழுச்சியும்

அதேவேளை, கடந்த தேர்தலில், ரஷ்ய மக்கள் பாராளு மன்றத்தை விட ஜனாதிபதிக்கு மிக அதிக அளவில் அதிகாரம் வழங்கும் அரசியல் சட்ட அமைப்பு சீர்திருத்தத்துக்கு பெரும் பான்மை ஆதரவை வழங்கியிருக்கின்றனர்...... இது பார்வை யில் போரிஸ் யெல்ற்சினுக்கு பெரும்பான்மை மக்கள் ஆதரவு இருப்பது போற் தோற்றமளித்தாலும், அதே தேர்தலில் போறிஸ் யெல்ற்சினின் கட்சியினர் மொத்தத்தில் பெரும்பான்மையான ரஷ்ய மக்களால் ஆதரிக்கப்படவில்லை....

1991ம் ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சியைத் தடை செய்த அதே போறிஸ் யெல்ற்சினும் அவரது கட்சியினரும் அதே கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவிலேயே ஆட்சி நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு அக்டோபரில், பாராளுமனறத்தைக் கைப்பற்றுவதற்காக மேற்கொண்ட யுத்தத்தில், யார் யாரையெல் லாம் தேசத்துரோகக் குற்றச்சாட்டின் கீழ் போறிஸ் யெல்ற்சின் சிறையிலடைத்தாரோ அவர்களின் ஆதரவு இல்லாமல் யெல்ற்ச சின் ஆட்சி நடத்த முடியாத ஒரு விசித்திரமான தீர்ப்பை யெல்ற்சினுக்கு ரஷ்ய மக்கள் வழங்கியிருக்கிறார்கள்.

மீண்டும் ரஷ்யப் பாராளுமன்றத்திற்கு வேகமான முறையில் சந்தைப்.பொருளாதாரத்துக்கு மாறிச் செல்வதை ஏற் றுக் கொள்ளாதவர்களே- படிப்படியான முறையிலேயே பொரு ளாதார மாற்றம் மேற்கொள்ளப்படவேண்டும் எனக் கருத்துக் கொண்டவர்களே பெரும்பான்மையினராக ரஷ்ய மக்களாற் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

ரஷ்யாவின் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில், மிதவாத ஜனநாயகக் கட்சி என்றபெயரில், ஷிரினோவ்ஸ்க்கி (Zhirinovsky) யின் தலைமையில் அமைந்த ரஷ்ய தேசிய மேலாதிக் கவாதக் கட்சியின் எழுச்சியானது ரஷ்யாவிலுள்ள ஜனநாயக மற்றும் முற்போக்கான சக்திகள் அனைவரையும் மட்டுமல்லாது, உலகம் பூராவும் உள்ள ஜனநாயக மற்றும் முற்போக்கான சக்தி கள் அனைவரையும் திகிலடைய வைத்துள்ளது.

சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியை மாற்றி, அதற்குப் பதிலாக முதலாளித்துவ, ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற ஜனநாயக முறையையும், சோசலிசப் பொருளா தார அமைப்பு முறையை மாற்றி, அதற்குப் பதிலாக திறந்த சந்தைப் பொருளாதார முறையையும் அந்த நாட்டின் பெரும் பான்மையான மக்கள் வேண்டி நின்றனர்.

அந்த இரண்டினதும் மாற்றங்களின் தலைமைப் பிரதிநி தியாக வெளிப்பட்ட போறிஸ் யெல்ற்சினையே பெரும்பான் மையான மக்கள், ரஷ்யாவுக்கான திறந்த ஜனாதிபதித் தேர்த லின் போதும், மற்றும் சந்தர்ப்பங்களில் ஆதரித்தனர்.

எழுபத்தைந்து ஆண்டுகள் சோவியத் யூனியனை ஆட்சி புரிந்த கம்யூனிஸ்ட் கட்சியை விட பல மடங்கு அரசியல் ஆற்றலை போறிஸ் யெல்ற்சின் மக்கள் மத்தியில் தனது செல் வாக்கை வெளிப்படுத்தும் விடயத்தில் காட்டினார்.

.... 1991ன் ஆகஸ்ட்டில் சதிப்புரட்சி வடிவில் அதிகாரத் தைத் தக்க வைத்துக் கொள்ள முற்பட்டதன் மூலம் கம்யூனிஸ்ட் கட்சி தனது அரசியல்ரீதியான பலவீனத்தையே வெளிப்படுத் திக் கொண்டது.

ரஷ்ய இராணுவத்தினதும் ஆதரவைப் பெற்ற யெல்ற்சி னால் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராக எதையும் செய்ய முடிந்தது.

கம்யூனிஸ்ட் கட்சி தடைசெய்யப்பட்டது......, லெனின் சிலைகள் உடைக்கப்பட்டன. ........ சோவியத் யூனியனின் உளவு ஸ்தாபனமான கே.ஜி.பீ யானது இரவோடிரவாகக் கலைக்கப்பட்டது மட்டுமல்லாமல் அதன் அதிகாரிகள் அனைவ ரும் தீண்டத் தகாதவர்கள் போல் மக்கள் கூட்டத்தினால் துரத்தப் பட்டனர். .......... ரஷ்யாவின் இரண்டாவது நகரமான லெனின் கிராட் மீண்டும் ஜார் மன்னன் காலத்து பீற்றர்ஸ்பேர்க் எனப் பெயரிடப்பட்டது. ......... எழுபது ஆண்டுகளாகப் பாதுகாக்கப் படுகின்ற லெனினின் உடலைத் தொடர்ந்தும் பாதுகாப்பதா? அல்லது அழித்துவிடுவதா? என்ற கேள்விகள் தூண்டிவிடப்பட் டன.? ....... இவ்வாறாக, கம்யூனிச எதிர்ப்பு என்பது யெல்ற் சின் கூட்டத்தினரால், மக்கள் மத்தியில் ஒரு வெறிபிடித்த விடய மாக நடத்தப்பட்டது.

மேலைத்தேய பிரச்சார சாதனங்களும் தமது தொழில் நுட்ப வல்லமைகளைப் பயன்படுத்தி அந்த வெறிப்போக்குக்கு பெரும் துணைபுரிந்தன.



படிப்பகம்

www.padippakam.com



## ரஷ்யத் தேசிய வாத எழுச்சி பிள்ளையார் பிடிக்கக் குரங்கானதோ?

சோவியத் யூனியனின் பொருளாதார அமைப்பையும், அரசியல் அமைப்பையும் மாற்றி அமைப்பதில் அந்த மக்களை விட பல மடங்கு அதிக மான அக்கறையையும் , ஈடுபாட்டையும் அமெரிக்கா வும், மேற்கு ஐரோப்பிய நாடுகளுமே காட்டின - கொண்டிருந்தன.

மேலைத்தேய நாடுகளின் பிரச்சார மற்றும் நிதி உதவிகளுடன் பொருளாதார அமைப்பை மாற் றும் நடவடிக்கைகளை போறிஸ் யெல்ற்சின் மிகத் தீவிரமான முறைகளில் ஆரம்பித்தார். ...... பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் மக்களும் நாடும் அகப்பட்டன.........ஆரம்பம், அப்படித்தான் இருக் கும் சிறிது காலத்தில் பொருளாதார மாற்றத்தின் நன் மைகள் விளையத் தொடங்கிவிடும் என்றனர். ....... மக்கள் பல்லைக் கடித்துக் கொண்டு சகித்தார்கள். ....... பொருளாதாரக் கஷ்டங்கள் மேலும் அதிகரித்த னவே தவிர குறையவில்லை. ........ மக்கள் எதிர்ப்பு சிறிது சிறிதாகப் பெருக ஆரம்பித்தன. ........ மக்க ளுக்குச் சிரமமில்லாத முறையில் படிப்படியாகவே பொருளாதார மாற்றம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தைக்கொண்டோர் போறிஸ் யெல்ற்சினை வெளிப்படையாக எதிர்க்க ஆரம்பித்த னர். ........... இதன் உச்சகட்ட வெளிப்பாடுதான் கடந்த ஆண்டு ரஷ்யப் பாராளுமன்றத்திடமா அல் லது ஜனாதிபதியிடமா அரச அதிகாரம் உண்டு என்ற நெருக்கடியின் தோற்றமாகும்.

தனது அதிகாரத்தை நிலைநாட்டிக் கொண்ட யெல்ற்சின், வேறு வழியில்லாமலும், தன்னம்பிக்கை யோடும் பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலை கடந்த டிசம்பரில் நடத்தினார். ......... 40 சதவீதமான வாக்குகளை மட்டுமே யெல்ற்சினுடைய கட்சிக்காரர் கள் பெற்றார்கள். ......கம்யூனிஸ்ட் கட்சி மூன்றாவது இடத்தையே பெற்றுக் கொண்டது.

இந்தப் பொருளாதார, அரசியல் நெருக்கடி களை அடிப்படையாகக் கொண்டு தொடங்கிய கட்சியாகிய மிதவாத ஜனநாயகக் கட்சியே ரஷ்யாவின் இரண்டாவது பெரும்கட்சியாகியுள்ளது. ...... இது பெயரில் மட்டும்தான் மிதவாதம் என்ற சொல்லை வைத்திருக்கின்றது. ... அது ரஷ்ய மக்கள் மத்தியில் ஒரு வெறித்தனமான அரசியல் உணர் வலைகளைக் கிளப்பி வருகின்றது.

சோவியத் யூனியனில் இருந்த குடியரசுகள் அனைத் தும் ரஷ்யாவின் தலைமையின் கீழ் மீண்டும் ஒரேநாடாக இருக்கவேண்டும் என்பதே பெரும்பான்மையான ரஷ்யர்க ளின் விருப்பம். இதைவைத்து ஷிரினோவ்ஸ்க்கி ரஷ்யர்கள் மத்தியில் ஒரு வெறித்தனமான அரசியல் ஆக்கி வருகின் றார். பிரிந்து போன குடியரசுகளை எல்லாம் பலாத்காரமாக வாயினும் மீண்டும் ஒன்றிணைக்க வேண்டும் என்கிறார்.

.... அமெரிக்காவுக்கும் மற்றும் மேற்கைரோப்பிய நாடுகளுக்கும் எதிராக பகைமை ஆத்திரத்தைக் கிளப்பும் பேச் சுக்களையே அவர் மக்கள் மத்தியில் ஆற்றிவருகின்றார். ...... இந்த நாடுகளும், இந்த நாடுகளை நம்பியவர்களுமே ரஷ்யா வைப் பலவீனப்படுத்திவிட்டார்கள் என்பதே ஷிரி னோவ்ஸ்க்கியின் வாதம். ....... அவசியம் ஏற்பட்டால் மூன் றாவது உலகமகா யுத்தத்துக்கும் ரஷ்யர்கள் தயாராக இருக்க வேண்டும் என அவர் ரஷ்ய மக்களைக் கிளப்பி விட முனை கின்றார்.

ஒட்டு மொத்தமாக நோக்கினால், ஷிரினோவ்ஸ்க்கி யின் உரைகளும், அறிக்கைகளும் ஹிட்லரின் பாணியி லேயே உள்ளன. .......... அரசியல்ரீதியாக விரக்திக்கும், பொருளாதார ரீதியாக சொல்லொணாக் கஷ்டங்களுக்கும் உள்ளாகியிருக்கும் ரஷ்ய மக்கள் மத்தியில் ஷிரினோவ்ஸ்க்கி யின் செல்வாக்கு மேலும் அதிகரிப்பது சாத்தியமே.

இவற்றின் விளைவாகவே, போறிஸ் யெல்ற்சின் இப் போது, தமது பொருளாதார மாற்றத்திட்டத்தை தளர்த்தியுள் ளார். ...... மெதுமைப் பொருளாதார வாதிகளோடு ஒத்துப் போகின்றார்..... தன்னோடு நின்ற தீவிர பொருளாதார ஆதர வாளர்கள் பலரைக் கைவிட்டுவிட்டார். ......கடந்த அக்டோ பரில் தான் கைது செய்தவர்களை நிபந்தனையின்றி விடு தலை செய்கிறார்.

யெல்ற்சினின் இந்த மாற்றங்கள் ஷிரினோவ்ஸ்க்கி யின் எழுச்சியைக் கட்டுப்படுத்துமா?



படிப்பகம்

www.padippakam.com



# உண்மையான போராளிகளும், மக்கள் பற்றி நேர்மையாக அக்கறை கொண்டோரும் நிச்சயமாக ஒன்றுபடுவர்!

**கேள்வி - 6**

**காலத்தின் மாற்றத்தையும் தேவையையும் ஒட்டி லங்கா சமசமாஜக் கட்சியும், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியும் ஒன்றிணைந்துள்ளன. இதே போல வடக்கு - கிழக்கில் உள்ள முற்போக்கு ஜனநாயக சக்திகள் குறைந்த பட்ச வேலைத்திட்டத் திலாவது ஓர் ஐக்கியத்தை ஏன் பேண முடியாமலுள்ளது?**

**பதில்**

லங்கா சமசமாஜக் கட்சியும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியும் கடந்த ஐம்பது ஆண்டுகளாக தனித்தனியாக செயற்பட்ட நீண்ட அநுபவத்தின் பலாபலன்களைத் தெளிவாக உணர்ந்ததன் விளைவாகவே அவை ஒன்றிணைந்து செயற்படும் முடிவை எடுத்துள்ளன எனலாம் .....

இந்த இரண்டு கட்சிகளிலும் முதிர்ந்த நீண்டகால அநுபவங்கள் கொண்ட, அரசியற் பக்குவமுடைய, இலட்சியத்துக் காகத் தம்மை அர்ப்பணித்துச் செயற்பட்ட பல தலைவர்கள் இருக்கிறார்கள்.....

இலங்கையில் மட்டுமல்லாது, சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர், இந்தியா உட்பட பல்வேறு நாடுகளிலும் இடதுசாரிக் கட்சிகள் தமக்கிடையே உள்ள பிளவுகளை நீக்கி ஒன்றுபட்டுச் செயற்படுவதற்கான தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அரசியற் கட்சிகளுக்கு இடையே திட்டவட்டமான ஒற்றுமை என்பது தத்துவம், சித்தாந்தம்; கொள்கைகள், கோட்பாடுகள்; அரசியல் நிலைப்பாடுகள், வேலைத்திட்டங்கள் என்பவற்றோடு சம்பந்தப்பட்ட விடயமாகும்....... ஆனால் அதே வேளை, பதவி, அதிகாரத்தில் பங்கு, ஏற்படும் வசதி வாய்ப்புக்களில் பங்கு என்ற நோக்கங்களின் அடிப்படையிலும் ஒற்றுமை முயற்சிகள் நடைபெறுவதுண்டு.

அதேவேளை, ஒருவருக்கொருவர் கொண்டிருக்கும் ஆட்பலம், பணபலம் என்பவற்றின் அடிப்படையிலும் ஒற்றுமை விவகாரங்கள் சம்பந்தப்படுவதுண்டு.

ஈழ மக்களுக்கு இடையே உள்ள அரசியற் சக்திகட்கிடையே தமிழ் மக்களின் பொது நலன்களை அடிப்படையாகக் கொண்டு ஒற்றுமை ஒன்றை ஏற்படுத்துவதற்காக வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு வகைப்பட்ட பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அவை எதுவும் இதுவரை திருப்திகரமான வெற்றியைத் தரவில்லை.

ஈழ மக்கள் மத்தியில் இன்று நிலவும் நிலைமைகளை அவதானிப்போமாயின் :-

1) புலிகளே ஒற்றுமைக்கு எதிரான சக்தியாக இதுவரையும் - இப்போதும் இருந்து வருகிறார்கள், புலிகள் ஈழமக்கள் மத்தியிலே உள்ள அரசியற் சக்திகளிடையே ஒற்றுமை நிலவுவதற்கு அடிப்படைத் தேவையாக உள்ள ஜனநாயக மற்றும் மனித உரிமைகளை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லாமையே புலிகளோடு ஏனையவர்கள் ஒற்றுமைப் படுவதைப் பற்றி சிந்திக்க முடியாமைக்குக் காரணமாகும்.

2)ஏனைய தமிழ் அமைப்புக்களிடையே, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பான ஒரு உடன்பாட்டைக் குறித்து ஒரு பொதுவான நிலைப்பாட்டைக் கடைப்பிடிப்பதற்கான வகையில், அவ்வப்போது அது குறித்த தேவைகள் ஏற்படும் போது பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன,,,, ,,,,,,,,,,,



படிப்பகம்

www.padippakam.com



வேறுபாடுகளின் மத்தியிலும் சில உடன்பாடுகளும் பொதுவான நிலைப்பாடுகளும் கடைப்பிடிக்கப் படுகின் றன............ ஆனால் அதற்கு மேல் அங்கும் உடன்பாடுகள் காணப்பட முடியா நிலைமைகளே உள்ளன.......

காரணம் இங்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன் னணி தவிர்ந்த ஏனைய அனைத்து தமிழர் அமைப்புக்களும், தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை அங்கீகரிக்காத சிறி லங்கா அரசின் இராணுவத்துடன் கூட்டுச் சேர்ந்துள்ளன.........

இந்தக் குழுக்கள், தமிழ் மக்களின் உரிமைகள் தொடர் பாக எதையுமே சிறி லங்கா அரசிடம் வலியுறுத்திப் போராடுவ தைக் கைவிட்டு விட்டன.

மாறாக, இந்தக் குழுக்கள் புலிகளுக்கு எதிராகப் போரா டுதல் என்ற போர்வையில் தமிழ் மக்களின் நலன்களுக்கு எதிராக சிறி லங்கா அரசு மேற் கொண்டு வரும் நடவடிக்கைக ளுக்கு முழுக்கத் துணைபோய்க் கொண்டு அரசிடமிருந்தும், கப்பங்கள் வசூலிப்பதன் மூலமும் பணம் திரட்டுவதிலேயே குறியாக உள்ளன........

மேலும் இந்தக் குழுக்களும் நாளாந்தம் ஆட்கடத்தல், ஆட்கொல்லி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. ....... இவர்களுக்கு ஆயுதம் வழங்கி சுதந்திரமாக நடமாடுவதற்கு பாதுகாப்பும் அளிக்கும் சிறி லங்கா அரசாங்கம் இக்குழுக்க ளின் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு மேலும் தூண்டுகோலா கவும் துணையாகவும் உள்ளது...

அனைத்துத் தமிழ் குழுக்களைப் பற்றியும் தமிழ் மக்க ளைத் தீராத வெறுப்புக் கொள்ள வைப்பதுவும் சிறி லங்கா லங்கா அரசின் நீண்ட காலத் திட்டங்களில் ஒன்றாகும்.

இந்தக் குழுக்களுடன் ஒன்று பட்டுச் செயற்படுவதற் கான வேறு வகையான அரசியல் அடிப்படைகள் இன்று காணப்படவில்லை........ ......... அதுமட்டுமல்லாது,

இந்தக் குழுக்களுடன் ஒற்றுமைப் பட்டுச் செயற்பட முனைபவர்கள் இந்தக் குழுக்களினால் மக்கள் மத்தியில் மேற் கொள்ளப்படும் சமூக விரோதச் செயல்களுக்கும் பொறுப் பேற்க வேண்டியேற்படுகின்றது....

கடந்த காலங்களில் இவ்வாறான சிரமங்களுக்கும் அவப்பெயர்களுக்கும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை அகப் பட்டுக் கொண்டமை பலரும் அறிந்த ஒரு விடயமேயாகும். .........

தமிழ் மக்களின் போராட்டமே சிறி லங்கா அரசுக்கு எதிரானதாக இருக்கும் போது, இந்த அரசு தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒரு குறைந்த பட்ச உடன் பாட்டுக்குக் கூட முன்வராதவரை, ,,,,,,

,,,,,, இந்த அரசானது ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியுடன் மட்டுமல்ல அரசுடன் இராணுவ ரீதியாகக் கூட்டுச் சேர்ந்து நிற்கும் இந்தக் குழுக்களுடன் கூட உருப்படி யான ஒரு அரசியற் தீர்வைப் பற்றிப் பேசத் தயாராக இல்லாத வரை, ,,,,,,

,,,,, சிறி லங்கா அரசுடன் புலிகளுக்கு எதிராக ஒத்து ழைப்பது சிறி லங்கா அரசின் சிங்கள இனவாதத்துக்குத் துணை போவதாக மட்டுமே அர்த்தப்படும்.

........ ஒரு கைக் கூலித்தனமானதாகவே மட்டுமே கருதப்படும்.

............ இதே தவறைத்தான் முன்னர் பிரேமதாசா அரசாங்கத்துடன் ஒத்துழைத்த புலிகளும் செய்தார்கள்..... ...... அதன் பாரதூரமான விளைவுகளாற்தான் கடந்த நான்கு ஆண் டுகளாக மீண்டும் தமிழ் மக்கள் தொடர்ந்தும் துன்பப் பட்டுக் கொண்டிருப்பது மட்டுமல்லாது விடிவுக்கான திசையைக் கூட அறியமுடியாமல் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள்.

ஈழத் தமிழ் மக்கள் மத்தியிலே உள்ள அரசியற் சக்தி கள் தொடர்பாக உள்ள இன்றைய யதார்த்த நிலைமைகளின் மத்தியில், ஒற்றுமை என்பது கண்ணுக்கு எட்டாத ஒன்றாகவே தான் உள்ளது.......

ஆனால் அதேவேளை ஒற்றுமை என்பது, அங்கீகரிக் கப்பட்ட அரசியற் கட்சிகள், ஆயுதம் தாங்கிய குழுக்கள் இவற் றிற்கு மத்தியில் ஏற்படுவதை மட்டும்தான் குறிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.......

இதற்கும் அப்பால், பரந்து பட்ட ரீதியில் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள வெவ்வேறு சமூகநிலை, சமூகக் கண் ணோட்டம் கொண்டோர்,, வெவ்வேறுபட்ட அரசியற் கருத்துக் கொண்டோர்,, வெவ்வேறு வகைகளில் சமூக முக்கியத்துவமு டையோர்,, வெவ்வேறு வகைகளில் சமூகத் தொண்டாற்று வோர்,, போன்ற வகையினரைக் உள்ளடக்கிய ஒரு பொது மன்றத்தை உருவாக்குவதைப் பற்றிச் சிந்திப்பதுவும் முயற்சிப் பதுவும் எதிர்காலத்தில் மேலும் சிறப்பான ரீதியில் ஒற்றுமை ஏற்பட்டு வலுப்பெற வாய்ப்பேற்படும்.



படிப்பகம்

www.padippakam.com



எவ்வாறாயினும், ஈழத் தமிழ் மக்களின் விடுதலை குறித்து அரசியல் ரீதியானதோர் ஒற்றுமை ஏற்படவும், அது சமுதாய நலன் குறித்து காத்திரமானதாகச் செயற்படவும் தமிழ் மக்கள் மத்தியில், குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் ஜனநாயகம், சமாதானம், ஒற்றுமை பற்றிய ஆழமான உறுதியான உணர்வு ஏற்பட வேண்டும்......

.....அத்துடன் அவர்கள் மத்தியில் உள்நோக்கியும் புறம் நோக்கியும் அரசியலில் ஐக்கியமும் போராட்டமும் எவ்வாறு செயற்படும் – செயற்பட வேண்டும் என்பது தொடர்பான அறிவும், ஆய்வு நோக்கும் வளர்ச்சியடைய வேண்டும்.

ஒரு ஆயுதத்தைக் கொண்ட இரண்டு போராளிகள் ஒருவரோடொருவர் ஒற்றுமையாகச் செயற்படுவார்களாயின் அது இரண்டு ஆயுதங்களைக் கொண்ட ஒரு போராளியின் வல்லமையை விடப் பல மடங்கு அதிகமானதாகும் என்ற சூத்திரம் ஈழத்தமிழ் மக்கள் மத்தியில் ஓங்கி நிற்கும் போதுதான் இங்கு காத்திரமான ஒற்றுமை சாத்தியமாகும்.

## எழுதுங்கள் தோழர்களே!

தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றில் நிறைய அநுபவங்களை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். .......... நிறைய விடயங்களை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். ......... உங்கள் நெஞ்சங்களில் இறுகிக் கிடக்கும் அந்த விடயங்களை வெளியே கொண்டு வாருங்கள். ........ அவை ஏனையவர்களுக்கும் பயன் படட்டும்.

நீங்கள் உங்களிடமுள்ள அறிவையும் ஆற்றலையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் போதுதான் அவை சமூகப் பயன்பாடுடையனவாகின்றன.

நெஞ்சினிலே உண்மையுண்டாயின் எங்கள் கைகளிலே நல்ல காவியங்கள் பிறக்கும் என்ற நம்பிக்கையோடு எழுதுங்கள்.

நமது கருத்துக்களும், எழுத்துக்களும் எதிரிகளின் பல்லாயிரக்கணக்கான துப்பாக்கிகளை விட வலிமையானவை என்ற துணிவோடு உங்கள் எழுத்தோவியங்களை வரைந்து அனுப்புங்கள்.

கருத்துக்களில் வேறுபாடு இருப்பினும் அவை காத்திரமானதாயின், இந்த சூத்திரம் அவற்றைத் தாங்கி வரும் சக்தியுடையது



படிப்பகம்

www.padippakam.com

## கேள்வி – 7

**ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மார்க்ஸிய – லெனினிசத்திலிருந்து விலகி ஒரு குட்டி முதலாளித்துவக் கட்சியாகத் தன்னை மாற்றிக் கொண்டுள்ளது என்று ஒரு பிரச்சாரம் உள்ளது. அது பற்றிய சூத்திரனின் கருத்து என்ன???**

**பதில்---**

ஒரு கட்சி எந்த வர்க்கத்தின் நலன்களுக்காகத் தொழிற்படுகின்றது என்பதை வெறும் சுலோகங்களால் அளவிட முடியாது...... மாறாக, அதன் வரலாற்றுப் பாத்திரத்தினாலேயே கணிப்பிடப்படும்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைப் பொறுத்த வரையில் அதற்கு உலக மக்கள் சமுதாயத்தின் பொது நலன்கள் பற்றியும், சர்வதேச உறவுகள் பற்றியும் திட்டவட்டமான கொள்கை நிலைப்பாடு உண்டு. ,,,,,

,,,, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் வாழும் மக்கள் சமுதாயத்தின் பொது நலன்கள் பற்றியும், இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளுக்கு இடையேயான உறவுகள் பற்றியும் குழப்பமில்லாத ஒரு கண்ணோட்டத்தைக் கொண்டிருக்கின்றது. ,,,,,,,,,,

,,,,,,,, இலங்கையின் அரசியற் பொருளாதார அமைப்பு பற்றியும், இலங்கை வாழ் அனைத்து மக்களினதும் சமத்துவ, சகோதரத்துவ வாழ்வுக்கான சமூக – அரசியற் புரட்சி பற்றியும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கு திட்டவட்டமான ஓர் அரசியற் செயற் திட்டம் உண்டு. ,,,,,,,,,

அதேவேளை முன்னணியானது செயலெல்லை ரீதியில் பரந்துபட்ட ஈழத்து மக்களின் தேசிய நலன்களுக்காகத் பாடுபடுவதை முதன்மையானதாகக் கொள்கின்றது. ...........

அதேவேளை, ஈழத்து மக்கள் சமுதாயத்தில் உள்ள உழைக்கும் மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பாதிக்கப்பட்ட மக்கள் ஆகியோரின் நலன்களை முன்னிலைப்படுத்துவதை உறுதியாகக் கடைப்பிடித்து வருகின்றது. ..........

அத்துடன், நீண்ட கால நோக்கில் இலங்கையில் நடைபெற வேண்டிய - நடாத்தப் படவேண்டிய முற்போக்கான சமூக - அரசியல் மாற்றங்கள் குறித்து ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தென்னிலங்கையுடனான தனது அரசியல் உறவுகளை காலத்தின் நிலைமைகளோடும், தேவைகளோடும் இசகுபிசகுப் படாத வகையில் படிப்படியாக வலுப்படுத்தி வருகின்றது. ................

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஒரு தொழிற் சங்கக் கட்சியோ அல்லது தொழிற் சங்கவாதக் கட்சியோ அல்ல. ,,,,,,,,,அதேவேளை பிரமுகர் குழுக் கட்சியுமல்ல. ,,,,,,, தமிழ் தேசிய இன வெறிக் கொள்கைகளைக் கொண்ட கட்சியோ அல்லது குறுகிய சாதி வாதம், பிரதேச வாதம், மத வாதம் ஆகியவற்றின் அடிப்படையில் செயற்படும் கட்சியோ அல்ல. ,,,,,,,,,,, அதேவேளை பாட்டாளி வர்க்கப் புரட்சி நடந்து சோசலிசம் வந்தால் எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்து விடும் எனும் பஜனைப் போதனைகளை மேற்கொள்ளும் பென்ரிக் கோஸ்ற் கம்யூனிஸ்ட்டுக் கட்சியோ அல்லது ,,,,,,,,, இந்தா ஏகாதிபத்தியம் நெருக்கடிப் படுகிறது, , , முதலாளித்துவம் சரிகிறது, , , நாளையே புரட்சி நடக்கப் போகின்றது, , , ,,,,,,,,,,,,, ஆயுதங்களை எடு, பிடி, சுடு, ,,,,,, பாட்டாளி வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றிவிடும் ,,,,,,,, சோசலிசம் வந்து விடும் என்ற குருட்டுத் தனமான கோஷங்களை நம்புகின்ற கட்சியும் அல்ல.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது " போதைப் பொருள் கடத்தல் வியாபாரம் செய்து புனிதப் போர் நடத்துவோம் " என்பதை ஏற்றுக்கொள்ளாத கட்சி. ,,,,,,,,,,அத்துடன், " எதிரியுடன் சேர்ந்தாயினும் எங்கள் கைகளில் ஆயுதங்களும் பணக் கட்டுக்களும் இருப்பதை உறுதிப் படுத்திக் கொள்வோம் " என்பதையும் ஏற்றுக்கொள்ளாத கட்சி. ,,,,,,,,,,,

,,,,,, அதேவேளை, ' நாங்கள்தான் தமிழ் மக்களின் ஒரே பிரதிநிதிகள்', ' ஏனைய அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் சமூக விரோதிகள், தமிழினத் துரோகிகள்', எம்மைத் தவிர



படிப்பகம்

www.padippakam.com



ஏனைய அனைத்துத் தமிழ்க் கட்சிகளில் உள்ள அனைவரும் கொல்லப்படவேண்டியவர்கள்' போன்ற மக்கள் விரோதக் கொள்கைகளைக் கொண்டிராத ஒருகட்சியே ஈழ மக்கள் புரட்சி கர விடுதலை முன்னணி.

இவ்வாறான கேள்விளை உங்கள் முன்னால் பகிரங் கத்தில் எழுப்புவோர் அல்லது பிரச்சாரம் செய்வோர் இரண்டு வகையினர்.

அதில் ஒரு வகையினர், அரசியல் அநுபவ ரீதியில் அப்பாவிகளாகவோ அல்லது தத்துவ – சித்தாந்தங்களுக்குப் புதியவர்களாக இருப்பர்.,,,,,

மற்ற வகையினர் விரோதமான உள் நோக்கங்கள் கொண்டவர்கள். ............ இவ்வாறாக உள்ள வெவ்வேறு வகையினர் அவர்களது உள் நோக்கங்கள் பற்றியும் நாம் தெளிவாகவும் விழிப்பாகவும் இருத்தலும் அவசியமாகும்.

கடந்த காலங்களில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை சிறு நிலத்துண்டு, சிற்றுடைமை, சிறு வியாபாரம், மத நம்பிக்கைகள் கொண்ட பரந்து பட்ட அப்பாவி மக்களிடமிருந்தும், தீவிரத்தை விரும்பாத மிதவாத அரசியற் சக்திகளிடமிருந்தும் அந்நியப் படுத்துவதற்கான பிரச்சாரங்களும் 'இவர்கள் கம்யூனிஸ்ட்கள்' என்ற வகையாகவே மேற்கொள்ளப்பட்டன. ...

அதேவேளை இன்னொரு வகையான ஈழக் கழகத்தவர்களும், அமைப்பாளர்களும் இலங்கை – இந்திய நாடுகளில் உள்ள ஜனநாயக மற்றும் இடதுசாரிக் கட்சிகளிடையே ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை ஒரு சீன சார்புக் கட்சி என்றும், மாவோயிஸ்ட் கட்சி யென்றும் பிரச்சாரம் செய்தனர்.,,,,,

,,,, அதே நபர்கள் அதே வகையான கட்சிகள் மத்தியில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை இந்திய ஏஜன்டுகள் --- இந்திய அரசின் கூலிப் படைகள் எனவும் பிரச்சாரம் செய்தனர்.

ஆக மொத்தத்தில், கடந்த காலங்களில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை பரந்த பட்ட தமிழ் மக்களிடமிருந்தும், மற்றும் வெவ்வேறு தளங்களில் ஈழ மக்களின் போராட்டத்திற்கு உதவி செய்ய முன்வந்த ஆதரவு சக்திகளிடமிருந்தும் அந்நியப்படுத்தும் நோக்கில், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது ஒரே நேரத்தில், வெவ்வேறுபட்ட சக்திகளினால் கம்யூனிஸ்ட்டுகள் என்றும்,,,... ,,,,,,,, மாவோயிஸ்ட்கள் என்றும்,,,, , மத வழிபாடுகளுக்கு எதிரானவர்கள் என்றும் ,,,,,,, இந்திய ஏஜண்டுகள் என்றும்,,,,,,,, தாழ்த்தப்பட்ட சாதிக்காரர்களின் கட்சி என்றும்.,,,,,,,,,, கிழக்கு மாகாணக் கட்சி என்றும்,,,,,,, குட்டி முதலாளித்துவ கட்சி என்றும்,,,,,,,,, குறுகிய தமிழ் இன வாதிகள் என்றும்,,,,,,,,,, பசைவாளிக் கட்சி என்றும்,,,,,,,, களத்தில் இல்லாத கட்சி என்றும்,,,,,,,,, கலைந்த கனவுக் கட்சி என்றும்,,,,,,,,,,, சிங்கள வர்களோடு சேர்ந்த கட்சி என்றும்,,,,,,,, பல்வேறு வகையான – வெவ்வேறு வகையான பட்டங்களுக்கும் பிரச்சாரங்களுக்கும் அவ்வப்போது உள்ளாக்கப்படுகிறது.

'அரண்டவன் கண்ணுக்கு இருண்டது எல்லாம் பேய்' என்பது போலவே ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தீர்மானகரமான அரசியல் நிலைப்பாடுகளையும், செயற்பாடுகளையும் கண்டு அஞ்சுவோரும் – எதிர்த்துப் போராட முடியாது எதிரிகளோடு சோரம் போனோரும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைப் பற்றிக் கூறுகையில் நாக்கு உளறத்தான் செய்வார்கள்.

அதேபோல மறுபுறம், ஈழ மக்களுக்கான உண்மையான தேசிய விடுதலையையும், இலங்கையில் புரட்சிகரமான சமூக - அரசியல் மாற்றத்தையும் விரும்புபவர்கள் – நேசிப்பவர்கள் – அதற்காகத் தம்மால் முடிந்த கடமைகளையாவது ஆற்றுபவர்கள் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை 'காக்கைக்கும் தன் குஞ்சே பொன் குஞ்சு' என்பது போல் பகிரங்கங்களில் கட்டிக்காத்து நின்று, அதன் வளர்ச்சிக்கு தமது பங்கையும் ஆற்றுவர். .............

அதேவேளை, தாம் காணும் குறைபாடுகளை நீக்கி கட்சியைச் செழுமைப் படுத்தவும், முன்னேற்றகரமானதாக்கவும் கட்சியின் உள்ளரங்கங்களில் தயங்காது போராடுவர். அவர்களே கட்சியின் தத்துவ — சித்தாந்தங்களையும் நிலைப்பாடுகளையும் நிர்ணயிக்கின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

**கேள்வி--- 8**

**ஆயுதங்களைக் கைவிட்டு நிற்கும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் கருத்துக்களுக்கும் கோரிக்கைகளுக்கும் எந்தவித மதிப்பும் அளிக்கத் தயாராக இல்லாத சிறி லங்கா அரசாங்கமானது அதற்கெதிராக ஆயுதம் தாங்கிப் போராடிவரும் புலிகளுடன்தானே பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாக அறிவித்து வருகிறது. இது பற்றிய உங்கள் கருத்து என்ன? ?????**

**பதில்** ——————

1987ம் ஆண்டு இந்திய – இலங்கை சமாதான உடன்பாட்டை ஏற்று, ஆயுதங்களைக் கையளித்ததன் பின்னர் கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்ற பகிரங்கக் கூட்டங்களில் மறைந்த தோழர் நாபா அவர்கள் இது பற்றிக் கூறுகையில்,

"ஈழ மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விடயத்தில் சிறி லங்கா அரசானது சமாதான பூர்வமான வழிமுறைகளைக் கடைப்பிடிப்பதற்கு இந்திய – இலங்கை உடன்பாட்டின் அடிப்படையில் முன்வந்திருப்பதனால் அந்த வழிமுறையில் ஒத்துழைக்க ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் தயாராக முன்வந்துள்ளது. மாறாக, சிறி லங்கா அரசானது ஒப்பந்தத்தில் தான் அளித்துள்ள உடன்பாடுகளை மீறி, ஈழ மக்களின் போராட்டத்தை அடக்கி ஒடுக்குவதற்கு மீண்டும் இராணுவ மற்றும் பலாத்கார வழிகளில் ஈடுபடுமாயின் நாங்களும் மீண்டும் ஆயுதம் தாங்கிப் போராடத் தயங்க மாட்டோம்."

என்று மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் மக்கள் மத்தியில் கூறினார் என்பதை முதலில் இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும்..

எனவே, தற்போது ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது ஆயுதம் தாங்கிய போராட்டத்தைக் கைவிட்டு, தமிழ் மககளின் பிரச்சினைகளுக்கு ஓர் அரசியற் தீர்வு காண சமாதானமான வழிமுறைகளில் முயற்சித்து வருகின்றமையானது தற்காலிகமானதா அல்லது நிரந்தரமானதா என்பதை சிறி லங்கா அரசின் அணுகுமுறைகளே தீர்மானிக்கும். ..........

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது இனி எக்காலத்தும் இப்படியே இருக்கும் என சிறி லங்கா அரசு எதிர்பார்க்க முடியாது... எதிர்பார்க்கவும் கூடாது.

மேலும் சிறி லங்கா அரசானது புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாகக் கூறுவதெல்லாம், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதோடு சம்பந்தப்பட்ட விடயங்களைப் பற்றி பேசுவதற்காக அல்ல.

சிறி லங்கா அரசு மட்டுமல்ல புலிகளும் அடிக்கடி சிறி லங்கா அரசைப் பேச்சுவார்த்தைக்கு அழைக்கின்றன.

இவ்வாறாக, ....... புலிகளும் சிறி லங்கா அரசும் மாறி மாறிப் பேச்சுவார்த்தை பற்றிப் பேசுவதெல்லாம், ,,,,,, பேச்சுவார்த்தைக்கு ஒருவர் மற்றவரை முன் வரும்படி அழைப்புப்பு விடுப்பதெல்லாம், அவர்களுக்கிடையிலான யுத்த அவசியங்களின் பாகமாக உள்ள விவகாரங்களைப் பற்றிப் பேசுவதற்காகவே தவிர, ,,,,,,,,,,,,,,, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு ஒன்றை உருவாக்குவதைப் பற்றிப் பேசுவதற்காக அல்ல என்பதை நாம் முதலில் தெளிவாக அடையாளம் கண்டு புரிந்து கொள்ளுதல் வேண்டும். ...............

யுத்தம் சம்பந்தப்பட்ட விவகாரங்கள் ஆகிய :- யுத்த நிறுத்தம் பற்றியோ ,,,,,

,,, அல்லது யுத்தப் பிரதேசங்களில் செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் அகதிகளுக்கு உதவும் அமைப்புக்கள் ஆகியவற்றின் செயற்பாடுகள் தடையின்றி மேற்கொள்ளப் படுவதற்கான நிலைமைகளை ஏற்பாடு செய்தல் பற்றியோ ,,,,,,

,,,,, அல்லது யுத்தத்தில் ஈடுபடும் பகுதியினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேசங்களுக்கிடையில் அப்பாவி மக்கள் மேற்கொள்ளும் அன்றாடப் போக்குவரத்துக்கள் மற்றும் வர்த்தகர்கள் பண்டங்களை வெவ்வேறு பகுதிகளுக்கிடையில் கொண்டு செல்லுதல், கொண்டு வருதல் ஆகிய நடவடிக்கைகளுக்கு ஏற்பாடுகள் செய்தல் பற்றியோ ......

.... நடைபெற்றுக் கொண்டிருக்கும் மூடத்தனமான – அநாகரீகமான யுத்தத்தில் ஈடுபடாத ஈழ மக்கள் புரட்சிகர



படிப்பகம்

www.padippakam.com



விடுதலை முன்னணியோடு அந்த யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் சிறி லங்கா அரசாங்கம் எதற்காகப் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும். ........

அப்படிப்பட்ட ஒரு பேச்சுவார்த்தையை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி இதுவரை எந்தக் கட்டத்திலும் சிறி லங்கா அரசிடம் கேட்டதுமில்லை. ...............

அதுமட்டுமல்லாது, இந்த மூர்க்கர்கள் தமக்கிடையில் நடாத்தும் இந்தப் போரில், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது எந்தப் பகுதியினரையும் ஆதரிக்கவு மில்லை.........

என்பதோடு இந்தக் கொலைகாரர்களுக்கிடையில் சமா தானம் பிடிக்கும் வேண்டாத வேலையையும் ஈழ மக்கள் புரட்சி கர விடுதலை முன்னணி தனக்கு அது உரியதெனத் தேர்ந்தெ டுத்துக் கொள்ளவுமில்லை.

இவ்வாறானதொரு நிலையில், யுத்த விவகாரங்கள் தொடர்பான பேச்சுவார்த்தைகளுக்கும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கும் இடையில் எவ்வாறு தொடர்பு ஏற்ப டுத்த முடியும். ..........

ஆயினும், ,,,,, இந்தப் பயங்கரவாதிகள் தாங்கள் கொலைகள் செய்வதற்கும், தங்களுக்குக் கவசமாகப் பாவிப்ப தற்கும் மக்களையே ஈவிரக்கமின்றிப் பயன்படுத்துகிறார்கள். ........

..... மக்கள் வாழும் பிரதேசங்களிலேயே கண்மூடித்தன மாக குண்டு மாரி பொழிந்து சண்டை பிடிக்கிறார்கள். .......

... இதனால் மக்கள் நாளாந்தம் படுகொலைகளுக்கும், பசி, பட்டினிக் கொடூரங்களுக்கும் உள்ளாக்கப்படுகிறார்கள். ......

இதன் விளைவாக, யுத்தத்தின் பிடியிலிருக்கும் மக்க ளின் நலன் கருதி அவ்வப்போது ஈழ மக்கள் புரட்சிகர விடு தலை முன்னணியானது இந்த யுத்தப் பிரபுக்களை நோக்கி எதிர்ப்புக் குரல் எழுப்ப வேண்டியேற்படுகின்றது.

மேலும், யுத்தம் தொடர்பான விடயத்திலும் கூட இந்த இரு யுத்த வெறியர்களும் மக்களுக்கு ஏற்படும் தொல்லை களை சற்று நீக்குவதற்காயினும், உருப்படியாகப் பேச்சு வார்த்தை நடத்துபவர்களாக இல்லை. ............ அதையும் கூட தமது யுத்த தந்திரோபாயங்கள் சம்பந்தப்பட்டவையாகவே கருதுகிறார்கள். ..........

சிறி லங்கா அரச படைகள் புலிகளின் மீது ஏதாவது ஒரு வெற்றிகரமான தாக்குதல் ஒன்றை நடத்தியவுடன் புலிக ளைப் பேச்சுவார்த்தைக்கு அழைப்பதுவும், அப்போது புலிகள் தாங்கள் பலவீனப்பட்ட ஒரு நிலையில் அந்த அழைப்பை ஏற்று பேச்சுவார்த்தைக்குப் போனால் அது தம்மைப் பற்றிப் பரவலாக நிலவும் அபிப்பிராயங்களைப் பாதிக்கும் என்பத னால் ஏதாவது ஒரு காரணத்தைக் கூறி அந்த அழைப்பை நிராகரிப்பதுவும், .......... ...........

அதேபோல, மறுபுறம் புலிகளும் தாங்கள் ஏதாவது ஒரு தாக்குதலை அரச படைகளுக்கு எதிராக வெற்றிகரமாக நடத்திவிட்டால், அப்போது தாங்கள் பலமான ஒரு நிலையில் இருப்பதை உறுதிப்படுத்தி – வெளிப்படுத்தி விட்டதாகக் கருதி அந்த வேளையில், சிறி லங்கா அரசைப் பேச்சு வார்த் தைக்கு அழைப்பதுவும் .............. அப்போது அரசாங்கம் தனது பக்கம் பலவீனப் பட்டிருக்கும் வேளையில் அந்தப் பேச்சு வார்த்தை அழைப்பை ஏற்றுக் கொண்டால் அது தனக்கு அரசி யல் ரீதியில் நெருக்கடிகளைக் கொண்டு வரும் என்பதனால் அப்பேச்சுவார்த்தை அழைப்பை வேறு ஏதாவது சாக்குப் போக் குக் கூறி நிராகரிப்பதுவும் இப்போது முக்கியத்துவம் இழந்த வழமையான – மாமூலான செய்திகளாகி விட்டன.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு – ஈழத்து மக்க ளின் நியாய பூர்வமான கோரிக்கைகளுக்கு திட்டவட்டமான ஓர் அரசியற் தீர்வை ஏற்படுத்தும் வகையான பேச்சுவார்த் தையை சிறி லங்கா அரசாங்கம் தமிழர் அமைப்புக்களுடன் நடாத்த வேண்டும். ............... அந்தப் பேச்சுவார்த்தையானது பிரேமதாசா அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட 'புலிகளுட னான பேச்சுவார்த்தை' அல்லது 'ஹமீத் தலைமையிலான அனைத்துக் கட்சி மாநாடு' அல்லது 'பாராளுமன்றத் தேர்வுக் குழுவின் பேச்சுவார்த்தைகள்' போன்றனவாக அல்லாமல், ......... .......... சிறி லங்கா அரசாங்கம் ஈழத்து மக்களின் அபிலா ஷைகளைக் கணக்கில் எடுத்து, தமிழ் மக்கள் குறைந்த பட்சமா யினும் திருப்தியடைக் கூடிய வகையாக, ஓர் அரசியற் தீர்வுத் திட்டத்தை முதலில் முழுமையாகவும் பகிரங்கமாகவும் முன் வைக்கவேண்டும். .............. அத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டே பேச்சுவார்த்தைகள் நடைபெற வேண்டும் என்பதே ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் கோரிக்கையா கும்.

இக் கோரிக்கைக்கு சிறி லங்கா அரசாங்கம் சிறிதளவும் காது கொடுப்பதாக இல்லை. ............... சிறி லங்கா அரசாங்கம்



படிப்பகம்

www.padippakam.com



தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தையை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியுடன் மட்டுமல்ல. ........... புலிகளோடும் பேசத் தயாராக இல்லை. ............. அரச படைகளோடு தோளோடு தோள் கொடுத்து நிற்கும் தமிழ் குழுக்களோடும் கூட பேசத் தயாராக இல்லை. ............ தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வைப் பற்றி சிறி லங்கா அரசாங்கம் புலிகளுடன் பேசத் தயாராக இருப்பதாக எவரும் எண்ணுவதுவும் தவறு. ,,,,,,, நம்புவதுவும் தவறு, ,,,,,,,, அப்படி வெளியில் சொல்லித் திரிவது சிறி லங்கா அரசுக்குச் சார்பான ஒரு பிரச்சாரமாகவே அமையும். ............ அப்படியான ஒரு பிரச்சாரத்தைத் தான் சிறி லங்கா அரசும் தனக்கு உதவி செய்யும் நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் மத்தியில் மேற் கொண்டு வருகின்றது.

தமிழ் மக்களின் நிலைமைகளையும், தமிழ் மக்களின் போராட்டம் அடைந்துள்ள இக்கட்டான - சிக்கலான நிலைமைகளையும், ,,,,,,,, பெருத்த மாற்றங்களுக்கு உள்ளாகியிருக்கும் சர்வதேச மற்றும் தென்னாசிய பிராந்திய நாடுகளுக்கிடையிலான அரசியல் உறவுகளையும் ,,,,,,,,, தெளிவாகப் புரிந்து கொண்டு செயற்படுவது மட்டுமல்லாது. ,,,,,,,,, ஈழத்து மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயபூர்வமான ஓர் அரசியல் தீர்வு ஏற்படும் பட்சத்தில், ,,,,,,, ஜனநாயக அம்சங்களுக்கும், சட்டத்தின் ஆட்சிக்கும் உட்பட்டுச் செயற்படத் தயாராகவும் இருக்கும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியுடன் ஓர் உருப்படியான பேச்சுவார்த்தையை நடத்தத் தயாராக இல்லாத சிறி லங்கா அரசாங்கம், ,,,,,,,,,,,

,,,,,,,, இவை எவற்றிற்குமே பொருந்தாத புலிகளுடன் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு,,, இவர்கள் இருபகுதியினம் சந்திக்கக் கூடிய புள்ளி எதுவுமே கிடையாது. .......... உண்மை நிலைமை இவ்வாறிருக்க சிறி லங்கா அரசாங்கம் புலிகளுடன் மட்டும்தான் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருக்கின்றது என்று பிரச்சாரம் செய்பவர்கள் ஒன்றில் இந்த விடயத்தை அறவே புரிந்து கொள்ளவில்லை அல்லது சிறி லங்கா அரசைப் போலவே இன்னொரு நோக்கில், தமிழ் மக்களையும், தமிழ் மக்கள் மீது அக்கறை கொண்ட சர்வதேச சமூகங்களையும் ஏமாற்ற முனைகிறார்கள். ........

....... எவ்வாறாயினும் இவ்வாறான பிரச்சாரத்தினுடைய வெற்றியின் நன்மைகள் திட்டவட்டமாக சிறி லங்கா அரசுக்கே சேரும் என்பதில் தமிழர்கள் அனைவரம் எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும்..

## எவை வெளியிடப்படும்

சூத்திரம் எவ்வாறான ஆக்கங்களை,,, எவ்வகைப் பட்டவர்களின் ஆக்கங்களை,,, என்ன வடிவில்,,, எந்தப் பக்கங்களில் தாங்கி வரும் ஆகியவை தொடர்பான இறுதி முடிவுகளை சூத்திரனே நிர்ணயிப்பான். .....

சூத்திரம் ஒரு திறந்த ஏடாகச் செயற்படுமெனினும், அது சூத்திரனின் எல்லை, இலக்கணங்களுக்கு உட்பட்டதாகும்.

சூத்திரம் தாங்கி வரும் ஆக்கங்களுக்கு அதை ஆக்கியவர்களே பொறுப்பாவார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# சூத்திரம்

## FORMULA

### ஒரு சமூக - அரசியல் ஆய்வு ஏடு

★ ☆ ★ ☆ ★ ☆ ★ ☆ ★ ☆ ★


சூத்திரனுடன் தொடர்புகளுக்கு

**EELAM PEOPLE'S INFORMATION CENTRE**

POST BAG - 1041
MADRAS - 600017
INDIA

B.M.BOX - 1738
LONDON - WCIN - 3XX
U.K

P.FACH - 100206
44002 DORTMUND
GERMANY

P.BOX - 6800
AGINCOURT
ONT - M1S3C6
CANADA

11,R.SALINGRO
95140, GARGES
FRANCE

P.BOKS - 115
GROURD HAGENEN
0905 - OSLO - 9
NORWAY

**SOOTHTHIRAM [FORMULA -- Tamil]**

**A Socio - Political Journal**
**Issue No 2 ---- February 1994**
**Editor ---- Sooththiran**
**Published by Eelam People's Information Centre**


**மனிதர்களின் தாகம்**

**சமாதானம் ஜனநாயகம் முன்னேற்றம்**

படிப்பகம்